பக்கங்கள்: இருபத்திநான்கு+VIII=32

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 20 சனிக்கிழமை (03.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 128

# தமிழ்க் கூட்டமைப்பு மீது தடையா?

# நாடெங்கும் போராட்டம் வெடிக்கும்!

## கோத்தபாயவை எச்சரிக்கிறது ஜே.வி.பி.





கொழும்பு,ஏப்ரல்3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய பாதுகாப்புச் செயலாளருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அதனையும் மீறிச் செய்தால் மக்கள் விடுதலை முன்னணி போராட்டங்களை முன்னெடுக்கும் - இவ்வாறு எச்சரித்திருக்கிறார் குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய வேண்டுமென பாதுகாப்பு செயலாளர் கூறுகின்றார். அப்படியான ஒருநிலை ஏற்பட்டால் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராகப் போராடும். இனி நாடு பிளவுபடாது. ஜனநாயகத்தை மதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்பட எமக்கு எவ்வித தடைகளும் இல்லை. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய வுக்கு அதில் தலையிட எவ்வித உரிமையும் இல்லை.- என்று அவர் உரத்துக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் 8 பேருக்கு ஆஸியில் விசா

கொழும்பு,ஏப்.3

ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் புகலிடம் கோரிச் சென்ற 8 இலங்கையர்களின் விசா அனுமதி ஏற்கப்பட்டிருக்கிறது என ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜா உரிமை திணைக்களம் தெரிவித்துள்ளது.

எட்டு இலங்கையர்கள் உட்பட மேலும் 41 பேரின் விசா அனுமதி ஏற்கப்பட்டிருக்கிறது எனவும் குடிவரவு மற்றும் பிரஜா உரிமை திணைக்களம் கூறியது என ஏ.பி.சி செய்திச்சேவை செய்தி தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களில் 37 பேருக்கு நேற்று விசா

(24ஆம் பக்கம் பார்க்க)



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு தடை செய்தால் அது எமது விடுதலைப் பயணத்தை விரைவாக்க உதவும்

## மாவை சேனாதிராசா சொல்கிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.3

இலங்கை அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினைத் தடை செய்யுமானால் அச்செயலானது தமிழ் மக்களின் விடுதலைப் பாதையை விசாலித்து விடுதலையை சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழ்மக்கள் தங்கள் அரசியல் சுதந்திரத்தை - அரசியல்தீர்வுத் திட்டம் ஒன்றை - அடைவதனைத் தீவிரப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவதாகவும் அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் செயற்படும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் போன்ற கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். இதனை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஊர்ஜிதம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து மாவை சேனாதிராசாவிடம் கேட்டபோது அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு-

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சட்டபூர்வமான அரசியல் கட்டமைப்பான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் 'சுதந்திரன்' ஏடும் முன்னைய அரசால் தடை செய்யப்பட்டதை நினைவுகூர விரும்புகிறேன்.

இப்போது இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்ய ஏதுநிலை எதுவுமில்லை. நாம் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு முயல்வது அல்லது கோரிக்கை விடுவது தமிழ்த் தேசிய இனத்துக்கு உரித்தான, தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஐக்கியநாடுகள் சபையின் சாசனங்களினாலும் சர்வதேச சட்டங்களினாலும் அந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு மக்களின் பிறப்புரிமை மற்றும் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டது என்பதனை எவரும் மறந்துவிடாலாகாது. இவற்றையும் மீறி அரசியல் லாபங்களுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை -

(24ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குப் பெட்டிகளின் உட்புறத்தில் 'ஸ்ரிக்கர்'

கொழும்பு,ஏப்.3

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது, வாக்குப் பெட்டிகளின் உட்புறத்தில் ஸ்ரிக்கர்கள் ஒட்டுவதற்கு அரசியல் கட்சிகளின் முகவர்கள் மற்றும் சுயாதீனக் குழுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் வெறுமையான வாக்குப் பெட்டியில்

(24ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலுக்கு முன் ஆலோசனைக் குழு; பான் கீ-மூன் மீது அரசாங்கம் சந்தேகம்!

## அவசரப்படுவதுதான் ஏனோ எனக் கேட்கிறது!!

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து பொறுப்புக்கூறச் செய்யும் விவகாரத்தில் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழு ஒன்றை அமைப்பதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் தீர்மானித்துள்ளமையை மீண்டும் கடுமையாகக் கண்டித்துள்ளது இலங்கை அரசு. தேர்தலுக்கு முன்னதாக பான்-கீ-மூன் இக்குழுவை நியமிக்கும் முடிவை எடுக்கவேண்டிய தேவை என்ன என கேள்வியும் எழுப்பியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இச்சந்தேகத்தை எழுப்பி உள்ளதுடன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:- பயங்கரவாதத்தை இலங்கை ஒன்பது

(23ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 நிலக்கரிச் சுரங்கங்களில் விபத்து; சீனாவில் 33 ஊழியர்கள் உயிரிழப்பு!

பீஜிங், ஏப். 03

சீனாவில் லியோயங், ஹன்செங், நான்னிங் ஆகிய இடங்கள் உட்பட நான்கு இடங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் நிகழ்ந்த விபத்துகளில் மொத்தம் 33 பேர் உயிரிழந்தனர். 32 பேர் ஒரு சுரங்கத்துள் சிக்குண்டுள்ளனர். மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

மத்திய சீனாவில் லியோயங் நகரில் சட்டவிரோதமாக நடத்தப்பட்ட நிலக்கரிச் சுரங்கமொன்றில் வாயு உருளைக் கசிவினால் வெடிவிபத்து ஏற்பட்டது.

இதில் 14 ஊழியர்கள் உயிரிழந்தனர். 50 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். மேலும் 32 பேர் சுரங்கத்துக்குள் சிக்குண்டுள்ளனர். இவர்களை மீட்கும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரத்தில் வட மேற்கு சீனாவின் சான்ஸி மாகாணத்தில் ஹன்செங் நகரிலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் வெடி விபத்து ஏற்பட்டு தீப்பிடித்தது. இதில் 9 பேர் பலியாயினர். 17 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தெற்கு சீனாவில் நான்னிங் என்ற இடத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் கார்பன் மோனாக்சைட் கசிவு ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் 4 தொழிலாளர் உயிரிழந்தனர். 23 பேர் மயக்கநிலையில் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 5 பேர் பலியாகினர். இந்த விபத்துகளில் மொத்தம் 32 பேர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் சீனாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இஸ்ரேல் விமானங்கள் காஸா மீது தாக்குதல்; பதிலடி என இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

ஜெரூசலேம், ஏப். 03

ஹமாஸின் ஆட்சிக்குட்பட்ட காஸாவில் நேற்று வெள்ளிக்கிழமை இஸ்ரேல் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் ஏழு ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. இத்தாக்குதல்களில் பல கட்டடங்கள் சேதமடைந்தன என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

ஆயுத தயாரிப்புக் கூடங்களும், சேமிப்புக் கிட்டங்கிகளும் அமைந்துள்ள பகுதியிலேயே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என குறிப்பிட்ட மேற்படி இராணுவம், உயிரிழப்புகள் தொடர்பான எத்தகைய தகவலையும் வெளியிடவில்லை.

காஸாவிலிருந்து வியாழக்கிழமை இஸ்ரேலுக்குள் ஏவப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்குமுகமாகவே வெள்ளிக்கிழமை இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என இராணுவப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

காஸாவிலிருந்து வியாழக்கிழமை ஏவப்பட்ட ஏவுகணை இஸ்ரேலின் மத்திய கரைப் பிரதேசத்திலுள்ள அஸ்க் கெலோனைத் தாக்கியது. எனினும், உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மார்ச் மாதத்தில் மாத்திரம் காஸாவிலிருந்து 20 ரொக்கெட், மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் விவரித்தார்.

காஸா பகுதியை வெள்ளிக்கிழமை ஐந்து ஏவுகணைகள் முதலில் தாக்கின. இதர ஏவுகணைகள், தீவிரவாதிகள் பயிற்சிக்காக பயன்படுத்தும் மையங்களைத் தாக்கின. காஸா நகரிலுள்ள 'சீஸ்' தொழிற் சாலையும் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது என பலஸ்தீனர்கள் தெரிவித்தார்கள்.

இஸ்ரேலிய எல்லைத் தடுப்பு வேலிக்கருகில், கடந்த வாரம் வெடிகுண் டுகளை வைக்க முயன்ற தீவிரவாதிகளை மடக்கிப்பிடிக்க முற் பட்ட இரு இஸ்ரேலிய சிப்பாய்கள் சுட்டுக்கொல்லப்பட் டார்கள்.


நீங்கள் பெறும் பட்டமானது அதியுயர்ந்த வருமானமுடைய தொழில் வாய்ப்புக்களை இலக்காக கொண்டதா?

A/L Yes → BIT
No → FIT → BIT

University of Colombo



பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்தில், தமிழ் மூல விளக்கங்கள், குறைந்த செலவு, சிறந்த பெறுபேறு

BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer(USA), ICDL

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில்

Closing Date 10.04.2010

MCS 324,Palaly Road,Parameswara Junction Web site : Http://www.mcsitcampus.org Call 772395895

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்



இதோ! யாழில் முதன் முறையாக அறிமுகமாகிறது



Digital Xray கதிர்பொருத்திய அதி நவீன கருவி (New Karat Meter) மூலம் உங்களது தங்க நகைகளை எந்தவித சேதாரமும் இன்றி பரிசோதித்து தரநிர்ணய சான்றிதழ் வழங்கப்படுகிறது

சிறிராம் ஜுவல்லர்ஸ்

193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212228334


## 74 வயதில் ஆண் குழந்தைக்குத் தந்தை; ஆண்மை நீடிப்பின் ரகசியம் வாழைப்பழம்

சமீபத்தில் குழந்தை பெற்ற 74 வயது முதியவர், தனது ஆண்மை நீடிக்கக் காரணம் வாழைப்பழம்தான் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்தின் லிங்க்ஸ் மாகாணம் லவுத் என்ற இடத்தில் வசிப்பவர் கெரி பேர்க்ஸ். வயது 74. இவர் சில ஆண்டுகளுக்கு முன் தன்னைவிட 35 வயது குறைந்த பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு 6 வயதில் மகன் இருக்கிறார். இப்போது கடந்த 12 ஆம் திகதி கெரிக்கு 2 ஆவது ஆண் குழந்தை பிறந்தது.

அதன்மூலம், உலகிலேயே அதிக வயதில் குழந்தை பெற்றவர் என்ற சாதனையை கெரி படைத்தார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், ''நான் மிகவும் பெருமைப்படுகிறேன். உலகிலேயே மிக அதிர்ஷ்டசாலி மனிதன் நான் என்று நினைக்கிறேன். 74 வயதில் குழந்தை பெற்றது எப்படி என்று பலர் ஆச்சரியப்படுகின்றனர். சிறுவயதில் இருந்தே வாழைப்பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறேன்'' என்றார்.

''நான் தினசரி 2 முறையாவது சில வாழைப்பழங்களைச் சாப்பிடுவது வழக்கம். உணவில் அதிக உப்பு சேர்க்கமாட்டேன். வீட்டில் சமைத்த உணவுகளையே சாப்பிடு வேன். அதனால், ஆரோக்கியமாக இருக்க முடிகிறது. என் மனைவியின் அன்றாட வேலைகளில் உதவி செய்கிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''என்னைப் பார்த்து பலர் அதிசயிக்கின்றனர். என்மீது நான் அக்கறை கொள்கிறேன். மனதளவில் இளைஞனாக நினைக்கிறேன். இப்போது குடிப்பழக்கம், புகை பழக்கம் கிடையாது. அவற்றை 1980களிலேயே மூட்டை கட்டிவிட்டேன். மனைவியின் சமையலும் எனது ஆரோக்கியத்துக்குக் காரணம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

''எனக்கு அருமையான குடும்பம் இருக்கிறது. இரண்டு குழந்தைகள் உள்ளனர். இனியும் குழந்தை பெறுவேன் என்று நினைக்கவில்லை'' என்ற கெரி ஒரு நிமிடம் நிறுத்தி, ''ஆனால், யாருக்குத் தெரியும்?'' என்றாரே பார்க்கலாம். இனி முருங்கைக்காய் கதை மறந்து வாழைப்பழம் முதலிடத்துக்கு வரவாய்ப்பிருக்கிறது!

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட 3 ஆம் வருட மாணவன்

### பாலசிங்கம் கருணாநிதி

அவர்கள் 02.04.2010 அன்று அகாலமரணம் ஆகிவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

3 ஆம் வருட மாணவர்கள்,
(96349) முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் அனுக்கிரகவதி



மயிலிட்டி தெற்கு, கட்டுவணைப் பிறப்பிடமாகவும் நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் அனுக்கிரகவதி நேற்று முன்தினம் (01.04.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்) அன்பு மனைவியும் சறோஜினிதேவி, கமலாதேவி, விமலாதேவி (கடற்றொழில் திணைக்களம், யாழ்ப் பாணம்), கௌரிபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சிவபாதசுந்தரம் (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), நிற்கந்தா (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் சுரேஷ் (கனடா), ரமேஸ், ஜினேஸ், அசோக்சஞ்சய் (லண்டன்), ஆனந்த அருணேஸ், இராகுலன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சரஸ்வதி, பூபதி, திரௌபதி, செல்வரத்தினம், புனிதவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான அரியநாயகம், பாலசுப்பிரமணியம், ஆனந்த சுந்தரம் மற்றும் சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

621, உமாபதி
பருத்தித்துறை வீதி, நல்லூர். (96348)

தகவல்:
மக்கள், மருமக்கள்


## காணவில்லை

S.T.குறியுடைய சிவப்புநிற பசு மாட்டைக் காணவில்லை. இதைக் கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

30, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0213217987


## மரண அறிவித்தல்கள்

### கனகசபை நடராஜா



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நடராஜா நேற்று (02.04.2010)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்க ளான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் சரஸ்வதி, சண்முகநாதன், காலஞ்சென்ற விஜயரத்தினம் ஆகி யோரின் அன்புச் சகோதரரும் சிறிவதனா (பிரான்ஸ்), சிறிரஞ் சனா( சுவிஸ்), சுதர்சினி (கொழும்பு), சுபாசினி (உயர் தொழில் நுட்பக் கல்லூரி முதலாம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகதேஸ்வரன் (பிரான்ஸ்), இரட்ணராஜா (சுவிஸ்), பிரகாசன் (கொழும்பு) ஆகியோரின் மாமனும் நிவிதா, லிணியா, லவிதா, தக்ஷன், நிதுர்ஷனி, சினோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு இருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய் (96346)

தகவல்:
குடும்பத்தினர்.

### மாரிமுத்து இராசதுரை



ஆனந்தா வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசதுரை நேற்று( 02.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் ராஜினியின் அன்புத் தந்தையும் சுதந்திரகுமாரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், பூமணி, அற்புதம் மற்றும் மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவதாரணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), பானுப்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.04.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய். (96345)

தகவல்:
சுதந்திரகுமார்(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சொல்லும் செயலும் ஒன்றித்தாலே புதுயுகம் படைக்க வாய்ப்புண்டு

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடாநாட்டு மக்களிடம் செய்தி ஒன்றைக் கூறிச் சென்றிருக்கின்றார்.

கடந்த முப்பது வருடங்களாக அனுபவித்த துன்பங்களை மீண்டும் அனுபவிக்க வேண்டுமா அல்லது அச்சம், சந்தேகமின்றி வாழவேண்டுமா என்பதைத் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் முக்கிய தீர்மானமாக இக்கட்டத்தில் எடுக்க வேண்டும் என ஜனாதிபதி ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் கூறியிருக்கின்றார்.

தவிரவும், தமிழ்ப் பகுதிகளில் - குறிப்பாகக் குடாநாட்டில் - செய்யப்படவிருக்கும் உத்தேச அபிவிருத்தி குறித்தும் அவர் அதிகம் பேசியிருக்கின்றார்.

அத்தோடு, கடந்த காலத்தை மறந்து புதிய யுகத்தைப் படைப்பது குறித்தும் அவர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

''நான் தமிழ் மக்களை நம்புகின்றேன். அதுபோல நீங்களும் என்னை நம்பவேண்டும். பகை, அடக்குமுறை, பயம், சந்தேகம் இல்லாத புதிய யுகத்தை நாம் இணைந்து முன்னெடுப்போம்''- என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி.

அவரது பேச்சு தேன் சொட்டுவதாக இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், வெறும் வார்த்தை ஜாலத் தில்- பேச்சு சாகஸத்தில் - வாய்ப்பந்தல் நாடகத்தில் - அர்த்தம் ஏதுமில்லை.

அவரது வார்த்தைகள் அவரது உள்ளத்திலிருந்து வரவேண்டும். அது மட்டுமல்ல, அதுவே தென்னிலங்கையின் உணர்வு வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும்.

பொதுவாக 'இரண்டு கைகள் தட்டினால்தான் ஓசை வரும்' என்பார்கள். ஒரு கை மட்டும் வீசி ஓசை எழுப்ப முடியாது என்பது வாஸ்தவமே.

தமிழ் - சிங்கள மக்கள் தமக்கு இடையேயான பகையுறவை - விரோதப்போக்கை - மறந்து, ஜனாதிபதி எதிர்பார்ப்பது போல புதிய யுகத்தைப் படைக்க வேண்டுமானாலும்கூட, இப்படி இரு தரப்புகளிடையேயும் மறுசாராரை அரவணைக்கும் பண்பியல்பு மலர வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அது ஒரு வழிப்பாதையாக இருக்க முடியாது. இரு வழித்தடமாக இருந்தால்தான் அர்த்தமுள்ள - பயன்மிக்க - ஆக்கபூர்வமான - புரிந்துணர்வு ஏற்பட முடியும் என்பதும் ஏற்புடையதே.

ஆனாலும் இரு இனங்களுக்கு இடையேயும் இதுவரை நிலவிவந்து இறுக்கமடைந்திருக்கும் கசப்புணர்வின் - பகையுறவின் - அடிப்படை, பெரும்பான்மையினம், சிறுபான்மை யினத்தை அநீதியான முறையில் அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தியதின் பெறுபேறு என்பதை சிறுபான்மையினரான தமிழர்கள் இலகுவில் மறந்துவிடமுடியாது. அந்த அடக்குமுறைப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையின் அத்திபாரத்தின்மேல் கட்டப்பட்டதே இந்தப் பகையுறவு.

இரு இனங்களுக்கும் இடையிலான அந்தப் பகையுறவு என்ற கோட்டையைத் தகர்த்து நல்லுறவுப் பூங்காவை அங்கு ஸ்தாபிக்கவேண்டுமானால், அந்த அடக்குமுறைக் கோட்டையின் அத்திபாரமாக இருக்கும் பேரினவாத மேலாதிக்கம் முற்றாக சிதைத்தழிக்கப்பட வேண்டும்.

அதற்கான சமிக்ஞைகள் முதலில் தென்னிலங்கைத் தரப்பிலிருந்துதான் வரவேண்டும். தெற்கின் ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் - கொழும்பு அரசின் நிர்வாக இலாகனைப் பிடித்திருக்கும் - ஜனாதிபதியிடமிருந்துதான் இது முதலில் வர வேண்டும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஜனாதிபதி குறிப்பிடுகின்றமைபோல ஈழத் தமிழர்கள் கடந்த முப்பது ஆண்டு காலமாக துன்ப, துயரங்களையே அனுபவித்து வந்திருக்கின்றார்கள் என்பதும் உண்மைதான். அவை அவர்கள் விரும்பி, ஆசைப்பட்டுத் தேடிப் பெற்றுக் கொண்டவை அல்ல. தமக்கு நீதி, நியாயம்கேட்டு அவர்கள் நடத்திய சத்திய வேள்வியின் - நித்திய போராட்டத்தின் - காரணமாக அவர்கள் எதிர்கொண்ட துன்பியல் பெறுபேறுகள் அவை.

இத்துணை இழப்பின் பின்னரும், அந்த நீதி, நியாயம் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவேயில்லை; கிட்டவேயில்லை. அப்படியிருக்கையில் துன்ப, துயரங்களை எதிர்கொள்ளமுடியாது என்பதற்காக தமது வேணவாவான, நீதியான அபிலாஷைகளை அவர்கள் துறந்தாகவேண்டும் என்று வற்புறுத்த எத்தனிப்பது முற்றிலும் தவறாகும்.

உண்மையில் ஈழத் தமிழினம் கடந்த முப்பது ஆண்டுகளாக அனுபவித்த துன்ப, துயரங்களில் இருந்து அவர்கள் விடுபட வேண்டுமா, அவர்கள் தொடர்ந்தும் துன்ப, துயரங்களை அனுபவிக்காமல் இருக்க வேண்டுமா என்பதைத் தமிழர்களைப் பார்த்து ஜனாதிபதி கேட்பதை விடுத்து, தம்மைப் பார்த்து, தமது தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தைப் பார்த்துக் கேட்பதே பொருத்தமானதாகும்.

பாதிப்புற்ற தமிழர்களுக்கு நீதிசெய்யும் அதிகாரமும் வலுவும் பலமும் அவரிடமே உள்ளன. நியாயப்போக்குடன் சிந்தித்து தமிழர்களுக்கு நீதிசெய்யும் நடவடிக்கைகளை அவராகவே எடுப்பாராயின் தமிழர்களினது மட்டுமல்ல முழு இலங்கைத் தீவினதும் துன்ப, துயரங்களுமே அடியோடு நீங்கிவிட வாய்ப்புண்டு.

ஒரு புறம் தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தைப் பிரித்து சிதைத்தழிப்பது உட்பட மோசமான அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டபடி மறுபுறம் புதிய யுகம் படைப்பது குறித்து சிலாகிப்பதில் அர்த்தமே இல்லை!

# கபிலநாத் கொலையால் அச்சநிலை பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத்தின் இழப்பு மாணவர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இவ்வாறான கொலைகள் இனிமேலும் இடம்பெறாவண்ணம் இருக்க அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

எமது மாணவர் சமூகம் போரினால் பாதிக்கப்பட்டு தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து, தமது கல்வியினை இரண்டு மூன்று ஆண்டுகள் இழந்து தற்போது ஓரளவு சுமுகமான சூழ்நிலையில் தொடர்கின்ற வேளையில் மாணவன் கபிலநாத்தின் இழப்பு மாணவர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

சமகாலத்தில் பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றம் அடைந்து வரும் வேளையில் இடம்பெற்ற இக்கொலை மீண்டும் மக்களையும் மாணவர்களையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இக்கொலையை யார் செய்திருப்பினும் அதை எமது மாணவர் சமூகம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்தச் சம்பவம் கண்டனத்திற்குரியது.

இக்கொலைச் சூத்திரதாரிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைவாகச் செயற்படவேண்டும் என விரும்புகிறோம்.

எனவே இவ்வாறான கொலைகள் இனிமேலும் இடம்பெறாவண்ணம் இருக்க அனைவரும் விழிப்புடன் செயற்படுமாறு வேண்டிக்கொள்கிறோம். மாணவன் கபிலநாத்தின் கொலையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஒ-1)

# பெற்றோரை இழந்த குழந்தைக்கு மானிப்பாய் இந்து சமூகம் உதவி

சண்டிலிப்பாய்,ஏப்.3

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு, வன்னியில் இடம்பெற்ற மோதலின் போது பெற்றோரை இழந்த இரண்டு வயதுப் பெண் குழந்தையின் வாழ்வாதாரத்திற்காக மேற்படி கல்லூரியின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் இணைந்து கல்லூரியில் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த வருடம் வன்னியில் பாதுகாப்பு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற உக்கிரமான மோதலின்போது பெற்றோரை இழந்து அநாதரவான நிலைக்குள்ளான இரண்டு வயதுடைய மிதுஷா என்னும் பெண் குழந்தை பாட்டியாருடன் வாழ்ந்து வருகிறார். இக்குழந்தைக்கு 6 வயதுடைய கிருஷா என்னும் சகோதரியும் உடன் உள்ளார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு தினம் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. இத்தினத்தை முன்னிட்டு கல்லூரி சமூகம் பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

பெற்றோரை இழந்து பாட்டியுடன் வாழ்ந்துவரும் இக்குழந்தையின் பரிதாபகரமான நிலையை அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரிக் குடும்பத்தினரான அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு வாரத்தில் ஒரு தினம் கல்லூரியில் நிதி திரட்டுவதில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த நிதி, நூற்றாண்டு தினமான ஜூலை மாதம் குழந்தையின் பாதுகாவலரிடம் ஒப்படைக்கப் படவிருக்கின்றது.

மேற்படி கல்லூரியின் அதிபர், ஆசிரியர், மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த முன்மாதிரியான செயற்பாட்டைப் பாராட்டியுள்ள பொதுமக்கள் ஏனைய கல்லூரிகளும் இந்த மாதிரியான செயற்பாட்டைப் பின்பற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (1-115)

# ஆளும் கட்சி வேட்பாளர் கைது!

கொழும்பு,ஏப்.3

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சனத் நிசாந்த எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மீன்பிடித்துறை அமைச்சர் நியோமல் பெரேராவின் புதல்வரைத் தாக்கினார் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகள் நிசாந்தவின் செல்வாக்கு மிகுந்த இடமாக இருந்து வருகின்றன. ஆனால் அமைச்சர் நியோமல் பெரேராவும் இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் இதே மாவட்டத்தில் போட்டியிடுகிறார். இந்நிலையில் சனத் நிசாந்தவுக்கும் அமைச்சருக்கும் இடையில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றமை தொடர்பாக பலத்த முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

தனது செல்வாக்கு மிகுதியாகக் காணப்படும் இடங்களில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென அமைச்சருக்கு நிசாந்த எச்சரிக்கையும் விடுத்திருந்தார் என்றும் இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு அமைச்சரின் மகன் தாக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. (சி)

# சுன்னாகத்தில் இன்று 'கலை விலாசம்'

சுன்னாகம்,ஏப்.3

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையால் நடத்தப்படும் 'கலை விலாசம்' மாதாந்தக் கலை கலாசார நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி வி.லம்போதரன் தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் சபையின் செயலாளர் திருமதி சு.முருகநேசன் பிரதம விருந்தினராகவும், நாடகப் பயிற்றுவிப்பாளர் எஸ்.ரி. குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஒ-38)

# இரத்தப் பரிசோதனை அறிக்கை வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப். 26

'அபொட்' நிறுவனம் லாவா வைத்தியசாலையுடன் இணைந்து கடந்த 28ஆம் திகதி குருநகர் சென்.ஜேம்ஸ் பாடசாலையில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் 'தைரொயிட்' நோய்க்கான இரத்தப் பரிசோதனை மேற்கொண்டவர்களுக்கான இரத்தப் பரிசோதனை அறிக்கையை 75, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள லாவா வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிறும் மறுதினம் திங்கட்கிழமையும் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்த மருத்துவமுகாம் எதிர்வரும் 25ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என்று அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ஒ)

## நாளை

பங்குனி 21 04.04.2010
ஞாயிற்றுக்கிழமை
திதி : ஷஷ்டி
பி.இ. 4.35 வரை
நட்சத்திரம் : கேட்டை
மு.இ.10.42 வரை
சுபநேரம் : 09.10-10.10 வரை
[illegible] : [illegible] வரை

# சர்ச்சைக்குரிய பெண் எழுத்தாளர் சராவுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் தொடர்பா?

## பொலிஸார் அவரைத் துருவுகின்றனர்

கொழும்பு, ஏப்.3

இஸ்லாமியராக மாறி இருக்கும் சிங்களப் பெண் எழுத்தாளர் சரா மாலினி பெரேராவுக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்புகள் உண்டா என்ற கோணத்தில் இலங்கைப் பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளார்கள் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையரான மாலினி பெரேரா மிக நீண்டகாலமாக பாஹ்ரெய்ன் நாட்டில் வசித்து வருபவர். சிங்கள பௌத்தரான இவர் இஸ்லாமியராக மதம் மாறி இருக்கின்றமைமூலம் சர்ச்சைக்குரிய ஒருவர் ஆகியுள்ளார். அவர் தாம் இஸ்லாமிய மதத்தைத் தழுவிக்கொண்டமை குறித்து இரு நூல்களை எழுதி உள்ளார்.

அவர் இலங்கையிலிருந்து இந் நூல்களை பாஹ்ரெய்னுக்கு அனுப்பி வைக்க முயன்றபோது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவரின் நூல்கள் பௌத்த சமயத்தை சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய மேற்படி எழுத்தாளருக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்புகள் உண்டா என்ற கோணத்தில் இலங்கைப் பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இஸ்லாமிய தீவிரவாதிகளின் தூண்டுதலால்தான் மாலினி பெரேரா இந்நூல்களை எழுதி உள்ளார் என்று நிரூபிக்கப் பொலிஸார் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் மாலினி பெரேராவுக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையில் எவ்வித தொடர்புகளும் கிடையாது என்று மாலினி பெரேராவின் சட்டத்தரணி லக்ஷன் டயஸ் அறிவித்துள்ளார். அவர் மாலினி பெரேராவின் மதச் சுதந்திரம் இலங்கை அரசினால் அப்பட்டமாக மீறப்பட்டிருக்கிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (சி)

# பாலியல் குற்றச்சாட்டின் கீழ் ஐ.தே.மு.வேட்பாளர் கைது!

கொழும்பு, ஏப்.3

ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுசில் கிந்தெல்பிட்டிய பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகளின் பேரில் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

முன்னாள் ஊடகவியலாளரும் ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளருமான கிந்தெல்பிட்டிய தம்மைத் துஷ்பிரயோகம் செய்தமையுடன் ஆயுதங்களைக் காண்பித்து மிரட்டினார் எனப் பெண்ணொருவர் அளித்த முறைப்பாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுசில் கிந்தெல்பிட்டிய மேலும் பல பெண்களைத் துஷ்பிரயோகம் செய்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிந்தெல்பிட்டிய கைதுசெய்யப்பட்ட வேளை அவரது வாகனத்தில் கடற்படையிலிருந்து தப்பிய நபர் ஒருவரும் பெண்ணொருவரும் காணப்பட்டனர் எனவும் துப்பாக்கியொன்று மீட்கப்பட்டது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலட்சுமணன் தோட்டம்,
தும்பளை, பருத்தித்துறை.

யாழ்.பல்கலைக்கழகத்தின்
25ஆவது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி BA பட்டம் பெற்ற
**திருமதி கஜானனன்**
**தங்கச்செல்வி**
அவர்களை பல்கலையும் பெற்று சீரும்
சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: சோ.பரமேஸ்வரன்
(மாமா, யாழ்ப்பாணம்).
ப.சர்வேஸ்வரன் குடும்பத்தினர்.



## வேலையாள் தேவை

இரும்புப் பிணைச்சல்கள், திறாங்குகள் வேலைகளுக்கு கைறோலிக் பிறஸ் (HYDRAULIC PRESS) மெசினில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்களும், புதிதாக பழக விரும்புபவர்களும் தேவை.

**தொடர்பு:**
**செல்வா ஹாட்வெயார்ஸ்,**
**இல 120, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/566389)


## அறிவித்தல்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2010

நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127ஆ ஆம் பிரிவின்கீழ் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள் (வாக்காளர் அடையாளம்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது வாக்காளரொருவர் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு எட்டு வகையான அடையாள அட்டைகளிலொன்றைச் சமர்ப்பிக்க முடியுமென ஏற்கனவே தேர்தல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்றையேனும் வைத்திருக்காத வவுனியா நலன்புரி நிலையமொன்றில் தற்காலிகமாக வசித்த வாக்காளரொருவர் நலன்புரி நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகப் பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைச் சமர்ப்பித்து வாக்களிக்க ஏற்றுக்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகிறேன். எவ்வாறாயினும் சமர்ப்பிக்கப்படும் அடையாள அட்டை பின்வருமாறு வழங்கப்பட்ட திகதி இலக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

1. 2009.02.15 இற்கும் 2009.12.19 இற்கும் இடைப்பட்ட திகதி.
2. 150,000 இற்கும் 238,326 இற்கும் இடைப்பட்ட இலக்கம்.

(சி/566396)


## ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்ல அனுமதி

01. ஆதரவற்ற வறுமை நிலையிலுள்ள 10 வயது முதல் 17 வயது வரையான பெண் சிறுமிகளையும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களையும் ஏற்றுப் பராமரிப்பதற்கு இவ் இல்லம் தயாராகவுள்ளது.

சிறுமிகள் கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு நன்நடத்தை திணைக்களத்தின் ஊடாகவும், முதியோர் சமூகசேவைகள் திணைக்களத்தின் ஊடாகவும் விண்ணப்பத்தை சமர்ப்பித்து இல்ல அனுமதி பெறமுடியும்.

வசதி படைத்த முதியோர் நேரடியாக ரூபா 10000.00 முற்பணமாகவும் ரூபா 5000.00 மாத மாதம் செலுத்தி நேரடியாக அனுமதி பெறமுடியும்.

02. பாரவூர்திச் சாரதிக்கான பதவி வெற்றிடம்

எமது இல்லத்தின் பேருந்திற்குப் பாரவூர்திச் சாரதி உடனடியாகத் தேவையாகவுள்ளது. அனுமதிப் பத்திரமுள்ள அனுபவமுடையவர்களும் இ.போ.ச.வில் கடமையாற்றிய இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம். தொண்டூழியம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 16.04.2010.

**ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்லம்**
**தர்மகர்த்தாக்கள் சபை, வதிரி, கரவெட்டி.**

(சி/566370)



## உடன் தேவை

சாரதிகள்/விநியோக வாகன உதவியாளர்கள், காவலாளி, சமையலாளர்

எமது நிறுவனத்திற்கு சாரதிகள் (சாரதி அனுமதிப் பத்திரம் A வைத்திருப்பவர்கள்), விநியோக வாகன உதவியாளர்கள் தேவை. நாளை (04.04.2010) ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

அம்பிகை களஞ்சியம்,
304, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212222511

(சி/566394)


## யாழ்.மாவட்ட தெங்குப் பயிர் செய்கையாளர்களுக்கான அறிவித்தல்

தென்னந்தோட்ட புனரமைப்புக்கும் மீள் நடுகைக்குமான வழிகாட்டல் அறிவுரைகள் திருந்திய செய்கை என்பன பற்றி தென்னை ஆராட்சித் தாபனம், லுணுவிலவில் 25வருட முகாமைத்துவ சேவை அனுபவம் கொண்ட உத்தியோகத்தரினால் தங்கள் தேவைக்கேற்ற ஆலோசனை வழங்கப்படும். இவை பெரும் தோட்டக்காரர்களுக்கும் சிறு தோட்டக்காரர்களுக்கும் பொருந்தும்.

விரும்பியோர் விவரங்களுக்கு கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்
Kleenwell (Pvt) Ltd, 866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே. 0212222849

(சி/566390)

## 'மணிக்கிராம்' சேவை 35 பேருக்குப் பரிசில்

யாழ்ப்பாணம், ஏப். 03.

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் கடந்த மாதம் (மார்ச் 22-26) இடம்பெற்ற 'மணிக்கிராம்' வாரத்தில் வெளிநாடுகளில் இருந்து 'மணிக்கிராம்' சேவையில் பணம் பெற்ற 35 பேருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வங்கிக்கிளையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மணிக்கிராம் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வைத் தெற்காசிய பிராந்திய பிரதிநிதி கௌதம் கல்ரோ ஆரம்பித்து வைத்தார். (ஒ-207)

## 38 பெண்களுக்கு சுயதொழில் உதவி

யாழ்ப்பாணம். ஏப். 03

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 38 பெண்களுக்கு அறவழி போராட்டக் குழுவினர், மகேஸ்வரி நிதிய அனுசரணையுடன் சுயதொழில் உதவியின் முதற்கட்டக் கொடுப்பனவை வழங்கியுள்ளனர்.

கைதடி - நுணாவில் அறவழி நிலையத்தின் நிலையத் தலைவர் வ. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரான்ஸில் வதியும் கோவை நந்தன், லண்டனில் வதியும் செல்வி எஸ். அங்கயற்கண்ணி, நோர்வேயில் வதியும் கே.எஸ்.நமசிவாயம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு கொடுப்பனவை வழங்கினர். (ஒ-207)

## எழுத்தறிவூட்டல் கலந்துரையாடல்

நவாலி, ஏப்.03

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் திறந்த பாடசாலை அமைப்பது சம்பந்தமாகவும், எழுத்தறிவூட்டல் சம்பந்தமாகவும் அதிபர் என்.சிவகடாட்சம் தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. சிவசாமியின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் என்.நிசாந்தன், அப் பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களை வழங்கினர். (1-100)

## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.03

யாழ்.மத்திய கல்லூரி, தேசிய பாடசாலையான புத்தளம் டமிசார மகா வித்தியாலயம் ஆகியவற்றின் 15, 17, 19 வயதுப் பிரிவுகளுக்கு இடையிலான சிநேக பூர்வ கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

திங்கட்கிழமை கரப்பந்தாட்டம் தொடர்பான பயிற்சி முகாம் இடம் பெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்க்ள தெரிவித்தனர். (1-23)


## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாவட்டத்தில் எந்தப் பகுதியிலாவது பிரபல நிறுவனம் ஒன்று பழம் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வீட்டுடன் ஐந்து பரப்புக் காணி வாடகைக்குத் தேவை.

**தொடர்பு: 0773865475**



## வீடு விற்பனைக்கு

கட்டப்பிராய் வட்டக்குளத்தடி ஒழுங்கையில் 1½பரப்புக் காணியில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக் குண்டு. (முன்பு Dr. அருணா இருந்த வீடு)

தொடர்புகளுக்கு: Mrs. X.வாசுகி,
0652224410, 0771831276

(96332)



## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் சேவாலங்கா நிறுவனத்துக்கு அருகில் 5பரப்பு 11குளி கிணற்றுடன் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0718085145, 0777751926,
0212227491

(96337)



German, Swiss, Deutsch மொழி வகுப்புக்கள் வருகிற வைகாசி மாதம் ஆரம்பமாக உள்ளன.

தொடர்பு: Miss. Kajenthini.S
55, Somasundram Lane,
Chundukuly, Jaffna. (யாழ்.பரி யோவான் அருகாமையில்)
T.P. 0771604823

(96329)


## மரண அறிவித்தல்கள்



### திருமதி யமுனாவதி நடராஜா

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா யமுனாவதி நேற்று முன்தினம் (01.04.2010) வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் நடராஜாவின் அன்பு மனைவியும், கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம்-சிவபுஸ்பம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், கச்சாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், சுதானந்தன், திருக்கஜமுகன், தயாளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஸ்தூரியின் மாமியாரும், பிறேமாவதி (ஜேர்மனி), சிவதாசன் (லண்டன்), கிருஷ்ணதாசன் (லண்டன்), மோகனதாசன் (லண்டன்), சுகுணாவதி (லண்டன்), ரேவதி (கல்வியங்காடு), தேவகி (கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சீராளன், சுதா, திலகவதி, துசியந்தி, சர்வேஸ், சிவபாலன், ஹர்ஷன், கணபதிப்பிள்ளை, காசிப்பிள்ளை, காசிநாதன், தவராஜா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, குமாரசாமி, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.04.2010) புதன்கிழமை Friedhof Spadener Hohe, Spadener Str-130, 27578, Bremer Haven, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Ginster weg 15,
27616 Bokel,
Germany,
T.P.: 0049 47485500 (96333)

தகவல்
க.சுப்பிரமணியம் (தந்தை)
T.P. : 021 373 4644

### நடராசா ஸ்ரீ ஆனந்தராஜன்

(பிரபல சிற்பக்கலைஞர்)



வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா ஸ்ரீஆனந்தராஜன் நேற்று (02.04.2010) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் நடராசா (பத்தர்) மற்றும் அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சாரி-ராஜலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவிகாவின் அன்புக் கணவரும், ரேணுஜா, கிருஷாந், நிவாஸ் (அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜமோகன், ராஜபாலன் (அமரர்), குகனேஸ்வரன் (அமரர்), ராஜமாலா (அமரர்), ராஜயோகி, சுந்தரலட்சுமி, ஆனந்தபவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயன், ரகுநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்தாக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/2, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (96343)

தகவல்:
நா.ரவீந்திரன்
(மைத்துனர்).

### கந்தையா வேலுப்பிள்ளை (பொட்டர்)



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை 01.04.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாராயணபிள்ளை- நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ரங்கநாயகி, முத்துத்தம்பி, செல்லமுத்து, கந்தையா, ஐயாக்குட்டி, தங்கச்சிப்பிள்ளை மற்றும் செல்லாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மாவதி (கனடா), சிவஞானம் (ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி), சிவசோதி (கனடா), பத்மலோஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கவேலாயுதம் (கனடா), சத்தியதேவி (ஆசிரியர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), கிருஷ்ணகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மருஷன், கவீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2010) சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வே.சிவஞானம்,
இராஜவீதி, தோப்பு,
அச்சுவேலி. (சி/566391)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ்.கிளை அலுவலகம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்தநிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா ஆகியோர் அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதற் படத்திலும், முதலீட்டு சபைத் தலைவர் தம்மிக்க பெரேரா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முறையே இரண்டாம் மூன்றாம் படங்களிலும்-

இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உரையாற்றுவதை முறையே இரண்டாவது வரிசைப் படங்களிலும் காணலாம்.

(படங்கள்: ரட்ணம்)



# முதலீட்டுச் சபை யாழ்.அலுவலகம் மூலம் வடமாகாணமே அபிவிருத்தியடையும் வாய்ப்பு

## திறப்பு விழாவில்-சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா

யாழ்ப்பாணம்,ஏப்.3

வடபிராந்தியத்தினதும் சிறப்பாக யாழ்.குடாநாட்டினதும் முதலீட்டு வாய்ப்புகளை இனம்கண்டு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து வழிப்படுத்துவதுமுதலீட்டுச் சபையின் யாழ். அலுவலகத்தின் பிரதான நோக்கமாகும்.

இவ்வாறு முதலீட்டுச் சபையின் யாழ். அலுவலத் திறப்பு விழாவையொட்டி விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்திற்கு அமைவாக இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ்.கிளைக் காரியாலயம் கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் தம்மிக்க பெரேரா உரையாற்றுகையில் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பிழையான தகவல்களைப் பரப்புவதை விடுத்து, இலங்கையில் பெருமளவில் முதலீடுகளை ஆரம்பித்து இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு உதவவேண்டும்.

தெற்கில் போலன்றி யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்களைத் திரட்டுவது இலகுவாக இருக்கும் எனக் கருதுகிறேன். அதனால் தொழிற் துறைகளில் முதலீடு செய்து அவற்றை நிர்வகிப்பது இலகுவாக இருக்கும். இக்கிளை அலுவலகம் யாழ்ப்பாணத்திற்கும் மட்டுமல்லாமல் வடமாகாணம் முழுவதற்குமான அபிவிருத்திக்கு பெரிதும் உதவும்.

அதற்கு நிறைய வாய்ப்புகளும் உண்டு - என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்-ஜனாதிபதியின் பணிப்பின் பெயரிலேயே இந்தக் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்படுவதாகவும் மூன்று ஆடைத் தொழிற்சாலைகளை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு ஜனாதிபதி கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் இதன் மூலம் சுமார் ஐயாயிரம்பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள் என்றும் கூறினார்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா ஆகியோரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் உள்ளிட்ட இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மின்சார சபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-க)

## வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி, ஏப்.3

மட்டுவில் வடக்கு பனையடிப் பிள்ளையார் கோயில் வீதி 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் செப்பனிடப் பட்டுள்ளது.


நீண்ட காலத்தின் பின்னர் இந்த வீதியுடன் இணைந்த முதலியார் வயல் வெளி வீதியும் திருத்தப்பட்டுள்ளது. வீதிகள் புனரமைக்கப்பட்டது குறித்து இப்பிரதேச வாசிகள் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் உட்பட மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ஒ-131)

## 'டான்' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வரதர்!

யாழ்ப்பாணம், ஏப்.3

'டான்' தமிழ் ஒளி தொலைக்காட்சியில் இன்று சனிக்கிழமை இரவு இடம் பெறும் இந்த ஒளிபரப்பில் ''அரசியல் களம்'' நிகழ்ச்சியில் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சரும், பத்மநாபா ஈ.பி. ஆர்.எல்.எவ் தலைவர்களில் ஒருவருமான அ.வரதராஜப்பெருமாள் கலந்துகொள்ள இருக்கிறார்.

இரண்டு மணிநேரம் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் அவர் மக்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க உள்ளார். (ஒ)




# பிரசார நடவடிக்கைகளுக்கு வேலையற்ற பட்டதாரிகளை அரச சார்புக் கட்சி ஒன்று ஈடுபடுத்துகின்றது என விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் எனக்கூறி வேலையற்ற பட்டதாரிகளை அழைத்த அரசசார்புக் கட்சி ஒன்று, தம்மைத் தமதுகட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்றது என்று பட்டதாரிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:-

பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் என அழைத்த அரசசார்புக் கட்சியினர் தம்மைத் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். வேறு வழியில்லாமல் தாம் அதற்கு இணங்க வேண்டியநிலையில் உள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை -

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கென ஒவ்வோர் உதவி அரசசெயலர் பிரிவிலும் ஐந்து பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றே மேற்கொள்கின்றது. இவர்களும் அதிகாலையில் தாம் பணிபுரியும் உதவி அரச அலுவலகங்களுக்குச் சென்று கையொப்பம் இட்டு விட்டுப் பின் குறித்த கட்சியினரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குச் செல்கின்றனர்.

அத்துடன், ஆசிரிய உதவியாளர்கள் என அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களும் தேர்தல் பிரசாரங்களுக்கென குறிப்பிட்ட அரசியல் கட்சியினரால் பயன்படுத்தப்படுகின்றனர் என ஆசிரியர் தரப்பிலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஓர் அரசியல் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச திணைக்களப் பணியாளர்களைப் பயன்படுத்துவது எந்தவகையிலும் நியாய மற்றதும் முறைகேடான செயலும் ஆகும். இந்த விடயத்தில் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி, தேர்தல் ஆணையாளர் ஆகியோர் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பட்டதாரிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் கடைகளைத் திறந்து வையுங்கள் !

## புத்தாண்டையொட்டி வணிகர் கழகம் அறிவிப்பு

புது வருடப்பிறப்பை முன்னிட்டு நாளை ஞாயிறு முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையுள்ள விடுமுறை நாள்களில் சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து பணிகளை மேற்கொள்ள முடியுமென யாழ்ப்பாண வணிகர் கழகத்தலைவர் இ.ஜெயசேகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; எதிர்வரும் தமிழ் சிங்களப் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நாளை ஞாயிற்றுற்றுகிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரையுள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்ய முடியும்.

அதேவேளை விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப் படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.(ஒ-16)



அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர் பரமேஸ்வரி தனபாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும் பிரதம விருந்தினரான இந்துக் கல்லூரி அதிபர் கே.கணேசராசா மாணவருக்கு கற்றல் உபகரணப் பொதியை வழங்குவதையும்- சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் அருகில் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: கொழும்புத்துறை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புசல்லாவை பகுதி நகைக்கடையில் ஆயுததாரிகளால் பல லட்சம் ரூபா கொள்ளை

கண்டி, ஏப். 3

புசல்லாவை பகுதி நகைக்கடை ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் சிலர் அங்கிருந்து பல லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுட்டுச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த 31ஆம் திகதி சுமார் 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

வாகனமொன்றில் வந்த இந்த ஆயுததாரிகள் நகைக்கடைக்குள் புகுந்து உரிமையாளரைத் தாக்கிவிட்டு பணத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டு வாகனத்தில் ஏறித்தப்பிச் சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.


சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சி)


## பாசமிகு யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!

எங்கள் அன்பிற்கினிய தோழரும், எமது கட்சியின் தலைவருமான தோழர் ஸ்ரீதரன் அவர்கள் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், சுயநிர்ணய அதிகாரங்களைப் பெறுவதற்காகவும் தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் தமிழர்கள் மத்தியில் சமத்துவம், சகோதரத்துவம் நிலைபெற வேண்டும் என்பதற்காகவும் கடந்த 35 ஆண்டுகளாக பல தியாகங்களைச் செய்து மக்களுக்காக விடாது உழைத்து வருபவர். கொண்ட கொள்கைகளில் உறுதியான தோழர் ஸ்ரீதரன் அவர்கள் மரணத்தின் வாயில்களைக்கண்டு கடந்து வந்தவர். பேராபத்துக்களின் மத்தியிலும் மக்களுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அவர் தமது கட்சித் தோழர்கள் மத்தியில் மட்டுமல்லாது ஏனைய அணிகளின் உறுப்பினர்கள் மத்தியிலும் எப்போதும் கண்ணியமாகவும் கனவானாகவும் நடந்து வந்துள்ள பண்பாளர். பணத்துக்காகவோ, பதவிகளுக்காகவோ யாரிடத்திலும் விலைபோகாத உறுதியான நெஞ்சமும் நேர்மையான நடத்தையும் கொண்ட போராளி அவர்.

எதிர்வரும் தேர்தலில் உங்கள் அரிய வாக்குகளை அள்ளி வழங்கிஅவரை உங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யுங்கள்.

பத்மநாபா ஈழ மக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் மெழுகுதிரி சின்னத்துக்கு நேரே புள்ளியிட்டு தோழர் சிறிதரன் அவர்களின் இலக்கமான 6 இற்கு நேரேயும் உங்கள் புள்ளடிகளை இடுங்கள்.



**மெழுகுதிரியே எங்கள் சின்னம்**

**ஸ்ரீதரனே எங்கள் பிரதிநிதி**

X 6

ஸ்ரீதரன் (தோழர் சுகு)

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



## நாடாளுமன்றத் தேர்தல் - 2010.04.08

**யாழ்.மாவட்டம் - முதன்மை வேட்பாளர்**

**மாவை சேனாதிராசா**

எங்கள் முதல் தெரிவு



X 8

தந்தை செல்வா வழிவந்து,

சிங்களச்சிறை பல சென்று தமிழினத்தின் விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த ஒரே வேட்பாளன் மாவை சேனாதிராசா அவர்களையே ஆதரிப்போம்.

வல்வை திரு.திருமதி நகுலசிகாமணி

கனடா - வல்வை ஆவணக்காப்பகம்.

(இ/566383)


## முன்பள்ளிகளுக்கு 'பிளாஸ்ரிக்' வாளிகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் ஆகியவற்றுக்கு வழங்கவென ஒரு தொகுதி 'பிளாஸ்ரிக்' வாளிகள், தண்ணீர் 'கான்கள்' மற்றும் கைகழுவும் பாத்திரங்கள் ஆகியவற்றை 'யுனிசெப்' நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

நாளை ஞாயிறு நகரசபை அலுவலகத்தில் இவற்றைப்பெற்றுக்கொள்ளுமாறு நகரசபை செயலாளர் செல்வி வீ.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (ஒ-207)


## ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.

சாக்கடையாய் போகின்ற அரசியற் பண்பாட்டை புதிய அரசியற் பண்பாடாக மாற்றி
தமிழ்ப் பெண்களின் வாழ்வில் ஒரு பெரும் முன்னேற்றம்.
தமிழ்த்தேசத்தின் வாழ்வில் ஒரு விடிவு காண்போம்.

**2010 ஏப்ரல் 08**
**நாடாளுமன்றத் தேர்தலில்**

பத்மினி சிதம்பரநாதன்

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக.
சமூக பண்பாட்டுச் செயற்பாட்டாளராகச் செயற்பட்டு வந்தவர்.
விருப்பங்களை வெளிப்படுத்தவும்,
நிறைவேற்றவும் முடியாமல் ஒடுக்கப்பட்டிருந்த
மக்களை விடுவிப்பதற்கான செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தியவர்.

கல்வியை இடைநடுவில் கைவிட்டோரை மீண்டும் கல்வியில் ஈடுபடுத்தியும், கல்வியில் ஈடுபடுகையில்
சோர்வுற்றிருந்தோரை ஊக்கப்படுத்தியும் கல்வியில் சாதனையாளர்களாக்கியமை,
இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வேலைசெய்து இடம்பெயர்ந்தோர் குரலை வெளிக்கொணர்ந்தமை,
முடங்கிக்கிடந்த பெண்களை ஊக்கப்படுத்தி தொழில்முயற்சியாளர்களாக்கியமை,
கிராமங்களில் ஒற்றுமையை ஏற்படுத்திப் பிரச்சினைகளைக் கிராமத்தவரே ஒன்றுகூடித் தீர்க்கும்
மனநிலையை ஏற்படுத்தியமை,
இராணுவ ஒடுக்குமுறையுள் சிக்கிப் பயந்து ஒடுங்கிக் கிடந்தவர்களை
விடுவித்து அவர்களது குரலை வெளிக்கொணர்ந்தமையும், இது பின்னர்
பொங்குதமிழாகப் பரிணமிக்க வழிவகுத்தமையும் செயற்றிட்டங்களின் பயன்கள்.



**பத்மினி சிதம்பரநாதன்**
B.A(Hons),P.G.Dip.in.ed

இச்செயற்றிட்டங்களை மேலும் பரந்த அளவில் முன்னெடுக்க அரசியல் அதிகாரம்
தேவைப்பட்டபோது 2004இல் இவர் நாடாளுமன்றத் தேர்தலில் பிரவேசித்து மக்களின் பெருமளவு
ஆதரவோடு நாடாளுமன்ற உறுப்பினரானார். இதன்பின் தனது நாடாளுமன்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி
இனங்காணப்பட்ட கிராமங்களில் முன்னேற்றத்தையும், பெண்களுக்கான சிறுகைத்தொழில்
முயற்சிகளையும் ஏற்படுத்தினார். தமிழ்மக்களை அணிதிரட்டி தமிழ்மக்களின் குரலைச்
சிறீலங்காப் நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்குகளிலும் எடுத்துரைத்தார்.

மக்கள் அரசியலை முன்னெடுத்துத் தமிழ் அரசியலில் ஒரு
புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கு உங்கள் ஆதரவைக் கோருகின்றோம்.


தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

X 5

இணையத் தேடலிற்கு
http://spathmini.com
(இவரது பணிகள் பற்றிய படங்களைப் பார்வையிடலாம்)





7

X 7

கிருஷ்ணபிள்ளை
**ஸ்ரீ சரவணபவான்**
சட்டத்தரணி

இலங்கையை ஆசியாவின் அதிசயம் ஆக்குவோம்

வளமான வாழ்வுக்கு
சமாதான சக வாழ்வு

பொதுத் தேர்தல் - 2010
தேர்தல் மாவட்டம் - யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில்

# வைத்தியர் ஒருவர் மட்டுமே பணியில்; நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருப்பு

ஊர்காவற்றுறை, ஏப்.3

ஊர்காவற்றுறை ஆதார வைத்திசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்குச் செல்லும் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்ட வைத்தியசாலை என்ற தரத்தில் இருந்த இந்த வைத்தியசாலை அண்மையில் ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி அவசர சிகிச்சைப் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

வெளிநோயாளர் பிரிவில் நூற்றுக் கணக்கானவர்கள் தினசரி சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களைக் குறிப்பிட்ட ஒரு வைத்தியர் மட்டுமே பார்வையிட்டு வருவதால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் நோயாளர்களை ஒழுங்குபடுத்துவதற்காக வைத்தியசாலை நிர்வாகம் இலக்க அட்டைகளை வழங்கி வருகின்றது.

ஊர்காவற்றுறையில் இருந்து வன்னிப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்த மக்கள் தற்சமயம் தத்தமது பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி அனலைதீவு,எழுவைதீவு பிரதேச மக்களும் ஊர்காவற்றுறை ஆதாரவைத்திய சாலையையே நாடிவருகின்றனர். இதுவே வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இங்கு டெங்குத் தாக்கமும் ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு மேலதிகமாக வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-21)




# யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சில வீதிகளுக்கு புதிய பெயர்கள்

## மக்கள் அபிப்பிராயம் கேட்கிறார் மேயர்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட சில வீதிகளுக்குப் புதிய பெயர்கள் சூட்டப்படவுள்ளன. இதற்கு பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை யாழ். மாநகர சபை எதிர்பார்த்திருப்பதாக நகர மேயர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

அதில் பருத்தித்துறை வீதியையும் சங்கிலியன் வீதியையும் இணைக்கும் வீதிக்கு 'பண்டாரமாளிகை வீதி' எனும் பெயரும், கோயில் வீதியிலிருந்து துர்க்கா மணிமண்டபத்துக்குத் தெற்குப்புறமாகச் செல்லும் சிறிய வீதிக்கு 'செல்வநாயகம் சதுக்கம்' எனும் பெயரும் சட்டநாதர் கோவில் வீதிக்கு அடுத்துவரும் ஒழுங்கைக்கு 'ஒட்டக் கூத்தர் வீதி' எனும் பெயரும் சூட்டப்படவுள்ளன.

எனவே பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் '' ஆணையாளர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மேயர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## சிலுவைப் பாதை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப்.3

தென்மராட்சி பிரதேச கத்தோலிக்க் தேவாலயங்களின் ஏற்பாட்டில் வீதிகளில் பெரிய வெள்ளியை முன்னிட்டு சிலுவைப் பாதை ஊர்வலமாகச் சென்றனர்.

நேற்றுக் காலை 6.30 மணிக்கு சாவகச்சேரி சந்தியிலிருந்து கச்சாய் வீதி வழியாகவும், நாவற்குழி அற்புத அன்னை தேவாலயத்தில் இருந்து கண்டி வீதி கேரதீவு வீதி ஊடாக தச்சன் தோப்பு புனித அந்தோனியார் தேவாலயம் வரையும் சிலுவைகளைச் சுமந்தபடி மக்கள் சென்றனர். (ஒ-207)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குபற்றவுள்ளதால் அனைத்து சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# தென்னிலங்கை கூலிப்படைகளால் யாழ். மண்ணில் சமூக,கலாசாரச் சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன

## ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஏப்.3

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் பலர் தங்களுடன் கொண்டு வந்துள்ள தென்பகுதி குண்டர் கும்பலால் யாழ். மாவட்டத்தில் பல்வேறு சமூக மற்றும் கலாசார சீரழிவுகள் ஏற்பட்டு வருவதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வேட்பாளருமான சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

தீவகப்பகுதி பொது மக்களுடன் நேற்று நடந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த உதயன்:-

தங்களது சுவரொட்டிகளை ஒட்டுவதற்காகவும்,ஏனைய கட்சியினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வன்முறைகளில் ஈடுபடுத்துவதற்காகவும் பல வேட்பாளர்கள் தென்பகுதியின் சேரிப் பகுதிகளில் இருந்து கூலிப்படைகளை யாழ். மாவட்டத்திற்கு கொண்டு வந்துள்ளனர் என்றும் குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் பல சுயேச்சைக்குழுக்களைச் சார்ந்து இந்தக் கூலிப்படைகள் தங்களது சமூக மற்றும் கலாசார சீரழிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மது உட்படப் போதைப்பொருள்களை உட்கொண்டுள்ள நிலையில் மேற்படி கூலிப்படைகள் இரவு நேரங்களில் பல்வேறு சமூக கலாசார சீரழிவுகளை யாழ். மண்ணில் உருவாக்கி வருவதாகவும் எனவே எமது மக்கள் குறிப்பாக இரவு நேரங்களில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மையில் யாழ். மாநகரசபை முதல்வர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கூட மேற்படி குண்டர்கள் கூலிப்படைகளின் பின்பலத்தைக் காணக் கூடியதாக இருந்ததாக தெரியவந்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ள அவர், எமது மண்ணில் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ஆதரவு இல்லாததன் காரணமாகவே இவர்கள் தென் பகுதியில் இருந்து கூலிப்படைகளைக் கொண்டு வந்துள்ளனர் என தெரிவித்தார். (ஒ)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



1991 செப்ரெம்பரில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கூறியது:

"We are two Nations in one Conutry"

"நாங்கள் இரு தேசியம் ஒரு நாடு" என்பதாகும்.

இந்தக் கருத்தை அன்றும், என்றும் கடைப்பிடிப்பவர்

**சி.வீ.கே.சிவஞானம்**

(முன்னாள் மாநகரசபை ஆணையாளர்)

X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 (X) | 12 | தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | | | | | | | |

(சி/566349) எப்பொழுதும் மக்களுடன் இந்த மண்ணில்



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

கடமைகளுக்காகத் தன்னைக் கருவியாக்கியவர்....

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B

(சிரேஷ்ட சட்டத்தரணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

X | 1 (X)




தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

(இலங்கை தமிழரசுக்கட்சி)



## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

தகைமை உடையவர்களையே எமது பிரதிநிதிகளாக்குவோம்





2

ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் ஸ்கந்தவரோதயா ஆசிரியர் குழாத்தின் தலைமகன் முன்னாள் ஆங்கில ஆசிரியர் A.G.N. விஜயரத்தினம் B.A.(London) (முன்னாள் ஆங்கில ஆசிரியர்-சுழிபுரம் விக்ரோறியா, காரை. இந்து) அவர்களுடைய மகன் கலாநிதி.கென்னடி விஜயரத்தினம் அவர்களை முற்போக்கான கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆதரிப்போம்.

ஸ்கந்தா பழைய மாணவர்கள், காரைநகர்.

எளிமை, தகைமை, அர்ப்பணிப்பு.

**கலாநிதி. கென்னடி விஜயரத்தினம்** M.A, Ph.D)

(முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்-கிழக்குப் பல்கலை)

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

X | 7 (X)

(சி-48644)

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்



# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010


TNA

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA

அருந்தவபாலன் அவன் அப்படித்தான்
அன்றும் அவன் அப்படித்தான்
இன்றும் அவன் அப்படித்தான்
கொள்கையில் மலையவன்
குணத்தில் பெரியவன்
அறிவில் மேலவன்
ஆற்றலில் ஆதவன்
மனதில் எளியவன்
மானத்தில் உயிரவன்
துணிவில் முனியவன்
பணிவில் பனியவன்
கனிவில் இனியவன்
பரிவில் உறவினன்

அளித்திடுவோம் நம் வாக்குகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திரு.க.அருந்தவபாலன் அவர்களுக்கே!

சான்றளிப்போர்:
கூடிக்கற்ற தமிழ் உணர்வுமிக்க உறவுகள்



**திரு.க.அருந்தவபாலன்**

{B.A (Hons), MEd, PGDE, PGDEM}

அதிபர்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 (X) | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## ஒலிபெருக்கிப் பாவனையை சிவில் சட்டங்கள் கவனிக்குமா?

தென்மராட் சியில் அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கிய மரக்காலைகள் சீல் வைப்பு, கேபிள் தொலைக்காட்சி வழங்குனர்கள் பதிவு செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுப்பு என்ற பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும் போது சட்டங்களின் ஆட்சி மீள வருகின்றது என்பது தெளிவாகிறது.

அதுபோல ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதிப்பத்திரம் பெறல் வேண்டுமெனக் கட்டாயச் சட்டத்தை மீள நிலைநாட்டுங்கள். நான் காணி வாங்கி வீடு கட்டியபோது அயலில் நாலு திசையும் கோயில்கள். தெய்வீக மணம் கமழும் சூழலென சந்தோசப்பட்டேன். ஆனால் நாலு திசையும் ஒலிபெருக்கிகள் அலறியடித்து வருடத்தின் பெரும்பாலான நாள்களும் என் நிம்மதி, நித்திரை தொலைந்து போகிறபோது படும் கவலை சொற்களில் வடிக்க இயலாது.

வாசிகசாலை கட்டட நிதிக்கு இசை நிகழ்வுக்கு ஒலி பெருக்கிப் பாவனைக்கு அனுமதிப் பத்திரம் வழங்க அரச உத்தியோகத்தரின் பிணை கேட்டனர் பெருமனதுடன் கையொப்பம் வைக்கச் சென்றேன். பொலிஸார் ஒரு மணிநேரமாக எத்தனை கேள்விகள், துருவித்துருவி விசாரணைகள். ஆலயங்களுக்கு மட்டும் 24 மணி நேரமும் 365 நாள்களும் ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரம் கொடுத்துவிட்டனரோ தெரியவில்லை.

'கோயில் உள்ள ஊரில் குடியிருக்க வேண்டாம்' என நான் பலருக்குக் கூறுமளவு நிலைமை வந்துவிட்டது.

சிவில் சமூகத்தை நிலைநிறுத்தும் புதிய ஒழுங்கில் சட்டத்துறையும், பொலிஸ் துறையும் ஆலயங்களின் ஒலிபெருக்கிப் பாவனை தொடர்பாக இறுக்கமான நடைமுறைகளை ஏற்படுத்தி உதவினால் என்ன?

தென்மராட்சி. இறைபக்தன்.

## நீரிழிவு நோய் விழிப்புணர்வு; கிராமங்களிலும் நடத்த வேண்டும்

எமது யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிமார்கள், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர், மருத்துவ பீடத்தினர் அனைவரதும் முயற்சியால் அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நீரிழிவு நோய் தொடர்பான கண்காட்சியும், கருத்தரங்கும், வைத்திய ஆலோசனைகளும் யாழ். குடாநாட்டிலே வாழும் நீரிழிவு நோயாளர்களுக்கும், ஏனையோருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இது ஒரு சாதாரண விடயமல்ல. அனைவரையும் பாதுகாக்கும் ஒரு முன்னோடி நடவடிக்கை என்றே கூற வேண்டும்.

இதில் தொடர்புடைய அனைத்துப் பெருமக்களுக்கும் எனது சார்பாகவும், எனது கோப்பாய் கிராமத்து மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்வுகளை கிராமப்புறங்களிலும் நடத்தி மக்களை இந் நோயிலிருந்து காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கந்தசாமி கோயிலடி,
கோப்பாய்.

ந.கனகலிங்கம்
சமூகசேவையாளர்.

## தொலைபேசிகளால் ஏற்படும் தொல்லை

தற்போது கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதுபோல் கைத்தொலைபேசி புரட்சி யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டு வருகின்றது. கதைப்பதற்கு மாத்திரம் இதனைப் பயன்படுத்தினால் தவறில்லை. ஆனால் இங்குதான் விபரீதம் ஆரம்பமாகின்றது. கைத்தொலைபேசி மூலம் வீடியோ, படம் எடுத்தல் குறிப்பிட்ட இலக்கத்திற்கு அழைப்பு எடுத்து ஆண், பெண் என்று பாராது கண்டபடி ஏசுதல், பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவிகளின் வருகைக்காக வீதியில்- சந்தியில் காத்திருக்கும் இளைஞர் கும்பல் (இவர்களில் சிலர் பாடசாலை செல்லும் மாணவர்கள்) ஆளுக்கு ஆள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் கைத் தொலைபேசியில் உள்ள பாடல்களை ஒலிக்கவிட்டு பெரிய தொந்தரவுகளைக் கொடுத்து வருகின்றனர் (இவர்களுக்கு தங்களைத் தண்டிக்க வேண்டியவர்கள் எவரும் இல்லை என்ற வீராப்பு) இதுபற்றி பொலிஸுக்குச் சொன்னாலும் எதுவும் நடக்காது. ஏனெனில் சாதாரண பொலிஸுகளும் இவ் இளைஞர்களும் பல இடங்களில் சிநேகபூர்வமாகப் பழகி வருகின்றனர். இதனால் எமது முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது. ஆகையால்தான் இக் கடிதத்தை உங்கள் பத்திரிகை மூலம் பிரசுரிக்க விரும்புகிறேன்.

இக்கடிதம் மூலமாவது ஜனநாயகத்தை நிலை நிறுத்தும் நீதிமன்றங்களும் பொலிஸாரும் இணைந்து

1.தொலைபேசி மூலம் வீடியோ, படம் எடுத்தல் (பெண்களை)
2.வீதிகளில் தொலைபேசியில் பாடல்களை ஒலிக்கவிட்டுச் செல்லுதல்
3.தொலைபேசி அழைப்பு எடுத்துக் கண்டபடி ஏசுதல்

போன்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மீறுவோரைக் கண்ட இடத்தில் கைதுசெய்து (முன்னாள் பருத்தித்துறை நீதிவான்கள் திரு.அரியநாயகம், திரு.பிரேம்சங்கர் செய்ததுபோல்) இவர்களைச் சிறைக்கு அனுப்பி இவர்கள் திருந்துவதற்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். இனியொரு இளைஞர் சமுதாயம் அழியாமல் மீட்டு எடுக்க வேண்டியது எல்லோரதும் பொறுப்பு.

பருத்தித்துறை. சமூக நலன்விரும்பி.

## பாதை திருத்தப்பட்ட பிறகும் பஸ் சேவை இல்லை

பருத்தித்துறையிலிருந்து வரணி- மந்துவில்- வேம்பிராய் ஊடாக சாவகச்சேரி செல்லும் பஸ் சேவை கடந்த 20 வருட காலமாக யுத்த சூழ்நிலையில் ஓடாது தடைப்பட்டிருந்தது. ஆனால் யுத்தம் முடிந்துஅமைதியான சூழ்நிலை வந்து நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் மேற்படி பஸ்சேவை இன்னும் நடத்தப்படவில்லை. நடத்த உரியவர்களுக்கு மனம் இல்லைப் போலும். 6 இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளையும் 3 பாடசாலைகளையும் கொண்டது இப்பிரதேசம். இங்கிருந்து வடமராட்சி செல்வதானாலும் தென்மராட்சியின் பிற இடங்கள், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குச் செல்வதானாலும் பலமைல் தூரம் நடந்து பஸ் பிடிக்க வேண்டி உள்ளது. இச் சேவை குறித்து பலமுறை பருத்தித்துறை சாலை முகாமையாளரிடமும் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும் கேட்டும் பலனில்லை. அப்படிக் கேட்டால் ஆளணிப்பற்றாக்குறை என்றும் போதியளவு பஸ் இல்லை என்றும் இந்த வீதி குண்டும் குழியுமாக இருப்பதாகவும் இதனால் பஸ் ஓடமுடிவில்லை என்றும் கூறுகின்றார்கள்.

ஆனால், இந்த வீதி திருத்தப்பட்டு விட்டது. பஸ்சேவை இன்னும் நடக்கவில்லை. மாறாக, பக்கத்து நகரான கொடிகாமத்துக்கு 759 பாதைக்கு போதியளவு பஸ்கள் சேவையில் விடப்படுகின்றன. போதாக் குறைக்கு தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. காலையில் இருந்து பார்த்தால் எந்நேரமும் கொடிகாமத்தில் பருத்தித்துறைக்கு பஸ் நிற்கும். மொத்தம் 6 பஸ்கள் ஓடுகின்றன. ஆனால் இந்தச் சேவைக்கு மட்டும் பஸ் இல்லையா என்று கேட்டால் ஆளணிப் பற்றாக்குறை என்கிறார்கள்.

மந்துவில், வரணி மக்கள் சார்பாக. பாடசாலை அதிபர் ஒருவர்.

# மக்கள் முகம்



புத்தூரைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி அ. பிறேம்சங்கர் முன் னிலையில் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் புத்தூர் யா/ ஸ்ரீ சோமாஸ் கந்தக்கல்லூரியின் பழைய மாணவ னும் யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் புவியியல் பாடத்தில் இளமானிப்பட்டத்தையும் தொடர்ந்து இந்தியா- மதுரை, காமராசர் பல்கலைக்கழங்களில் பொது நிர்வாக பாடத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். பச்சிலைப்பள்ளி பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றி வருவதுடன் இந்தியா- திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமூக வேலை (Social work) துறையில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் கிளையின் ஆயுட்கால உறுப்பினராகவும் அரச சேவைப்பட்டதாரி அலுவலர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

* * *



திரு வை. பரந்தாமன் கண்டியில்- கொழும்பு வீதியில் முத்தையா அன் சன்ஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளராக ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு மேலாக இருந்து பின்பு நியூஸிலாந்தில் குடியேறினார். அங்கே அவர் பல பொதுக் காரியங்களில் ஈடுபட்டு வந்தார். அவரது சேவைகளை கவனத்தில் எடுத்து, நியூஸிலாந்து அரசாங்கம் அவரை சமாதான நீதிவானாக நியமித்துள்ளது. இலங்கைத் தமிழர் ஒருவர் நியூஸிலாந்து நாட்டில் Justice of the Peace ஆக முதலாவதாக பதவி நியமனம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இவர் முன்னாள் யாழ்.அரசாங்க அதிபர் காலம்சென்ற திரு .வை.மு. பஞ்சலிங்கம் அவர்களின் இளைய சகோதரர். பரந்தாமன் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.

## பாரம்பரிய கலைகள் அழியாமல் காத்தவர்



எமது ஈழவளநாட்டின் பாரம்பரிய கலைகள் இன்றும் அழியாமல் திகழ்கின்றது என்றால் அதற்கு அத்திபாரம் இட்டு உரமிட்டு புத்துயிரூட்டியவர்களில் ஒருவர் அண்மையில் மறைந்த செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களாவார். கலைகளை வளர்க்கவென்றெ முற்று முழுதாகப் பாடுபட்டவர் இவர். அன்னார் 23.05.1945 இல் பிறந்தார்.

நாடகம், நடனம், நாட்டுக் கூத்து, தென்மோடி, வடமோடி என்றின்னோரன்ன பலவற்றை வளர்த்தெடுக்க அயராது பாடுபட்டார். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்று ஒரு கழகத்தை ஆரம்பித்து அதன்மூலம் அங்கத்தவர்களைச் சேர்த்துக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.

இலை மறை காயாக இருந்த நல்ல பல கலைஞர்களை இனங்கண்டு அவர்களை வெளியுலகுக்கு அறிமுகஞ் செய்த பெருமை இவரையே சாரும். கலையுலகம் ஒரு நல்ல கலைஞரை இழந்து கண்ணீர் வடிக்கின்றது: தானும் வாழ்ந்து மற்றக் கலைஞர்களும் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியதோடு கலை வளர்ச்சிக்காகவே தன்னை அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றிய அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.




தமிழ்க் காவலனாக, கலாபூஷணமாக, கலைஞானச் சுடராக, புதுக்குடியிருப்பின் ஆசானாக, துணுக்காய்-முல்லைத்தீவு கல்வி வலய நிர்வாகத்தினராய், கிளிநொச்சியின் நல்லாசானாய் விளங்கியதோடு மட்டுமல்லாமல் சிறந்த நாடக நடிகனாய், நெறியாள்கையினராய், கும்மி, கரகம், காவடி, சிந்து நடைக்கூத்து, மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், சுளகு நடனம் முதலிய கிராமிய நிகழ்வுகளின் அடிநாதமாய் விளங்கிய காவிய நாயகன் மீளாத்துயில் கொண்டது நாம் செய்த துர்ப்பாக்கியமே!

நீண்டகால அளவிறந்த கல்விச் சேவையாற்றி, அனைவரது உள்ளங்களிலும் நீங்கா இடம்பெற்ற செல்லையா மெற்றாஸ்மயில் அவர்களின் மறைவு கலையுலகுக்கும் பேரிழப்பு. கல்வி நிர்வாகத்தில் மட்டுமன்றி கலைத்துறையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பயிற்றுவித்து தமிழ்மொழிப் பாராம்பரியத்தைச் சிறந்த முறையில் வளர்த்தெடுத்துச் சீரான சேவை செய்த இவரின் இழப்பு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. இவர் கடந்த 09.02.2010 இல் இறைபதமடைந்தார்.

### யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சேவையில்

## திறமைவழி பரீட்சை மூலம் ஐந்து பேருக்குப் பதவி உயர்வு

சாவகச்சேரி,ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சேவையில் பணிபுரியும் ஐந்துபேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் திறமை வழிப் பரீட்சை அடிப்படையில் மாகாண முகாமை உதவியாளர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்கு அலுவலர்கள் ஐவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

திருமதி விமலாதேவி சந்திரலோகன்- வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் பிரதம முகாமையாளர், செல்வி கே.சிவக்கொழுந்து- சாவகச்சேரி நகரசபை நிர்வாக அலுவலர், வே.சிவராஜலிங்கம்- சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர், சி.தவராசா-வலிகாமம் தெற்கு பிரதேச சபை பிரதம முகாமை உதவியாளர், திருமதி லோகராசா-யாழ்.மாநகர சபை பகுதிப் பொறுப்பதிகாரி (பகுதித் தலைவர்) ஆகியோருக்கே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (1-131)

## இரத்மலானை இந்துவின் விருதி ஆண்டு விழா

கொழும்பு,ஏப்.3

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பராமரிப்பில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இயங்கிவரும் மாணவர் விடுதியின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், வைத்திய கலாநிதி க.வேலாயுதம் பிள்ளை நினைவுப் பேருரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 12 ஆண்டுகளாக போரினாலும் வறுமையாலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அகில இலங்கை இந்து மாமன்றம் பராமரித்து வருகிறது. கடந்த சில மாதங்களாக போராளிகள் என்ற சந்தேகத்தில் புனருத்தாரண முகாம்களில் அடைக்கப்பட்ட 273 மாணவ, மாணவிகளையும் இந்த விடுதியில் இணைத்துக் கல்வி கற்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராசமனோகரி புலேந்திரன், முன்னாள் அதிபர் த.சங்கரலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கிறார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் சிவஸ்ரீ ம.பாலகைலாசநாதசர்மா ''சைவ மக்களின் பண்பாட்டு மரபில் கோயில் கிரியைகளும் அவற்றின் உள்ளார்த்தங்களும்'' எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி துரைரத்தினம் அக்கினேசம்மா



4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைரத்தினம் அக்கினேசம்மா நேற்றுமுன்தினம் (01.04. 2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்றோஸ் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைரத்தினத்தின் அன்பு மனைவியும், ஜெயபாலன் (லண்டன்), ஜெயச்சந்திரவதி, ஜெயக்குமாரி, ஜெயதாசன் (ஜேர்மனி), ஜெயரட்ணம் (ஜேர்மனி), ஜெயரூபவதி (பிரான்ஸ்), ஜெயசிறிவதி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிதி (லண்டன்), தர்மராஜா, காந்திமதி (ஜேர்மனி), மேரியூகரஸ்ரா (மாலதி - ஜேர்மனி), இளங்கோ (பிரான்ஸ்), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(96321)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஹற்றன்நஷனல் வங்கியின் மானிப்பாய்க் கிளை முகாமையாளர் மோ.ஜெ.லோரன்ஸ், அவரது பாரியார் திருமதி தமயந்தி லோரன்ஸ், சிறப்பு விருந்தினர்களான வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் (வழிகாட்டலும் ஆலோசனையும்) திருமதி பிறேமா அம்பிகைபாகன், பாடசாலை அதிபர் திருமதி சத்திய குமாரி சிவகுமார் ஆகியோர் கல்விச் சமூகத்தால் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.





சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி மாணவி ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதையும் அருகில் நவீல்ட் பாடசாலையின் அதிபர் எஸ். மகேந்திரன் மற்றும் அதிகாரிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (11)




நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் இறுதி நாள் உற்சவத்தின் போது தவில் வாத்தியக் கலைஞர் வ.தவராசாவிற்கு ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் ப. கதிரேசு 'கலைஞானச் சுடர்' பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தியபோது எடுக்கப் பட்ட படம். (111)



சண்டிலிப்பாய்ப் பிரிவில் டயலொக் தொலைபேசி வகைகளை அதிகளவில் விற்பனை செய்து வந்த நவாலியைச் சேர்ந்த செல்வரத்தினம் சுஜீதரன் என்பவரைப் பாராட்டி டயலொக் நிறுவன அதிகாரிகள் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (100)



இயற்றாலை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் புதிய மாணவர்கள் மலர்மாலை சூட்டி அதிபர், ஆசிரியர்கள் சகிதம் ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (11)



நவாலி மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புரையாற்றுவதையும்-

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் எஸ்.சின்னத்தம்பி அமர்ந்திருக்கின்றமையையும் படத்தில் காணலாம். (படம்:



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் நாள் நிகழ்வின் போது ''தாமோதரன்'' கல்லூரிச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் தாமோதரன் சஞ்சிகையின் மதிப்பீட்டுரையாற்றிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் எம். சின்னத்தம்பி , நிறுவுனரின் பேரன் சரா தாமோதரன், கல்லூரி அதிபர் அ. கைலாயபிள்ளை, பிரதி அதிபர் ரி.பாலச்சந்திரன் ஆகியோர் நிற்கின்றமையையும் படத்தில் காணலாம். (11)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் திருமதி கோல்டன் கொமரா பிரியதர்சினி வெற்றி பெற்ற மாணவனுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**கந்தையனார் சிவகோசரியார் (சிவாஜி)**

[உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்]

தோற்றம் 23.03.1963

மறைவு 04.03.2010

"காற்றடித்த பந்தைக் காலால் உதைத்தவுன் கெட்டித்தனங்கள் காற்றாகிப் போனதுவோ"

விளையாட்டுகளுடன் விளையாட்டுப் பேச்சுக்கள் பேசிய நாள்களையும் நட்புக்கு இலக்கணமாகவிருந்த உங்கள் பண்பையும் மீளவும் நினைக்கின்றோம்.

உடற்கல்வி, விளையாட்டுத்துறை ஆசிரியர்கள்.
தென்மராட்சி. (சி/566338)

### டெங்கு ஒழிப்புக்காக ராணுவத்தின் ஏற்பாட்டில் தெருவெளி நாடகம்

யாழ்ப்பாணம், ஏப்.3

டெங்கு ஒழிப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ராணுவத்தினரின் ஏற்பாட்டில் தெருவெளி நாடகம் நடத்தப்பட்டது.

பாசையூர், குருநகர், நாவாந்துறை, ஈச்சமோட்டைப் பகுதிகளில் ராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தெரு வெளி நாடகம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (23)

### சித்திரைப் புத்தாண்டில் விஷேட ரயில் சேவை


கொழும்பு,ஏப்.3

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களை நோக்கிப் பயமாகின்றவர்களின் வசதிகருதி விஷேட ரயில் சேவையை நடத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் இந்த ரயில் சேவையை நடை முறைப்படுத்தப்படும் என ரயில்வே வணிக அத்தியட்சகர் விஜய சமரசிங்க குறிப்பிட்டார்.

இந்த விஷேட ரயில் சேவைகள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

ANCHOR
Royal Gold
Re-live the golden era



தரமானதும் SLSI தரச்சான்றிதழ் பெற்றதுமான அங்கர் மின்விசிறிகள் தற்பொழுது யாழ்ப்பாணத்திலும்.....

Anchor Air force
The power to blast off heat!
Certified By American Quality Assessors ISO 9001 : 2000 CERTIFIED COMPANY
Anchor Fans pioneered the use of aero dynamic techonology in India
ANCHOR
Anchor Electrical PVT LTD.
Mumbai, India.
Member of
Panasonic
Imported by:
Abbe (PVT) LTD.
14,1/1, Daya Road, Colombo - 06
Sales Point:
67A, Wolfendhal Street, Colombo -13.
T.P: 0112439993
விற்பனைக்குப் பிந்திய சேவை
யாழ்ப்பாண மின்னகம்
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5766

மண்ணில்: 17.09.1972

# ஓராண்டு நினைவலைகள்

மகிமைக்குள்: 03.04.2009

கடந்த 03.04.2009 அன்று புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மாத்தளன் வலயன்மட பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சிக்கி கர்த்தருக்குள் நித்திரையான

## திருமதி பாஸ்கரன் விஜயகுமாரி



கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் (பிலிப் 1:21)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவான இன்று (03.04.2010) சனிக்கிழமை அவரை நினைவுகூரும்.

கணவர்- கந்தசாமி பாஸ்கரன்,
பிள்ளைகள்- சாம்சன், ஜான்சன், கபிரியேல், (பருத்தித்துறை).
தாய்- ஆறுமுகம் விஜயலட்சுமி (திக்கம்),
சகோதரர்கள்- போதகர் ஆறுமுகம் விஜயகுமார் பர்னப (நெல்லியடி)
ஆறுமுகம் ராஜகுமார் (நெதர்லாந்து),
மச்சாள்மார்- வி.கலைவாணி (நெல்லியடி), ரா.நவநிதா (நெதர்லாந்து).
மருமக்கள்- வி.போல்ராஜ், வி.பர்னபராஜ் (நெல்லியடி),
ரா.இம்மானுவேல், ரா.யோசுவா (நெதர்லாந்து).

ஓராண்டு ஓடினாலும் உம் நினைவுகள் அகலவில்லை.

ஆறுமுகம் ராஜகுமார், நெதர்லாந்து. (96072)

கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இது முதல் பாக்கியவான்கள். [வெளி 14:13]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



காலையில் கலகலப்பான அனுபவங்களையும், மாலையில் கசப்பான அனுபவங்களையும் எதிர்கொள்ளும் நாள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். நண்பர் ஒருவரிடம் கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும் நாள்.

### இடபம்



இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று வெற்றிகரமாக நடைபெறும். மனைவி வழி உறவினர்கள் மூலம் சில உதவிகளைப் பெறலாம். வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்



பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி பெருமைப்படுவீர்கள். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். வியாபாரிகளுக்கு கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். மற்றவர்களுக்காகச் சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். அனுகூலமான நாள்.

### கடகம்



எதிலும் அவசரப்பட்டு இறங்காமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். ஒவ்வாத பொருள்களைச் சாப்பிட்டு வாயு உபாதைகளுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். மாலை நேரத்தில் எதிர்பாராத செலவு ஒன்றை சந்திக்கலாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றுக்கு வட்டி கொடுக்க நேரிடலாம்

### சிங்கம்



தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவசரச் செலவு ஒன்றை சமாளிக்கச் சிலரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். உறவினர்கள் வழியில் முக்கியமான செய்தி ஒன்றைக் கேட்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும்.

### கன்னி



காலையில் ஏற்பட்ட செலவு ஒன்று மாலையில் வரும் பணவரவுகளால் சரியாகும். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். முக்கிய பிரச்சினை ஒன்றைப் பற்றி நண்பர்களுடன் கலந்து ஆலோசிப்பீர்கள். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். சந்தோஷ அனுபவம் உண்டு.

### துலாம்



சாமர்த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். பண விடயம் தொடர்பாகக் கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். கனவுகள் பலிக்கும்

### விருச்சிகம்



தேக ஆரோக்கியம் தொடர்பாகவோ, மருத்துவ விடயம் தொடர்பாகவோ சிலரிடம் ஆலோசனை கேட்கலாம். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்கா விட்டாலும், திட்டமிடாத ஒரு காரியம் நடக்கும்

### தனுசு



இனம்புரியாத கவலைகள் மனதை ஆள்கொள்ளும் நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுக்கத் தாராளமாகச் செலவு செய்வீர்கள். மற்றொருவரின் வேலையை நீங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யலாம். நெடுநாள்களாகத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கலாம். மறதியை தவிர்க்கவும்.

### மகரம்



சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகள் கூறி வழிநடத்துவர். பேராசை இல்லாமல் எதிலும் நேர்மையாகச் செயற்பட வேண்டும். கடன் மிகுதிகளை, கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்காக அங்கும், இங்கும் அலையலாம். விருந்தினர் ஒருவரின் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும்.

### கும்பம்



எதிர்ப்புகள், போட்டிகளை முறியடித்து எதிலும் வெற்றி பெறும் நாள். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். பழைய சம்பவம் ஒன்றை அசை போட்டுப் பார்ப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் பெறலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். மாற்று மதத்தினரால் அனுகூலம் உண்டு.

### மீனம்



உறவினர்களின் பெருமைகளைப் பற்றி பேசுவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். சிறிய செலவுக்காக யோசித்த ஒரு காரியத்திற்காகப் பெரிய அளவில் செலவு செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

## கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் 1,100 இராணுவத்தின் துறைசார் நிபுணர்கள்

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் வெகுவிரைவில் மீளக் குடியமர்த்துவதற்காக கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை இராணுவத்தினர் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

கண்ணிவெடிகளை அகற்றும் துறையில் நிபுணத்துவம் பெற்ற 1,100 இராணுவத் துறைசார் நிபுணர்களுடன் 7 அரச சார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் ஏ - 32 வீதியின் இரு பக்கமும் காரைநகர் ஜெட்டி வரையும், ஏ-9 வீதியின் இரண்டு பக்கமும் சுன்னதீவு முதல் ஆனையிறவு வரையான பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. கிளிநொச்சியில் ஆனையிறவு முதல் ஓமந்தை வரையான ஏ-9 வீதியின் இருபக்கமும் ஏ-35 வீதியின் இரு பக்கமும், பி - 69 வீதியின் இருபக்கமும் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன - என்றார். (அ-சி)

## டெங்கு ஒழிப்பில் படைத்தரப்பும் ஆர்வம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியில் உள்ள படைத்தரப்பினர் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்பாட்டை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துள்ளனர்.ஒலிபெருக்கி மூலம் டெங்கு ஒழிப்புப் பற்றிய பிரசாரம் செய்தும், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தும் வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்புத் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்து வருகின்றனர். படையினருடன் இணைந்து சுகாதார உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் இந்த டெங்கு ஒழிப்புப் பிரசாரப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (23)

## மரண அறிவித்தல்

### கனகசபை தியாகராஜா

(முன்னாள் தலைவர், வேம்படி முருகமூர்த்தி கோயில், கொக்குவில்)



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தியாகராஜா (30.03.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இரத்தினம், பாக்கியம், கண்மணி, நாகம்மா, நல்லம்மா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சின்னத்துரை, இராசையா, நடேசு, செல்லம்மா, இராசலிங்கம், குணரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரஞ்சனாதேவி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), நடேசமூர்த்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (நோர்வே), கைலாயநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருந்தவராசா (முன்னாள் லிகிதர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்), குமுதினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கிருசாந்தி மற்றும் ஜெயலட்சுமி, இந்துமதி, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்தூரன், நிருபா, நித்திலன், கிபிலன், பிரியந்தி, நிவேந்தினி, வருண், டினோசன், விபுசன், இந்துஜன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோயில்,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(96272)


## விற்பனைக்கு

40 KW ஜெனரேட்டர் Y30
லோடர் விற்பனைக்கு உண்டு.
T.P.0778118036 (96292)

## வீடு வாடகைக்கு

இல.20, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 10 அறைகள் கொண்டதும் குளியல், கழிவறை வசதிகளுள்ளதுமான மேல்மாடி வீடு உடன் வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு, விடுதிக்கு உகந்தது.


தொடர்புகளுக்கு:
(96254) 0776613901

## வைத்திய சேவை

வாதரோகங்களா? சருமரோகங்களா? ஆஸ்த்துமாவா? நீரிழிவா? குழந்தைகளின் வியாதிகளா?உடல் மெலிவா? உடல் பருமனா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? ம்ற்றும் நாள்பட்ட வியாதிகளா? எதுவாயினும் ஏன் தயக்கம்? சிறந்த சிகிச்சையும், அரிய ஆலோசனையும் பெற்று நலமடையுங்கள்!

டாக்டர் த.சிவானந்தன்
"கோப் கிளினிக்"
(HOPE CLINIC)
100, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
(யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக).
(96261)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தசாமி மதுரநாயகம்

தோற்றம்: 10.05.1963 திதி: பஞ்சமி (03.04.2010) மறைவு: 14.04.2009

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மை அரவணைத்து ஆளாக்கி எம்மைவிட்டுப்
பிரிந்து ஓராண்டு சென்றதுவோ!
ஆறவில்லை எம்மனம்
உங்கள் நினைவுகள் என்றும் அகலாது எமைவிட்டு.
ஆத்ம சாந்திக்காக இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு,
கைதடி. (96281) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறையின் செய்தி

கால்படும் இடமெல்லாம் கல்லறைகள் என்றாகிவிட்ட மண்ணில் வாழ்கிறோம். செந்நீரைச் சொரிந்தவர்களுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்கி கரங்கூப்பி அழுது எமது கோபங்களுக்கும் குற்றப்பழி உணர்வுகளுக்கும் வடிகால் தேட விரும்புகின்றோம். ஆயினும் அதற்குக் கூட உரிமை மறுக்கப்படுகின்றது. கல்லறைகளே இல்லாமல் கரைந்து போனவர்கள் ஒரு புறம். கல்லறைகளே காணமால் போகச் செய்யப்படும் அவலம் மறுபுறம். ஒரு விதத்தில் காவல் இடப்பட்ட கல்லறைகள் போலவே எமது வாழ்வு நகர்கின்றது.




புனித சனி; அனைத்தும் முடிந்து இயேசுவின் உடல் கல்லறையில் புதைக்கப்பட்டதை நாம் நினைவு கூறும் நாள். நம்பியது அனைத்தும் கலைந்துவிட்டது. எல்லாமே முடிந்து விட்டது என்ற விரக்தியின் பிடியில் ஒரு சாரார். எவ்வளவோ எதிர்பார்த்தோம் எதுவும் நடக்கவில்லையே என்பது இவர்கள் கவலை. மறுபுறம் மாற்று வாழ்க்கையை முன்வைத்து இயேசுவின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது என்ற வெற்றிக்களிப்பில் மறுசாரார். வெற்றியின் உச்சியிலும் ஒரு பயம்; ஏதேனும் நடந்துவிடுமோ என்ற அச்சம் , அதனால் தான் கல்லறைக்கும் அவர்கள் காவல் வைக்கிறார்கள்.

எமது மக்களின் இன்றைய நிலையை இயேசுவின் கல்லறை நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றுகின்றது. எல்லாம் முடிந்துவிட்டது என்ற ஏமாற்றத்தில் ஒரு சாரார். வெற்றிக்களிப்பில் மறுசாரார். கல்லறை திறக்கும் காலம் வசமாகும் என்ற காத்திருப்பில் வேறு சிலர்.

இயேசுவின் கல்லறை ஒரு நம்பிக்கையின் சின்னம். கல்லறைகள் நடக்கப்படக் கூடியவை என்ற உறுதிப்பாட்டை தந்த சின்னம். புழு ஒன்று கூட்டுப்புழுப் பருவத்தை அடைகின்ற போது புறத்தே தெரிவது ஒரு அமைதி; கல்லறையின் மௌனம். ஆனால் உள்ளே நிகழ்வதோ ஒரு புத்துயிர்ப்பின் தொடக்கம்; புதிய விடியலுக்கான தயாரிப்பு.

இயேசுவின் கல்லறை திறந்தது போல் எமது மக்களின் வாழ்வும் உயிர்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் அனைவரதும் ஒரே வேண்டுதல்.

*அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்*

# கொழும்பு-தூத்துக்குடிக்கு இடையிலான கப்பல் சேவையை ஆரம்பிக்க முஸ்தீபு

கொழும்பு, ஏப்.03

கொழும்புக்கும் தமிழகத்திற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத் தமிழகம் தூத்துக்குடி கப்பல் சேவைப் பணிப்பாளர் ஜி.கே.ராவ் உறுதிப்படுத்தினார்.

இதன்படி கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்கான அனுமதிகோரி இந்திய கப்பல் போக்குவரத்து திணைக்களம் மற்றும் உள்துறை அமைச்சு என்பவற்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

# பசறையில் கருக்கலைப்பு நிலையம் முற்றுகை சந்தேகநபர், பெண் கைது; உபகரணங்கள் மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 03

பசறை லொட்ஜ் ஒன்றில் சட்டவிரோதக் கருக்கலைப்பு நிலையமொன்றை நடத்தி வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கருக்கலைப்புக்கு பயன்படுத்தப்பட்டுவந்த உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை மொனராகலை வீதியில் இரண்டாம் மைல்கல் பகுதியில் அமைந்துள்ள இந்த லொட்ஜில் சந்தேகநபர் அறையொன்றை வாடகைக்கு எடுத்தே சட்டவிரோதக் கருக்கலைப்பில் ஈடுபட்டுவந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கைதுசெய்யப்படும்போது அங்கிருந்த இளம் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டாரா என்பதை அறிந்துகொள்ளும் முகமாக பசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஏற்கனவே கருக்கலைப்பு சம்பந்தமான வழக்கொன்றில் நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# துருக்கியிலிருந்து இலங்கைக்கு சிகரெட் கடத்தல்; நால்வர் கைது

கொழும்பு, ஏப். 03

துருக்கி நாட்டிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குச் சிகரட்டுகளைக் கொண்டுவந்து விற்பனைசெய்யும் கும்பலொன்று தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் குருநாகலைப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கலால் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கலால் அத்தியட்சகர் பிரபாத் ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டோரிடமிருந்து 35 லட்சம் ரூபா பெறுமதியான சுமார் 2 லட்சம் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

வானொன்றில் சிகரட்டுகளைக் கொண்டுசென்றபோது கைது செய்யப்பட்ட இவர்கள், நீண்டகாலமாக இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.- என்றார்.

# ஆளும் தரப்பினரிடையேயான மோதல் மாத்தளை மாவட்டத்தில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 03

மாத்தளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு மத்தியில் நிலவும் கடும்போட்டி காரணமாக அவர்களுக்கிடையில் கடும்மோதல்கள் உருவாகி வருகின்றன என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை தேர்தல் நியதிகளை மீறிய 16 குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன என மாத்தளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலக் அபேசிரிவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள சம்பவங்களில் பெரும்பாலும் ஆளும் தரப்பினரான ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு ஆதரவாளர்களே சம்பந்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் நடைபெற்றுள்ள வன்முறைகளில் நான்கு பாரதூரமான சம்பவங்கள் பற்றி ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# பொன்சேகாவின் உடல் நலம் குறித்து அரசு முழுப் பொறுப்பையும் ஏற்கும்

## அமைச்சர் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.03

ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல் நிலைக்கான எப்பொறுப்பையும் அரசு ஏற்கும் என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டளஸ் அழகப்பெரும கருத்துக் கூறினார்.

இதேவேளை இரத்தம் தோய்ந்த வரலாற்றுக்குழுவான ஜே.வி.பியுடன் அனோமா பொன்சேகா இணைந்திருப்பதால் அரசு அனோமா தொடர்பில் அச்சமடைகிறது எனவும் அமைச்சர் சொன்னார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொன்சேகாவின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவரது உடல் நிலையில் அரசு கவனம் செலுத்தவில்லை என்று அனோமா பொன்சேகாவும் எதிர்கட்சியினரும் அரசு மீது குற்றம் சுமத்துகின்றனர்.

பொன்சேகாவின் உடல்நிலை தொடர்பில் அரசு முழுமையான பொறுப்பை ஏற்கும் என்பதை நாம் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அவருக்கு மிகவும் சிறந்த முறையில் இராணுவ வைத்தியர்களின் ஊடாக சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இராணுவ வைத்தியர்களின் சிகிச்சை மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது.

ஆனால், அனோமா பொன்சேகா தொடர்பில் நாம் அச்சமடைகின்றோம். அவருக்கு ஆபத்து எதுவும் நடந்துவிடுமோ என்று நாம் அஞ்சுகின்றோம். அனோமா இணைந்திருப்பது இரத்தம் தோய்ந்த வரலாற்றைக் கொண்ட குழுவினருடன் இதுவே எமது அச்சத்துக்குக் காரணம்.

அனோமாவுக்கு ஏதும் ஏற்பட்டால் அவர் தயங்காமல் அரசிடம் அறிவிக்கலாம். அவருக்கு உதவி செய்ய அரசு எந்நேரமும் தயாராகவே உள்ளது.- என்றார். (சி)

# இலங்கைத் தம்பதியருக்கு குவைத்தில் மரண தண்டனை

கொழும்பு, ஏப். 03

இலங்கையைச் சேர்ந்த தம்பதியருக்கு குவைத் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹாஜீ மொஹிதீன் மற்றும் சிஷா ஷிபா ஆகிய தம்பதியினருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு திட்டமிட்ட வகையில் தமது குவைத் எஜமானை குறித்த இருவரும் படுகொலை செய்துள்ளனர்.

சாரதியாகவும், வீட்டுப் பணிப் பெண்ணாகவும் கடமையாற்றிய இந்த இருவரும் திட்டமிட்டு தமது அனுசரணையாளரைப் படுகொலை செய்துள்ளனர்.

கயிறு ஒன்றைப் பயன்படுத்தி கழுத்தை நெறித்து, எஜமானின் பணம் மற்றும் பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளனர் என குவைத் நீதிமன்றில் இவர்களுக்கும் எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.(சி)


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### கந்தையனார் சிவகோசரியார்

(உதவிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம், சாவகச்சேரி)

மலர்வு 23.03.1963 | உதிர்வு 04.03.2010

கடந்த 04.03.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதியாத்திரையின் போது சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அன்னாரின் குடும்பத்தவர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (03.04.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

சிவபுரம், கொடிகாமம்.
தொ.பே. 0217210927

குடும்பத்தினர்.



## தேவை

கொழும்பில், வயது முதிர்ந்தவரைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 0213214480



## கிருஷ்ணா திருமண சேவை

யாழ். இந்து, 83 ஆம் ஆண்டு, சூரியனும் செவ்வாயும் 2 ஆம் வீட்டில் கிரகபாவம் 32 ¼ B.Sc. முடித்த பெண்ணுக்கு வெளிநாடு, உள்நாட்டில் உள்ள உத்தியோக மணமகன் தேவை.

1969ஆம் ஆண்டு M.B.B.S. டாக்டர், 1978 ஆம் ஆண்டு எக்கவுண்டன் செவ்வாய் குற்றமுள்ளது. இவர்களுக்கு உத்தியோக மணமகள் தேவை.

உத்தியோக குறிப்புகளும் உண்டு.

'அன்னை இல்லம்',
செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

T.சுப்பையா
T.P. 021222 9032


## மரண அறிவித்தல்கள்

### சபாரெத்தினம் மரியம்மா

பூநகரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரெத்தினம் மரியம்மா 01.04.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரெத்தினத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரனின் அன்புத் தாயும், சாந்தகுமாரியின் அன்பு மாமியும், யஸ்ரிக்கா, கலிஸ்ரா, நியூட்டன், ஜோதிராஜா, ஸ்ரலின்ஜனாத், சர்மிளா, சாந்தகுமார், ஜெனோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டனஸ், மெடோனா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (03.04.2010) சனிக் கிழமை மு.ப. 9 மணியளவில் இளவாலை அன்னாள் சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
இளவாலை.

தகவல்:
மகன்.

(96310)



### சின்னத்துரை இராசேந்திரம்

(பிரபல வர்த்தகர் - கொழும்பு)

கண்டாமை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், 159, மலே வீதி, கொழும்பு - 2 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசேந்திரம் நேற்று (02.04.2010) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சரஸ்வதிஅம்மா தம்பதிகளின் மருமகனும், சிவஞானசக்தி அம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீறங்கன், ஸ்ரீ சங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌசலாவின் அன்பு மாமனாரும், திருசிகா, சரவணன் ஆகியோரின் பிரியமுள்ள பேரனும், குணவதி, ராதாராணி, இராசரத்தினம், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் இராஜாராம், இராசகோபால், இராஜசிவம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையிலிருந்து கனத்தை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல. 0112304233, 0778103964.

கண்டாமை,
தொல்புரம், சுழிபுரம்

தகவல்:
சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரலை பாதித்த மக்களுக்கு வீடுகள் கிடைக்காமைக்கு பேரியலே காரணம்

## மயோன் முஸ்தபா குற்றச்சாட்டு

அம்பாறை, ஏப். 3

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு இதுவரை காலமும் உரிய முறையில் வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படாமைக்கு, அமைச்சர் பேரியல் அஷ்ரப்பே காரணமாவார்.

- இவ்வாறு முன்னாள் உயர் கல்வித்துறைப் பிரதியமைச்சரும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாள ருமான மயோன் முஸ்தபா குற்றஞ்சாட்டியுள்ளார்.

சாய்ந்தமருதில் அமைந்துள்ள மயோன் முஸ்தபாவின் இல்லத்தில் பிரான்ஸ் நாட்டு ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் அம்பாறை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆனால், இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் உரிய முறையில் கிடைக்கப்பெறவில்லை.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் மருதமுனைக் கிராமம் சிக்கிச் சின்னா பின்னமாகியது. எனவே, அனைத்தையும் இழந்த இந்த மக்களுக்கு அரசினால் வீடுகள் இன்னமும் வழங்கப்பட வில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு அரசின் நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்புக்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப், அரசினால் நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் இந்தப் பணியைச் சரிவரச் செய்யவில்லை. ஆகவேதான், இன்றுவரை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கும், மருதமுனை மக்களுக்கும் வீடுகள் இன்னமும் கிடைக்கப் பெறாமல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மலையகத்தைச் சேர்ந்தவர். அவர் கிழக்கு மாகாணத்திற்கோ, அம்பாறை மண்ணுக்கோ சொந்தமானவர் அல்லர். எனவே, தான் அவரால் எமது மக்களின் தேவை களை, உணர்வுகளைப் புரிந்து கொண்டு உரிய சேவைகளை வழங்க முடியாதுள்ளது.

நான் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளை அரசின் சார்பில், கிழக்கு மாகாணத்தில் பொறுப்பேற்று, முன்னெடுக்கும் ஆவலைப் பல தடவைகள் அரசிடம் வெளிப்படுத்தி இருந்தேன். ஆனால், தட்டிக்கழித்து விட்டனர். அந்நிலையில் எனது மக்களுக்கு இச்சேவைகளைக்கூட ஆற்ற முடியவில்லையே என்ற ஆதங்கத்தில் எனது பிரதியமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தேன். கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை மக்களின் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கும் ஹெல உறுமய பிக்குகளால் தீவிரமாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க காட்டுச் சட்டத்தை நாட்டில் நிலைநாட்ட முயற்சிக்கின்றார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்லவர். ஆனால், அவரைச் சுற்றியிருக்கும் அனைவரும் கெட்டவர்களாகவே இருக்கின்றனர் - என்றார். (ஸி)

# காரைதீவு பிரதேசத்தில் வருடாந்த கலாசார விழா

காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் வருடாந்த சித்திரை வருடக் கலாசார விளையாட்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு காரைதீவு கனகரட்ணம் விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவின் போது மரதன் ஓட்டம், சதுப்புநில ஓட்டம், மிட்டாய்ப்பை ஓட்டம், படகோட்டம், முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல், வினோத உடைப்போட்டி உட்பட ஏராளமான வித்தியாசமுடைய விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன என காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் பொதுச் செயலாளர் தம்பிராசா தவகுமார் தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டுக் கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் கடந்த 14 வருடங்களாக இந்தக் கலாசார விழாவைக் கோலாகலமாக நடத்தி வருகின்றமை குறிபிடத்தக்கது. (ஸி)

# தொகுதிவாரியான தேர்தல் முறைமையால் சிறுபான்மை மக்களுக்கே பாதகம் ஏற்படும்

## பதுளை வேட்பாளர் சச்சிதானந்தன் எச்சரிக்கை

பதுளை, ஏப். 3

''விருப்பு வாக்கு தேர்தல் முறைமை நீக்கப்படும் பட்சத்தில் அதன் மூலம் பாதிக்கப்படுபவர்கள் தமிழ்பேசும் மக்களே. இதனை, தமிழ்,முஸ்லிம் மக்கள் உணர்ந்து செயற்படவேண்டும்''

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி பதுளை மாவட்ட வேட்பாளரும், முன்னாள் பிரதிக்கல்வி அமைச்சருமான எம். சச்சிதானந்தன் பதுளை 'ஒனகஸ்' ஹோட்டல் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமே நாடாளுமன்றம், மாகாணசபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றில் தமிழர் பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்பட்டு வந்தன. எனவே, நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எமது சமூகத்தினர் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெற வைக்க வேண்டும். அப்போது தான் எம்மால் பிரதிநிதித்துவங்களை தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும், கிடைத் திருக்கும் இச்சந்தர்ப்பத்தை எமது சமூகத் தினர் முறையாகவும், கிரமமாகவும் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

கடந்த தேர்தலில் பதுளை மாவட்டத்திலிருந்து இருவர் நாடாளுமன்றத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலின் ஊடாகவே தெரிவு செய்யப்பட்டனர். அந்நிலை போன்று இம்முறையும் ஐக்கிய தேசியக் கட்சிமூலமே பதுளை மாவட்டத்திலிருந்து இருவர் தெரிவு செய்யப்படவேண்டும்.

முழு மலையகமும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது. பதுளை மாவட்ட சிறுபான்மை மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூலமே, எம்மவர்களின் பிரதிநிதித்துவங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. இதனைத் திட்டமிட்ட சதிச்செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது. இது போன்ற சதிவலைகளில் மக்கள் அகப்பட்டுவிடக்கூடாது.

அடாவடித்தன அரசியல் மூலம் தத்தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமென ஒரு சாரார் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய அரசியலுக்கு எமது மக்கள் இத்தேர்தலுடன் முற்றுபுள்ளி வைத்து விடுவர் - என்றார். (ஸி)

# சிறுவர்நேயப் பாடசாலைத் திட்டத்தை கிழக்கில் நடைமுறைப்படுத்த ஏற்பாடு

மட்டக்களப்பு, ஏப். 3

கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும், சகல பாடசாலைகளையும், சிறுவர்நேயப் பாடசாலைகளாக மாற்றியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் இணைந்து இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

சிறுவர் உரிமைகள் கடைப்பிடிக்கக் கூடிய, சிறுவர்கள் நேசிக்கக் கூடிய மகிழ்ச்சிகரமான பாட சாலைச் சுற்றாடலை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

பாடசாலைச் சமூகத்தினருக்கும், பெற்றோருக்குமிடையில் தொடர்பாடலை மேம்படுத்தி, பாடசாலை தொடர்பான ஆரோக்கியமான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சிறுவர் நேயப் பாடசாலை அபிவிருத்திச் செயற்றிட்டம் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஏற்கனவே, இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் என.




அடுத்து வரும் வருடங்களில் மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளையும் சிறுவர் நேயப் பாடசாலைகளாக உரு வாக்குவதற்குக் கல்வியமைச்சு திட்ட மிட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி வலய அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் மூன்று நாள் செயலமர்வு, திருகோணமலையில் நடத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் 15 கல்வி வலயங்களையும் சேர்ந்த ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். (ஸி)

# தேர்தலில் வாக்களிக்க ஊழியருக்கு விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

## தொழில் வழங்குநருக்குத் தேர்தல் செயலகம் முன்வைப்பு

மட்டக்களப்பு, ஏப். 03

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக ஊழியர்களுக்குத் தேவையான விடுமுறை வசதியை வழங்க வேண்டும் என்று தேர்தல்கள் செயலகம், சகல வேலை வழங்குநர்களையும் கேட்டுள்ளது.

ஊழியர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்கு வசதியாக 4 மணித்தியாலங்களுக்குக் குறையாத சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, நாட்டின் சகல வேலை வழங்குநர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஊழியர்கள் தமது வேலைத்தளத்தில் இருந்து வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக் களிப்பதற்கும், மீண்டும் வேலைத்தளத்திற்கு திரும்பி வருவதற்கும் போதுமான அளவு விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

எனினும், கடந்த காலங்களில் ஊழியர்கள் வாக்களிப்பதற்குரிய விடுமுறையைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாகத் தேர்தல் செயலகத்திற்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பதற்கான விடுமுறை வழங்க மறுப்பது, நீதிமன்றத் தண்டனையை அனுபவிக்கக் கூடிய குற்றம் எனவும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, ஊழியர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்காக எழுத்து மூலமாக விண்ணப்பித்து தேவையான விடுமுறை வசதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என தேர்தல்கள் செயலகம் கேட்டுள்ளது. (ஸி)

# இறக்காமத்தில் பின்தங்கிய கிராமங்களின் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு குறித்து விசனம்

மட்டக்களப்பு, ஏப். 3

இறக்காமம் 7ஆம் பிரிவுக்குட்பட்ட குடிவில், மாணிக்கமடு, நல்லதண்ணி மலை ஆகிய மூன்று பின்தங்கிய கிராமங்களினதும் மக்கள் குடிதண்ணீரின்றி பெரும் கஷ்டங்களைத் தினமும் எதிர்கொண்டு வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மூன்று கிராமங்களினதும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறு கோரி, முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப்பிடம் கையளித்த கடிதத்திற்கு இக்குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய்து தருவார் என அவர் வாக்குறுதி அளித்திருந்தார். அன்னாரின் மறைவுக்குப் பின் இத்தேவை பற்றிப் பல அமைச்சர்களிடம் எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என்றும் இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் இக்கிராமங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருவோம் என வாக்குறுதியளித்துச் செல்லும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்தவுடன், தத்தமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனரே தவிர இதுபோன்ற பின்தங்கிய சிறிய கிராமங்களை மறந்து விடுகின்றனர் எனவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இறக்காமம் அல்லது வரிப்பத்தான்சேனையிலிருந்து குழாய் மூலம் தண்ணீரைப் பெற்றுத் தர ஜப்பான் நாடு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என அண்மையில் தகவலொன்று வெளியானது. எனினும், இன்னும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தெரியவில்லை எனவும் கூறப்படுகின்றது. (ஸி)

# மட்டு. தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நீர் விநியோகத்தில் பற்றாக்குறை

மட்டக்களப்பு, ஏப். 3

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் கீழ் இயங்கும், மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் தற்போது ஏற்பட்டுள்ள நீர் விநியோகப் பற்றாக்குறை காரணமாக இங்கு கல்வி பயிலும் தாதி மாணவிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிப்பாடசாலை மற்றும் மாணவிகள் தங்கும் விடுதிகள் என்பவற்றிற்கு முறையான நீர் விநியோக வசதிகள் போதியளவு ஏற்படுத்தப்படவில்லை.

தற்போது, இயங்கிவரும் நீர் விநியோகக் கட்டமைப்புகளின் மூலமாக மிகவும் குறைவான அளவு நீரே கிடைக்கின்றது எனவும், இதனால் விடுதி மாணவிகள் தமது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் தாதி மாணவிகளின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நீர் விநியோகத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில், தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு இதுவரை முறையான நீர் விநியோக வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிர்வாகமும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி மட்டக்களப்பு தாதியர் பயிற்சிப் பாடசாலைக்குத் தேவையான நீர் விநியோகக் கட்டமைப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701331842 முதல் 701347747 வரை. சீட்டிழுப்பு இல. 636 திகதி 01-04-2010

வெற்றி எண்கள்

**02 27 52 55 H** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 14,515,120/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,515,120/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 352 | 1,000/= | 352,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 603 | 1,000/= | 603,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14073 | 60/= | 844,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6370 | 40/= | 254,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 166252 | 20/= | 3,325,040/= |
| | | மொத்தம் ரூ. | 6,201,220/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - சுமித் நிஷாந்த விக்ரமசிங்ஹ - அங்கொடை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - A.A.J. என்டன் அமரசேகர - கடவத்தை.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 701342666-4-45 |
| குருணாகல் | 701339514-2-45 |
| அநுராதபுரம் | 701338282-2-17 |
| கம்பஹா | 701333877-0-47 |
| கண்டி | 701332461-7-00 |
| பொலன்னறுவை | 701342100-8-00 |
| கேகாலை | 701338838-5-04 |
| கொழும்பு | 701347061-4-05 |

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333540/7

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,601,220/=
எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 14,964,400/=

தொடர் இல. 601373315 க்கு மேற்பட்ட மஹசன் திற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 05 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 08 ★ 08 ★ 1985



காலன் பிடியில் 03 ★ 04 ★ 2003

## செல்வன் மரியதாஸ் பிரதீபன்

அன்பு மகனே பிரதீபா!
ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்ததே
இப்போது நினைத்தாலும் குமுறுகிறது நெஞ்சம்
ஏழேழு ஜென்மமாய் தொடரும் உன் நினைவுடன் ....

மா.மரியதாஸ்
பக்கஸ் லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
(96316)

# எட்டாம் ஆண்டின் நினைவலைகள்

உதயம் 05 ★ 04 ★ 1934



அஸ்தமனம் 02 ★ 04 ★ 2002

## அமரர் கந்தையா இராசலிங்கம்

(திதி: 03.04.2010 - பஞ்சமி)

கள்ளங்கபடமில்லா களையான உன் முகமும்
காற்றோடு கலந்ததுவோ
கலகலப்பாய் பேசி கதைகள் பல கூறும்
உன் நாவும் களையிழந்ததுவோ.
காலங்கள் பல கடந்தோடிச் சென்றாலும்
கண்ணீரை வரவழைக்கும் உன் நினைவுகள்
விண்ணில் இன்று நீர் தெய்வமாகி அமர்ந்திருந்து
எம் வாழ்வு சிறப்புறத் தந்திடுவீர் ஆசிகளை
இந்நாளில் உம் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கும்....

இல. 14 காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(96314)

# கொழும்புத்துறையில் நாளை கிரிக்கெட் போட்டி

கொழும்புத்துறை, ஏப். 03

உயிர்ப்பு ஞாயிறு தினத்தையொட்டி கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளைஞர்களுக்கும் திருமணமான ஆண்களுக்கும் இடையே வருடாந்தம் இடம்பெறும் இச்சினேக பூர்வ ஆட்டத்தை பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயன் அடிகள் ஆரம்பித்து வைப்பார்.

(ஒ-135)

# சான்றிதழுக்குரிய பயிற்சி நாளை ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 03

திருகோணமலையிலுள்ள வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம், யாழ். பல்கலைக்கழகத்தின் மனிதவள அபிவிருத்தி அலகு ஆகியன இணைந்து நடத்தும் சான்றிதழுக்குரிய பயிற்சி வகுப்புகளுக்கான ஆரம்ப வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(ஒ-க)

# சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப். 03

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி படையினர் நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நகரசபையினருடன் இணைந்து சிரமதானத்தை மேற்கொண்டனர்.

(ஒ-207)


## கடை வாடகைக்கு

யாழ் மானிப்பாய் வீதியில், மானிப்பாயில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு. (புத்தக கடைக்கு உகந்தது)

0729580400

## வீடு விற்பனைக்குண்டு

நல்லூர்க் கோயில் சுற்றாடலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள், முத்திரைச்சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777432645

* எனது பக்கம் தரகர் தேவையில்லை.

## வேலையாள்கள் தேவை

K.R.S. உணவு உற்பத்தி நிறுவனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் தொழிலாளர்கள் தேவை. நேரில் வரவும்

K.R.S. FOOD PRODUCT,
K.K.S. ROAD, KONDAVIL WEST,
KONDAVIL.
T.P: 021 4591537, 021 4921886





# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
## கணபதிப்பிள்ளை ஞானகரன்

யாழ். பல்கலைக்கழகத்தில் 27.03.2010 அன்று நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானத் துறையில் B.Sc பட்டம் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துவதோடு எங்கள் ஆதிபராசக்தி அன்னையின் அருளால் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

456, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா, சகோதரிகள்,
அக்கா குடும்பம், தம்பி குடும்பம்;
மாமாமார் குடும்பம், அன்ரி குடும்பம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 26.03.2010 வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் B.A. (Hons) பெற்ற எமது கல்வி நிலைய சக ஆசிரியர்

## வயிரவநாதன் கிருபாகரன் B.A (Hons)

அவர்களை மன மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வித் துறையில் அவரது சேவை உயர்ந்தோங்க அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

வாழ்த்துவோர்:
சாரு அக்கடமி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(96325)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

திருமதி **உமாவதி ரவிகரன்** (B.Com,Dip. in Edu.)

அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/கைதடி நுணாவில் அ.த.க.பா.

(95297)


# நாடாளுமன்றத் தேர்தல் - 2010



தேர்தல் மாவட்டம் இல. 10
யாழ்ப்பாண மாவட்டம்.

சுயேட்சைக் குழு இல. 11

X



தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக
அதனை நன்கு புரிந்து கொண்ட
அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின்
தலைமையைப் பலப்படுத்த
இலங்கை மக்கள் கட்சியில் இணைந்துள்ளேன்.
உங்கள் வாக்கை மாங்கனி சின்னத்திற்கு இடுவதுடன்
விருப்பு வாக்கை எனது இலக்கமான
4 இற்கு அளிக்குமாறு வேண்டுகின்றேன்

வாக்களிக்கும் முறை

X கலாநிதி கந்தையா குணராசா 4
(செங்கை ஆழியான்)

புத்திலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிட்டுவதற்கு சிறுபான்மையினங்கள் இடமளிக்குமா?

**இன்று, யுத்தம் முடிந்து சமாதானம் நிலவும் புறச்சூழலே நாட்டில் நிலவுகின்றது. அது எவ்வாறானாலும் இன்னமும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருப்பது குறித்து அரசு கண்டனங்களை ஏற்றே ஆகவேண்டும் என்ற சாரப்பட தமது கருத்துகளை இங்கு முன்வைக்கிறார் பிரபல சட்டத்தரணியான கோமின் தயா சிறி.**

**இக் கருத்துக்களம் 'ராவய' பத்திரிகையில் வெளியா கியிருந்தது.**

**அதன் தமிழ் வடிவமே இது!**

கேள்வி: இலங்கையில் யுத்தம் முடிவுற்று, ஜனாதிபதித் தேர்தலும் கூட நடந்து முடிந்துள்ளது. இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலை அடுத்து, தேர்தல் காலமும் முடிவுறுகின்றது. இன்றைய அளவில் நாட்டைக்கட்டியெழுப்புவதைப் பற்றியே நாட்டின் பெருமளவு தரப்பினரால் பேசப்படுகின்றது. அக்கருமத்தின் போது எத்தகைய காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளன எனக் கருதுகின்றீர்கள் ?

பதில்: அத்தோடு சிந்திக்க வேண்டியுள்ள இன்னுமொரு விடயம், அடுத்து வரும் தேர்தலில் நடக்கப்போவது என்ன என்பதாகும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இப்பொதுத் தேர்தல் இடம்பெறுவதன் காரணமாக அனேகமாக அத்தேர்தலின் பெறுபேறு ஏற்கனவே வெளிப்பட்டுள்ளதாகவே கருத முடிகிறது. மேற்படி தேர்தலானது அரசை வெற்றித் தரப்பாகவும் எதிர்க்கட்சியைத் தோல்வியுற்ற தரப்பாகவும் காட்டி நிற்கும் விதமாகவுமே இடம்பெறவுள்ளது. அதுபோன்ற அரசுக்கு காப்பானது மூன்றிலிரண்டு நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளதோடு அதைத் தடுத்துவிடும் விதமாக எதிர்க்கட்சி செயற்பட வேண்டியுள்ளது. ஆனாலும் இவ்விதம் அடுத்தடுத்துத் தேர்தல்கள் இடம்பெறுவதானது மக்களைப் பொறுத்தவரையில் பெரும் தாக்கமொன்று மட்டுமல்லாது, நியாயமற்றதுமாகும். இது நியாயமற்றது என நாம் வாதிடுவதற்கு, ஜனாதிபதியானவர் இரண்டாவது தடவையாகவும் தாம் பொறுப்பேற்றுக் கொண்ட கருமமொன்றை முறைப்படி நிறைவேற்றுவாரா? அவரது கட்சிக்கு மீளவும் அதிகாரபலத்தை வழங்கத்தான் வேண்டுமா? எனத் தீர்மானிப்பதற்கு இத்தகைய சந்தர்ப்பமொன்றில் மக்களுக்கு வாய்ப்புக் கிட்டாது போவதே காரணமாகிறது.

கே: எவ்வாறோ, இத்தேர்தலில் அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோரி நிற்கிறது. அவ்விதம் கட்சியொன்றுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கிவிடுவதுதென்பது எந்தளவு தூரத்துக்குப் பொருத்தமானது?

ப: இதில் இரு பக்கங்கள் உள்ளன. அதற்கு முன்னர் இந்நாட்டு அரசமைப்பைப் பற்றியும் சிலவற்றைக் கூற வேண்டியுள்ளது. அதாவது எமது அரசமைப்பு நியாயமற்றது போன்றே, வெற்றிகரமானதல்ல என்பது இன்றைய அளவில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளடங்கியுள்ள விகிதாசார பிரதிநிதித்துவத்தை இதற்கு உதாரணமொன்றாகச் சுட்டிக்காட்ட முடியும். இந்த முறைமை காரணமாக பலமானதொரு அரசு உருவாவதற்கான வாய்ப்பு அற்றுப் போவதோடு, கூட்டணி அரசொன்று அமைவதன் மூலமாக பலவீனமான நிர்வாகமே உருவாகின்றது. அதன் காரணமாக பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பல விதங்களிலான சிறப்புரிமைகளை வழங்கி, அவர்களை அரச தரப்பின் பக்கம் சாய்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதேபோன்று, உயர்நீதிமன்றத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் காரணமாக அரசமைப்பின் அடிப்படைச் சான்றொன்றான கட்சி மாற்றத்திற்கு எதிராகக் காணப்படும் நியமங்கள் முழுமையாகவே மாற்றமடைந்துள்ளன. எனவே, பணத்தொகைகளுக்காகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவல்களை மேற்கொள்வதைக் காணமுடிகிறது.

அதேபோன்று, நாடாளுமன்ற அமைவின் பலத்தை முழுமையாகவே நிறைவேற்று அதிகாரத்தால் மாற்றிவிட முடிவதோடு, நாடாளுமன்ற அமைவு மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை, அடிப்படை உரிமைகள் ஊடாக நீதிமன்றத்தால் மாற்றிவிடக்கூடிய ஆற்றலின் காரணமாக பிரதான நிர்வாக நிறுவனங்களுக்கிடையில் அமைய வேண்டியுள்ள அதிகாரச் சமநிலை நிலவுவதில்லை. எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிட்டுமானால் நிலவும் அரசமைப்பை நீக்கிவிட்டு நாட்டுக்குப் பொருந்தும் அரசமைப்பொன்றை உருவாக்கி விட முடியும்.

மறுபுறத்தில் 1970ஆம் ஆண்டில் மற்றும் 1977ஆம் ஆண்டில் எதிர்கட்சிக்குக் கிட்டியிருந்த வாக்குகளுக்குச் சமமான பலம், அவர்களுக்கு அமையாததன் காரணமாக எதிர்க் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு மூன்றிலிரண்டும், ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலமும் கிட்டியது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தான்தோன்றித்தனமான விதத்தில் மக்களின் உரிமைகளை ஏறி மிதித்து நிர்வாகம் செலுத்தப்பட்டமையைக் காணமுடிந்தது. இவற்றை மனதில் கொள்ளும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்டியதன் மூலம் அரசு மக்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தக் கூடுமா? என்பதையே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

அதேவேளை, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம் கிட்டுவதற்கு சிறுபான்மைச் சமூகங்கள் இடமளிக்குமா? என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது.

எவ்வாறானாலும், எனது தீர்க்கமான கருத்தொன்றை இங்கு கூறவேண்டியுள்ளது. அதாவது, மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிட்டினாலும், கிட்டாது போனாலும் நாட்டின் பிரதான இரு கட்சிகளுக்கிடையில் ஏதோவொரு இணக்கப்பாட்டைக் கண்டு, அடுத்து வரும் ஆறாண்டுகளுள் நிலவும் அரசமைப்பு மாற்றியமைக்கப்படாது போகுமானால், இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதென்பது கடும் சிரமத்துக்குரியதொரு கருமமாகவே இருக்கும்.

கே: அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் கிட்டி, அவர்களது இசைவுக்கேற்ப அரசமைப்பொன்று அமைவதா? அல்லது மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலத்தை எதிர்பாக்காது கட்சிகளுடன் இணக்கம் கண்டு அரசமைப்பொன்று கட்டமைவதா? என்ற இவற்றுள் எது சிறப்பானதெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

ப: நிச்சயமாக, அரசொன்றுக்கு அதிகமான பலத்தை வழங்கி விடுவதால் தான்தோன்றித்தனமான மற்றும் இறுமாப்புடன், செயல்படுவதற்கு வழியமைகிறது.

அதேபோன்று, ஆக்கபூர்வமான கோணத்தில் நின்று நோக்கினால், எமது எதிர்க்கட்சியானது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசுடன் ஒத்து நின்று செயற்படுவதற்கு விரும்பாத நிலையே தென்படுகின்றது. அதன் காரணமாக அரசமைப்பு மாற்றம் என்ற விடயத்தில் எதிர்க்கட்சி எந்தளவுக்கு ஒத்துழைப்பு வழங்கி நிற்கக் கூடுமென்பது பிரச்சினைக்குரியதொன்றேயாகும். அதேபோன்று எதிர்கட்சியின் பெருமளவு தரப்பினர் சிறுபான்மையின மற்றும் மதப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக அமையும் போது, அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் நாட்டுக்குப் பொருந்தும் அரசமைப்பொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு அவர்களிடமிருந்து ஒத்துழைப்புக் கிட்டுமா? என்பது சந்தேகத்துக்குரியதே. அத்தகையதொரு நிலைப்பாட்டின் கீழ், மக்களின் தேவை கருதியதாக இறுதியில் அரசொன்றுக்கு தனித்துச் செயற்பட வேண்டிநேரும் என்பதாகவே நான் நம்புகிறேன்.

அதனிடையே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது, 2013ஆம் ஆண்டாகும்போது ஏறத்தாழ இருபத்து மூன்று ஆண்டுகளாக இந்த ஜனாதிபதிப் பதவியை ஆண்டு அனுபவித்துள்ளது என்பதையும் மறந்து விட இயலாது. அத்தகையதொரு நிலைப்பாட்டில் எதிர்க்கட்சி அதிகாரத்துக்கு வர இடமுள்ளது என்பதையும் நம்பமுடிகிறது. ஆனாலும், இன்றைய எதிர்க்கட்சியானது சிதைவுற்றுப் போயுள்ளதன் காரணமாகவும் பிரதான எதிர்க்கட்சி மக்களின் எண்ணங்கள் எதிர்ப்பார்ப்புக்களுக்கு அமைய செயலாற்றுவதற்குத் திறனற்றுப் போயுள்ளதன் காரணமாகவும், இன்னமும் அவர்கள் கொழும்பின் முதல்தர வகுப்பாரின் அல்லது 'கொழும்பியன்ஸ்' தரப்பின் அவசியப்பாடுகளுக்கு அமைய தம்மை இயக்கிச் செல்வதன் காரணமாகவும் அந்த வாய்ப்பை அவர்கள் பெறுவார்களா? என்பதும் பிரச்சினைக்குரியதொன்றாகிறது.

அவ்வாறன்றி, ஐ.தே. கட்சியானது தனது கொள்கைகளை மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய மாற்றிக் கொண்டு, அக்கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவர மத்தியிலிருந்து வெளிப்படும் தரப்பொன்றுக்கு இடமளித்து 'கொழம்பியன்ஸ்' களிலிருந்து விடுபட்டு பலம்பொருந்தியதொரு எதிர்க்கட்சியாக ஆகிவிடுமானால், இன்னும் மூன்று, நான்கு ஆண்டுகளுள் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்கட்சிக்குத் தம்மை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்புள்ளது. எனவே, அரசால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள முக்கிய கருமம், நீதிமன்றத்தால் சிக்கலாக்கிக் குழப்பி விடப்பட்டுள்ள அரசமைப்புக்கு முரணான கட்சித்தாவல் முறைமையை சட்டரீதியில் இரத்துச்செய்து விடுதலேயாகும். அரசு, தான்தோன்றித்தனமாகச் செயற்படும் போக்கின் காரணமாகவும் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் புதியதொரு வேட்பாளரை நிறுத்திவிடும் அவசியம் அவர்களுக்கு ஏற்படுவதன் காரணமாகவும் உருவாகக்கூடிய எராளமான உள்ளகப் பிரச்சினைகள் காரணமாக நிறையவே சிக்கல்களுக்கு இடமுள்ளது. எதிர்க்கட்சியானது; இதன்மூலம் பிரயோசனங்களை ஈட்டிக் கொள்வதற்குத் திறனாற்றல் பெறக்கூடுமா? என்பதை இன்னும்

**தமிழில் : சரா**

மூன்று, நான்கு ஆண்டுகளிலேயே தெரிவிக்க முடியும்.

கே: தங்களது கருத்தியலுக்கு அமைய அரசமைப்பின் கட்சித்தாவல் தொடர்பான நியமங்கள் நீதிமன்றத்தால் புதிது படுத்தப்பட்டுள்ளது எனின், சட்டரீதியான மார்க்கமொன்றின் மூலம் அதை எந்த விதத்தில் வெற்றிகொள்ள முடியும்?

ப: ஒருவர் தனது கட்சியிலிருந்து மேலும் கட்சிக்கோ, தரப்பொன்றுக்கோ தம்மை மாற்றிக்கொள்வது தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினரொருவரைப் பொறுத்தவரையில் அரசமைப்பில் எவ்விதமான உரிமையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. கட்சித் தாவலுக்கு விரோதமானதாகவே, அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனாலும், நீதிமன்ற அர்த்தப்படுத்தலொன்றின் மூலமே நீதிமன்றத்தால் அக்கருத்தியல் சிதைத்து விடப்பட்டுள்ளது. எனவே, அந்த நீதிமன்ற அர்த்தப்படுத்தலுக்கு எதிராக அரசமைப்பில் உள்ளடங்கியுள்ள நியமத்தை உச்சப்படுத்தி விடுவதற்காக நாடாளுமன்றச் சட்டமொன்று அமுலாக்கப்பட வேண்டியுள்ளது என்றே நான் கருதுகிறேன்.

கே: நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் தலைவிதி எவ்விதமானதாக அமைய வேண்டியுள்ளதெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

ப: பலமான அரசொன்று கட்டமைவதற்கு அவசியமான தேர்தல் முறைமையொன்று முன்வைக்கப்படுவதோடு, பிணைந்ததாக மட்டுமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்கள் பயன் படத்தப்பட்டு, வரையறுக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், பலமானதொரு நாடாளுமன்ற அமைவு இல்லாத நிலையிலும் கூட நிறைவேற்று அதிகாரங்கள் ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்கள் மூலம் பயன்படுத்தப்பட்டு, யுத்தத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிட்டுவதற்கு.......

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்திருந்ததோடு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுத்துக்கொண்டு பலமானதொரு அரசைக் கட்டமைத்து அதை நலிவு படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து எத்தனங்களையும் முறியடித்து விடவும் முடிந்துள்ளது. மறுபுறத்தில் பல ஆண்டுகள் வரையிலும் பலமான தொரு அரசு நிலவுவது நாட்டுக்கு மிக அவசியமானதே. எனவே, நாடாளுமன்ற அமைவு மற்றும் நிறைவேற்று அதிகார மென்ற நிறுவனங்கள் இரண்டையும் ஒருசேர பல வீனப்படுத்தி விடும் கருமம் மேற்கொள்ளப்படாதிருக்க வேண்டி யுள்ளது. அரசைப் பலப்படுத்தாது நிறை வேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களைக் குறைத்து விடும் போது, இந்நாட்டில் பிரிவினைவாதத் தரப்புக்கள் மற்றும் நாட்டுக்கு ஒவ்வாத கொள்கைகளுக்குள் நாட்டை அமிழ்த்தி விடுவதற்குத் தருணம் பார்த்திருக்கும் வெளிநாட்டுச் சக்திகளுக்கும், அது அனுகூலமாகி விடும். எனவே, நாடாளு மன்ற அமைவினதும் நிறைவேற்று அதிகாரத்தினதும் அதிகாரங்கள் சம நிலையில் அமைய வேண்டியுள்ளது.

மறுபுறத்தில் நாடாளுமன்ற அமைவும் நிறைவேற்று அதிகாரமும் பலம் பெறுவது சிறப்பானதே. ஏனெனில், அவை இரண்டுமே மக்களின் நிர்வாகத்தின் கீழ் அமைவனவாகும். மக்களால் அவர்களை விமர்சிக்க முடிவதோடு, தேர்தல்களும் உரியகால வேளைகளில் நடந்தேறும். அவற்றின் மூலம் இப்பிரதிநிதிகளைத் தேவைகருதி மாற்றிவிடவும் இயலும். இத்தினங்களில் சமையல் எரிவாயுவின் விலை மட்டங்கள் அதிகரிக்காது அதேமட்டத்தில் நிலவுவதற்கும் மக்கள் வசமுள்ள நிர்வாகமே காரணமாகவுள்ளது. ஆனால், நீதிமன்றம் அவ்வாறில்லை. அது மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதில்லை. கடந்த காலத்தில் நீதிமன்றமானது அடிப்படை உறுப்பினர்களைப் பயன்படுத்தி அரச நிர்வாகத்தை மேற்கொண்டது. அந்தவகையில் அடிப்படை உரிமைகள் என்பது எதற்கும் பொருந்தும் மருந்தாகியுள்ளது. ஆனால், அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தி நாட்டை நிர்வகிக்க இயலாது.

**கே:** தமிழ் மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளல் என்பது அடுத்த கட்டத்தில் முதன்மைப் படுத்தப்பட வேண்டியுள்ளதொரு கருமம் அல்லவா?

**ப:** உண்மையில் இன்று முதலிடம் வழங்கவேண்டியிருப்பது தமிழ் மக்களின் நியாயமான அவலங்கள் துன்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதேயாகும். யுத்தம் முடிவுற்று இன்றைய அளவில் எட்டு மாத காலம் கடந்துள்ள போதிலும், இன்னமும் அரசு அது தொடர்பான நடவடிக்கையொன்றை முன்னெடுக்காதிருப்பதானது, அரசுக்கு எதிரான மிகப் பெரும் குற்றப்பத்திரிகை யாகும். ஏனெனில், அரசின் இப்போக்கால் மீளவும் பிரபாகரனின் உருவப்படங்கள் படிப்படியாகக் காட்சிப்படுத்தப்படும் வாய்ப்புகளுக்கே வழி அமையும். நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு சிங்கள மக்கள், மற்றும் முஸ்லிம் மக்களைப் போன்றே நியாயமான துன்ப துயரங்கள் உள்ளன. முப்பதாண்டு கால யுத்தத்தின் பின்னர், பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கி அதைத் தீர்த்து வைப்பதானது எதிர்காலச் சந்ததிக்கு ஆற்றும் மிகப் பெரும் சேவையாகும். நாம் இவ்வாறு கூறுவதற்கு வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்த் தரப்புப் போன்றே, இந்நாட்டிலுள்ள பயங்கரவாத சக்திகள் வெளித் தோற்றத்திற்குப் புலப்படாதிருந்தாலும் உள்ளக ரீதியில் படிப்படியாக வளர்ச்சியுறுவதற்கு இடமுள்ளது என்பதே காரணமாகின்றது. தமிழ் மக்களது நியாயமான துன்பங்கள், அவலங்களுக்கு நாம் தீர்வுகளை வழங்குவோமானால், அது பயங்கரவாதப் பிரிவினைவாதம் மீளத் தலையெடுப்பதற்கு அமைந்துள்ள வாய்ப்புகளைத் திசை திருப்பி விடுவதேயாகும். அரசினால் மட்டுமே இக்கருமத்தை நிறைவேற்றிட இயலும். எமது அரசமைப்பினுள்ளேயே என்றவாறு நிறைவேற்று மற்றும் நிர்வாகச் செயற்பாடொன்றினால் தமிழ் மக்களின் நியாயமான துன்ப, துயரங்களுக்கு வெற்றிகரமான தீர்வுகளை வழங்க முடியும். அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அவசியமற்றதாகும்.

**கே:** தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளைத் தாங்கள் எவ்விதமாக விவரிக்கின்றீர்கள்?

**ப:** பத்து விதமான பிரச்சினைகள் தமிழ் மக்களுக்குள்ளன. அந்தவகையில், மொழி, பாதுகாப்பு, நீர், காணி, பிள்ளைகளின் நலன்கள், அபிவிருத்தி, வேலை வாய்ப்புகள், மீள்குடியேற்றம், அவர்களின் வழிவந்த கலாசாரப் பிரச்சினைகள் என்பவை இதில் உள்ளடங்குகின்றன. இந்த அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு இந்நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டக் கட்டமைப்புத் தாராளமாகப் போதுமானதாகும். இருந்த போதிலும் அக்கருமத்திற்கான கால இழுத்தடிப்பின் பலாபலன், பயங்கரவாதம் மீளத் தலையெடுப்பதற்கு வாய்ப்பளிப்பதேயாகும்.

**கே:** தங்களது வாதம் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக அதனை நிறைவேற்ற முடியும் என்பதா?

**ப:** அரசமைப்பின் 13ஆவது திருத்தமானது இக்கருமத்திற்கு எந்தவிதத்திலும் பொருத்தமானது அல்ல. அது எம்மால் அல்ல. இந்தியாவால் கட்டமைக்கப்பட்டதாகும். அது விடுதலைப் புலிகள் அமைப்பை மாகாணசபை முறையின் கீழ் ஜனநாயகவாத அரசியல் நீரோட்டத்தில் இழுத்துவிடும் எத்தனமொன்றேயாகும். வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் தேர்தல்களை நடத்தக் கூடிய நிலைப்பாடொன்றின் கீழ் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் பலனற்றதாகி விட்டுள்ளது. மேலும், இந்த 13 ஆவது திருத்தமென்பது நேரடியாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவதற்குப் பதிலாகத் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தை வழங்கி மீளவும் பிரிவினைவாதத்தை நோக்கிப் பயணிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதொன்று என்றே நான் கருதுகிறேன். அதற்கமைய தமிழ் மக்களது பிரச்சினைகள் அரசால் நேரடியாகவே தீர்த்து வைக்கப்பட வேண்டியுள்ளது.

அதேபோன்று சிங்கள அரசுகள் புரிந்துவரும் பாரதூரமான தவறு அவலப்படும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கி உபசரிப்பதற்குப் பதிலாக அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உபசரித்துக் கவனிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எண்ணுவதாகும். இன்று வரையிலும் தோட்டப்பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் இல்லையென்றாலும் கூட, பல தசாப்தங்களாக அவர்களது பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அமைச்சர் பதவிகள் கிட்டுவது அதற்கமையவேயாகும். அத்தவறை மீளவும் புரியாது, தமிழ் மக்களின் நியாயமான சிக்கல்கள் அரசின் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டியுள்ளது. அதற்கு மேலதிகமாக 13ஆவது திருத்தத்தை மறந்து விட்டு சிறுபான்மை இனங்கள் முகம் கொடுத்துள்ள உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவது நாட்டின் அனைவரதும் பொறுப்பாகும்.

மேற்படி திருத்தத்தைக் கைகழுவி விட்டுச் சிறுபான்மை இனத்தவர்களின் உண்மையான பிரச்சினைகளை அணுகி உரிய தீர்வொன்றை வழங்கி நிற்பதானது அனைவரதும் செயற்பாடொன்றாகும். சிங்கள இனத்துக்காக குரல் கொடுத்துள்ள தரப்பினர், இதைத் தெளிவாக உணர்ந்து இப் போராட்டத்தில் அவர்கள் தம்மை முன்னிலைப் படுத்திக் கொள்வார்களானால், எதிர் காலத்தில் தமிழ்-சிங்கள உறவாடல் வளர்ச்சியுறும்.

தமிழ் மக்களும் தமக்குக் கிட்டுபவை குறித்து எந்தவித நன்றியறிவித்தலும் இன்றி நியாயமற்று மென்மேலும் அதிகாரங்களைக் கோரி நிற்பார்களேயானால், மீளவும் ஒரு தடவை கிடைக்கும் அதிகாரங்களும் இல்லாது போவதே நடந்தேறலாம்.

**கே:** நாட்டில் எல்லை மீறிச் சென்றுள்ள ஊழல் கலாசாரமொன்று நிலவுவதாகப் பொதுக்கருத்தொன்று உள்ளது. இதற்கு மாற்றீடாக எத்தகைய கருமமொன்று அமைய வேண்டியுள்ளது?

**ப:** ஊழல் மற்றும் முறைகேடுகள் என்பவை நன்றிக்கடன் செலுத்தல் என்ற காரணத்தை மையமாகக் கொண்டே பலமடைந்தது. யுத்த வெற்றியும் அதனோடு இணைந்து கொண்டது. இவையனைத்தையும் மறந்துவிட்டு தேர்தலின்போது மக்கள் வாக்களித்தனர். ஆனால், இந்த இரண்டாவது கால வரையறையினுள் அத்தகைய சலுகையொன்று அரசுக்குக் கிட்ட மாட்டாது. இதற்கு மாற்றீட்டுக் கருமத்தை மேற்கொள்ளக்கூடிய பொருத்தமானநபர் ஜனாதிபதியேயாவார். நம்பகமான, நேர்மையுள்ள சிறிய பிரிவொன்றின் ஒத்துழைப்புடன் ஊழலை ஒழித்துவிட அவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறான போதிலும் எந்தவொரு நாட்டாலும் ஊழல் மற்றும் முறைகேட்டைத்துடைத்தெறிந்து விட இயலாது என்பதையும் நாம் ஏற்க வேண்டியுள்ளது.

**கே:** இக்கருமம் தொடர்பாக ஏதோ விதத்திலான நிறுவனக்கட்டமைப்பொன்று அவசியப்படுகிறது அல்லவா ?

**ப:** இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றிற்கு பலவீனமான நபர்களை அரசியல் அடிவருடிகளை முதியோர் இல்லங்களில் விடப்பட வேண்டியுள்ள நபர்கள் மற்றும் 'கொழம்பியன்ஸ்'களை நியமிப்பதால் அவை செயலற்றுப் போயுள்ளன. எனவே, இது விடயத்தில் செயற்றிறன் மிக்க இளமைத்துடிப்புள்ள, ஆற்றலுடன் தைரியமாகச் செயற்படும் தரப்பினருடன் அனுபவம் மிக்க நேர்மையான திடமான சிரேஷ்ட தரப்பினர் என்ற இரு தரப்பினரையும் நியமிப்பதே அரசின் காத்திரமான செயற்பாடாக அமையவேண்டியுள்ளது. அத்தோடு அவர்களது செயற்பாட்டில் மூக்கை நுளைக்காது, ஊக்குவித்து அவர்கள் கருமமாற்றுவதற்கு இடமளிப்பதேயாகும்.

**கே:** மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை குறித்துத் தங்களது கருத்து எவ்விதத்திலானது? இன்றைய அளவில் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை இழக்கப்படுவதற்கு அதுவுமொரு காரணியல்லவா?

**ப:** மனித உரிமைகள் என்ற விடயத்தைத் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவே மேற்குலகு பயன்படுத்திக் கொள்கிறது. எது எவ்வாறான போதிலும் இன்று மனித உரிமைகள் என்ற விடயமானது ஜனநாயகவாதத்தின் கட்டாயமானதொரு இலட்சணமேயாகும். முப்பதாண்டு கால யுத்தத்தில், இத்தகைய குறைபாடுகள் இடம்பெறாது போகுமானால், அத்தகைய கொடூரமான பயங்கரவாதத்தை தோற்கடித்துவிட இயலாது. ஆனாலும், இன்று யுத்தம் முடிவுக்கு வந்து, சமாதானம் நிலவும் புறச்சூழலொன்றில் மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தல் என்பது சிரமத்துக்குரிய கருமம் அல்ல. அது தொடர்பாக மேற்கொள்ளப் படவேண்டியுள்ள முக்கியத்துவம் பெறும் சிறப்புக் கருமம் நடைமுறையிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவைப் பெரிதும் பலப்படுத்தி, வெளித்தரப்புகள் குற்றம் சுமத்த இயலாத விதமாக அதனூடாக நாட்டில் உள்ளக ரீதியில் நிலவும் குறைபாடுகள் குறித்து ஆராய்ந்து, அவற்றை நிவர்த்தி செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனைகளை வழங்குவதாகும். ✱


# தமிழர் விடுதலைக் கூட்டணி

## நாடாளுமன்றத் தேர்தல் 08.04.2010



வீ.ஆனந்தசங்கரி

இல 01

பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், வன்னி மக்கள், சிறையிலும் தடைமுகாம்களிலும் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்களுக்கு பரிகாரம் காண விழைவது தமிழர் விடுதலைக் கூட்டணியே!



த.தி.சம்பந்தர்JP

ஏழாலை

இல 03


எனவே உதயசூரியனுக்கு வாக்களித்து

இலக்கம் 1 க்கும் இலக்கம் 3 க்கும் விருப்பு வாக்குகளை அளித்து

வெற்றிபெறச் செய்யுங்கள்.

(95924)


# மரண அறிவித்தல்



## வல்லி சிவலிங்கம்

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பிளாக் வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி சிவலிங்கம் 31.03.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், இரத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பூமணி, பார்வதி மற்றும் சின்னத்தங்கச்சி( லண்டன்) தம்பு ஆகியோரின் அன்பு சகோதரரும் ரதி ( லண்டன்) சசிக்குமார் (ஜேர்மனி) ஜெயக்குமார்( லண்டன்)கனிபா (பிரான்ஸ்) கயன்( லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தம்( லண்டன்) துஸ்யந்தி (ஜேர்மனி) யாதா( லண்டன்) சதீஸ்( பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நதீஸ்,திசாக்( லண்டன்) ஜெலுக்ஷன்,ஜெவிசன்,ஜெவிசா( லண்டன்) றக்சிகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்லம், குலசிங்கம் (சுவிஸ்) மகாலிங்கம்(ஜேர்மன்) பத்ம நாதன் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் துரைராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4.04.2010 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சங்கானை கராச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

பிளாக் வீதி,
சங்கானை. (96323) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய தமிழ்ப் பெரு மக்களே...!

நான் இந் நாட்டில் நில்விய சூழ்நிலையில் மக்களை சுதந்திரமாக வாழ்வதற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பதற்கு இத் தேர்தலை பயன்படுத்துகின்றேன். இதற்கு எமது மக்களின் விருப்புக்களை சித்திரை மாதம் 8 ஆம் திகதி நடைபெற உள்ள வாக்களிப்பில் பயன்படுத்த வேண்டும் எனக் கூறிவருகின்றேன். இதனை பெரும்பாலான எமது சகோதர சகோதரிகள் ஏற்று இருப்பதை நான் செல்லும் இடமெல்லாம் காண முடிகிறது. இனிவரும் காலங்களில் எமது மக்கள் சுதந்திரமான தேர்தலை சந்திப்பதற்கு எனது தேர்தல் பிரசாரப்பணி பெரிதும் உதவியுள்ளது. இதனால் என் பின்னால் நிற்கும் மக்களின் பலம் நாளுக்கு நாள் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிக்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

என்னைப் போன்ற இளைஞர்கள் இனிமேல் சுதந்திரமாக தேர்தல்களைச் சந்திக்க வேண்டும் என்பதை நிரூபிப்பதற்கே நான் இக் களத்தைச் சந்திக்கின்றேன். எனக்குப் பின்னால் வயது வித்தியாசம் இன்றி எமது மக்கள் அணிதிரண்டு வருவது என்னை உற்சாகப் படுத்துகின்றது. இனி வரும் காலங்களில் தேர்தல்களில் ஆயுத கலாசாரத்திற்கு இம்முறை சாவுமணி அடிக்கப்பட வேண்டும் என்பதை சித்திரை 8 ஆம் திகதி தாங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளும் விதையாக விதைக்கப்பட வேண்டும். அந்த விதை சித்திரை 9 ஆம் திகதியில் இருந்து முளைத்து பெரிய ஆலமரமாக வளர்ந்து எமது சமுதாயத்திற்கு ஆனந்தம், அன்பு, கருணை நிறைந்த மக்கள் வெள்ளமாக வளர்ந்து எமது மண்ணை நேசிக்கும் கரங்களாக மாறவேண்டும்.

இந்த நிலையை பொறுக்க முடியாத தீயசக்திகள் கடந்த சில நாள்களாக எம்மை இம் மண்ணில் இருந்து அகற்றப் பார்க்கின்றனர். எங்களை அகற்றுவதற்கு பல விதமான உத்திகளை பாவித்தனர். அவற்றுக்கு மத்தியிலும் நமது பலம் பெரும் சக்தியாக மாறி விட்டதால் எனது உயிரைப் பறிக்க பார்த்தனர். அது தான் 1ஆம்திகதி அதிகாலை 12.30 மணிக்கு யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள இந்து மத குருமார் ஒன்றியத்திற்கு முன்னால் நடந்தேறியது.

அன்று ஜனாதிபதியின் வருகைக்காக துரையப்பா விளையாட்டரங்கை அலங்கரித்து விட்டு வரும் வழியில் E.B.C. என்ற ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்ட பார ஊர்தியில் ஆயுதக் கலாசாரப் பின்னணி கொண்ட குழுவினர் ஆயுதத்துடன் எம்மை வழி மறித்து உடனடியாக இம் மண்ணில் இருந்து வெளியேறுமாறும் நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து விலகி விடுமாறும் எனது தலையில் துப்பாக்கியை வைத்தபடி அச்சுறுத்தினர். அத்துடன் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த 8 தொண்டர்கள் தாக்கப்பட்டு 3 பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர். எனது வாகனம் எரிக்கப்பட்டது. தெய்வாதீனமாக நான் காப்பாற்றப்பட்டேன்.

இந்த நேரத்தில் அவர்களது வாகனமே எம்மைச் சுற்றி வளைத்து தாக்கியதை அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ், இராணுவ அதிகாரிகள் நன்கு அறிவர். அத்துடன் எமது சிறைப்பிடிக்கப்பட்ட தொண்டர்கள் இந்த மண்ணை விட்டு அகல வேண்டும் என்ற நிபந்தனையில் விடுவிக்கப்பட்டதால் அவர்களை நாங்கள் உயிர் ஆபத்திலிருந்து காப்பாற்ற கொழும்பிற்கு அனுப்பியுள்ளோம்.

இந்த நிலையை நான் மிகவும் தெளிவாக தங்களுக்கு தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் இச் செயலுக்கு நீங்கள் வாக்குகள் மூலம் பதிலடி கொடுத்து இனி வரும் சந்ததியை இம் மண்ணில் சுயகௌரவத்துடன் வாழ வைக்க என் போன்ற சகோதரர்களுக்கு வாக்குகளை வழங்கி 8 ஆம் திகதி அதிகாலையிலேயே சென்று வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



சாவகச்சேரியில் எமது சகோதரர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், எமக்கு நடந்தது போன்று காரைநகரில் நடந்த சம்பவம், இம் மாதம் முதலாம் திகதி யாழில் எமக்குநடந்த சம்பவம் யாரால் அரங்கேற்றப்பட்டன என்பதை எம் மக்கள் நன்கறிவீர்கள். இதன் பிரதிபலிப்பை 8 ஆம் திகதி சித்திரை மாதம் மக்கள் உறுதி செய்யும் போது இந்த அராஜகக் கும்பல்கள் இம் மண்ணை விட்டு ஓட வேண்டிய நிலையை அறிந்து மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நாம் அறிவோம்.

இச் சம்பவம் சம்பந்தமாக நாம் சட்டத்தின் உதவியை நாடி உள்ளோம். முதலாம் திகதி நடந்த சம்பவத்தை நான் அரசு சார்பானவராக இருந்தாலும் சட்டத்தை மதித்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளேன். ஆனால் இன்றைய யாழ். மேயருடைய 2/4 தினக்குரல் பத்திரிகை செய்தியிலிருந்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்யாது கௌரவ அமைச்சருக்கு முறையிட்டதிலிருந்து யாழ் மேயர் சட்டத்தை மதிக்க தவறிவிட்டார். எந்தக் கட்சியாக இருந்தாலும் சட்டத்தைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பொறுப்பு மேயருக்கு உண்டு. மேயரின் கூற்றுகளுக்கு நாம் விரைவில் சட்டத்தின் உதவியுடன் அதற்கான நடவடிக்கை எடுத்து பத்திரிகைகளில் வெளியான குறிப்பிட்ட செய்தியை நீதிமன்றத்தின் மூலம் மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்துவோம்.

இதுவரையும் அரசியலில் ஈடுபடாது வெளிநாட்டில் உயர்கல்வியை கற்று பண்பாடாக வளர்ந்த நானோ என்னைச் சார்ந்தவர்களோ பெண் மேயரை தாக்கியதாக வெளியான செய்தி பெரிதும் பாதித்துவிட்டது. இம் மேயர் ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேயரின் கருத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. எமது மக்கள் தலைநிமிர்ந்து வாழவே எனது உயிரையும் துச்சமென மதித்து இன்று உங்களுடன் இணைந்து கொள்கின்றேன். எமது மக்களின் ஆயுத மற்ற கரங்களைப் பலப்படுத்த சித்திரை 8 ஆம் திகதி அதிகாலையிலேயே சென்று வாக்களிக்குமாறும் சகலரையும் இவ் வாக்களிப்பில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய இளம் சந்ததியினரைக் காப்பாற்ற இன்றைய தேர்தலில் மக்கள் வாக்குகளை ஆயுதமாக பயன்படுத்தி, என்னுடன் அணிதிரண்டு வருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.




அங்கஜன் இராமநாதன்

**Angajan Ramanathan** B.ENG (HON), MBA

www.angajanramanathan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

# எஸ்.எக்ஸ். குலநாயகம்



## வடமராட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தொடரவேண்டும்.

வடமராட்சியின் வாக்காளர் பெருமக்களே,

**எஸ்.எக்ஸ். குலநாயகத்திற்கு**

*உங்கள் வாக்கை வழங்குங்கள்.*

தமிழ் அரசியலில் 40 ஆண்டுகாலம் பட்டை தீட்டப்பட்டவர் குலம்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

**எஸ். எக்ஸ். குலநாயகம்** 12

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |




## தேவை

எமது நிறுவனத்தினால் ஏப்ரல் மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிக்கு யாழ்.நகரை அண்மித்ததாக பின்வரும் சேவைகளை வழங்க ஆர்வமுள்ளோர் எமது அலுவலகத்துடன் 07.04.2010ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

01. தங்குமிடத்திற்கான வீடுகள் (அனைத்து அடிப்படை வசதிகளுடன்).
    Guest Houses with A/C & Non A/C Facilities
02. குளிரூட்டப்பட்ட அறைகள்
03. வான் சேவை - குளிரூட்டிய மற்றும் சாதாரண வசதிகளுடன்.
04. Restaurants & Catering Services

தலைவர், வர்த்தக தொழிற்துறை மன்றம்,
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(சி/566395)

## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி சிவானந்தன்

(இளைப்பாறிய ஆசிரியை, ஞானசாரியர் கல்லூரி)

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், சோழியவத்தை, நரசிம்மர் கோயிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டியை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவானந்தன் (இளைப்பாறிய ஆசிரியை) 31.03.2010 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தன் (இளைப் பாறிய பொறியியலாளர்-புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், கலாமதி, மோகமதி (USA), சுமதி, வரகுணன் (USA), சசிமதி (கனடா), தயாமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வாகீசன் (USA), தேவசோபினி (USA) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிவிசா (USA), சரண்யா (USA), அக்ஷயா (USA), கதிரோன் (USA), விசாகன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (தம்பிரான்)-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா- இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இலட்சுமியம்மா, காலஞ்சென்ற உமையம்மா மற்றும் பத்தினியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாகாந்தனின் (சுவீடன்) அன்புப் பெரியதாயாரும், கௌரி திலகனின் அன்புச் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று (சோழியவத்தை, நரசிம்மர் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி) பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8மணியளவில் துன்னாலை தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
தொ.பே.இல. 0212263147

சோழியவத்தை நரசிம்மர் கோவிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(சி/566385)

சிவமயம்

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
27.11.1922

மறைவு
14.03.2010

சங்கத்தானையைச் சேர்ந்த பிரபல சோதிடரும் ஓய்வு பெற்ற கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தருமான மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியான

### அமரர் சரஸ்வதி மார்க்கண்டு

திதி: அபரபக்க சதுர்த்தசி

ஆலம் விழுதுகள் போல் உறவுகள் ஆயிரம் வந்தும் என்ன
வேர் என நீ இருந்தாய் அதில் நாம் வீழ்ந்து விடாதிருக்க
எமைக் காப்பாய் அம்மா !!!...

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 14.03.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர் சரஸ்வதி மார்க்கண்டு அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (03.04.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சுவீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
தொ.பே: 0776078809

(சி/566393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநில சுயாட்சியை இலக்காகக் கொண்ட தீர்வை தமிழர்கள் ஓரணியாகத் திரண்டு பெற முயலவேண்டும்

## இந்தியா எமக்கு உதவத் தயாராக இருக்கிறது என்கிறார் வரதராஜப்பெருமாள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

* பூரண மாநில சுயாட்சியை இலக்காகக்கொண்டு தமிழ்மக்களின் தீர்வு அமைய வேண்டும். இந்தத் தீர்வை வன்முறையற்ற போராட்டம் மூலமாக சிங்கள மக்களின் மனங்களைத் தட்டி எழுப்பக்கூடியதாக முன்னெடுக்கவேண்டும்.

* சகல மக்களும் ஒன்றுபட்டு வாழக்கூடிய வகையில் தீர்வை எட்டுவதன் மூலமே சமாதானமாக - சமத்துவமாக வாழக்கூடிய சூழல் உருவாகும்.

* தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை ஆகிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பாக அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியின் முக்கியஸ்தரும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான அண்ணாமலை வரதராஜப் பெருமாள்.

யாழ்.நகரில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

தேர்தல் காலத்தில் நான் யாழ்ப்பாணம் வந்துள்ளதை வைத்து தேர்தல் பிரசாரத்தை மையப்படுத்தி வந்துள்ளேன் எனக் கருதலாம். ஆனால் தேர்தலை மையப்படுத்தி இங்கு நான் வரவில்லை.

தேர்தல் களத்தில் தற்போது தலைவர்கள் பலரும் உற்சாகமாகக் கருத்துக்களைக் கூறி வருகின்றார்கள். அவர்கள் எத்தகைய கருத்துக்களை கூறுகிறார்கள் என்பதை அறிவதும் நான் இங்கு வந்த நோக்கங்களில் ஒன்று.

யுத்தம் முடிவடைந்து ஜனநாயக சூழல் ஓரளவு ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் படுகொலைகள், கடத்தல்கள், மிரட்டல்கள் குறைந்துள்ளன. அப்படியான நேரத்தில்தான் நான் இங்கு வந்துள்ளேன். இந்த நிலைமைகளையும் நேரில் அறிந்துகொள்வதும் எனது வருகையின் மற்றொரு காரணமாகும்.

### மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள ஆவல்

தமிழ்மக்களின் அரசியல் பகிர்வு, வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்காலம் ஆகியன தொடர்பாக அறிந்துகொள்வதும் எனது நோக்கமாகும். மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவும் ஆவலாக - விருப்பமாக இருக்கின்றேன். பிரிவினையா? சமஷ்டியா? மாநில சுயாட்சியா? இவற்றில் எந்தத் தீர்வில் மக்களின் நாட்டம் உள்ளது என்பதை அறியவும் வந்துள்ளேன். யுத்தத்தின் பின் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக மக்களின் கருத்து எவ்வாறு உள்ளது என்பதையும் அறியவிருக்கிறேன்.

தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் அவர்களின் நெருக்கடிகள் தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் எடுத்துக்கூறவேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கிறது. தமிழீழப் போராட்டத்தில் முன்னின்று உழைத்தவன் என்ற வகையிலும் வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காரணத்தாலும் இந்தக் கடப்பாடு எனக்க உண்டு எனக் கருதுகிறேன்.

### எனக்குள்ள முக்கிய பொறுப்பு

அரசியல்தீர்வு, இடம்பெயர்ந்தோரின் மறுவாழ்வு, யுத்தத்தால் அழிந்த பிரதேசங்களின் புனர்வாழ்வு ஆகியவற்றில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பும் எனக்கு உண்டு.

இலங்கை அரசின் அங்கமாகவோ அமைச்சராகவோ அல்லாமல் முன்னாள் முதலமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியுடன் உள்ள ஜனநாயக நட்பு அடிப்படையில் ஆளும்கட்சியின் உள்ள முற்போக்குச் சக்திகளுடன் உள்ள நீண்டகால உறவின் அடிப்படையில் இலங்கை அரசுடன் பேசலாம் என்று கருதுகிறேன்.

அவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மக்களின் நலன் சிங்கள மக்களின் நலன் ஆகியவற்றில் சமன்பாட்டைக் கண்டு முன்னோக்கிச் செல்லாம் எனக் கருதுகிறேன்.

### ஒரு லட்சம் கோடி ரூபா யுத்தச் செலவு

வன்முறைகளால் எந்தவித பலனையும் காணமுடியாது. யுத்தத்துக்கு ஒருலட்சம் கோடி ரூபா செலவாகியுள்ளது. மக்களின் 4 லட்சம் கோடி சொத்துக்கள் அழிந்துள்ளன. அத்துடன் ஒரு தலைமுறையை அப்படியே இழந்துவிட்டோம். 30 வருடங்கள் பின்நோக்கிச் சென்றுள்ளோம்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது தமிழர்களாகிய நாம் 60 வருடங்கள் பின்நோக்கிச் சென்றுள்ளோம். நவீன யுகத்தில் நாம் காலடி எடுத்து வைக்கவேண்டும்.

எமது மக்களிடம் மூளைத் திறன் இருக்கிறது. கடும் உழைப்பும் இருக்கிறது. இரண்டும் சேர்ந்தால் நாம் முன்னேறமுடியும். பின்தங்கியிருக்கவேண்டிய தேவை இருக்காது.

### மந்திரக்கோல் எதுவும் என்னிடம் இல்லை

என்னிடம் எந்தவிதமான மந்திரக்கோலும் இல்லை. மக்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் அவர்களை முன்னேற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கடந்த காலங்களில் 'பொடியன்கள் தீர்மானிப்பார்கள்' என்று இருந்த நிலை இப்போது மாறிவிட்டது. கல்விமான்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் என நம்பிக்கையுடன் திரண்டு ஒரே சக்தியாக முன்னேறவேண்டும். எவரும் எதையும் எமக்குச் சும்மா தரமாட்டார்கள்.

சர்வதேசமாக இருந்தால் என்ன இந்தியாவாக இருந்தால் என்ன அவை தத்தமது நலனின் அக்கறைகொண்டே செயற்படும். இந்தியாவின் நலனையும் உள்வாங்கி எமது நலனுடன் சமன்பாடு கண்டு நாம் முன்னேறவேண்டும்.

தோல்வியில் முடிந்த கடந்த காலத்தின் அனுபவங்களைக் கொண்டு புதிய பாதையில் செல்லவேண்டும். 30 ஆண்டுகளில் பல தலைமைகள் அழிக்கப்பட்டதால் தம்மை வழிநடத்தப் புதிய தலைமைகள் இல்லை என்ற மக்களின் எண்ணத்தை மாற்றவேண்டும்.

### தமிழர் அணி திரள வேண்டும்

எதிர்காலம் குறித்து நம்பிக்கை அளிக்கக்கூடிய புதிய தலைமைகளை உருவாக்கவும் சமூக பொருளாதாரத்தில் வளர்ச்சி காணவும் தமிழ்மக்கள் அணிதிரள வேண்டும்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் யாழ்ப்பாணம் என்று ஒரு நாடு இருப்பதை சர்வதேசம் க்ண்டுகொண்டது. அதன் பின்னரே யாழ்ப்பாணத்தின் நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்க சர்வதேசம் முன்வந்தது.

இந்த நிலையில் தமிழ்மக்களுக்கு கிட்டிய பல சந்தர்ப்பங்களையும் நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை. எதிர்காலத்தில் சிங்கள தமிழ்மக்கள் சமத்துவமாக வாழக்கூடிய நிலை உருவாக்கப்படவேண்டும்.



### பிரிவினைக்கு இனி இடமில்லை

பிரிவினை என்ற பேச்சுக்கே இனி இடமில்லை. எமது நியாயமான - நீதியான - கோரிக்கைகளை முன்வைக்கும் போது சிங்கள மக்களின் மனங்களும் திறக்கப்படும். அதற்கான நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டும்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் எமது பிரச்சினைக்கு ஆரம்ப படிக்கல்லாக அமைய வேண்டும். கடந்த காலத்தில் அந்தத் திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறித்த வியாக்கியானங்களிலும் நடைமுறைகளிலும் ஏற்பட்ட முரண்பாடே தோல்விக்கு காரணமாகின.

வழங்கப்படும் ஒவ்வொரு அதிகாரப் பரவலாக்கல் விடயமும் சரியாக வியாக்கியானம் செய்யப்படவேண்டும்.

தேசிய பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு ஆகியன தவிர்ந்த சகல விடயங்களுக்கும் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும்.

பூரண மாநில சுயாட்சியை இலக்காகக் கொண்டே எமது மக்களின் தீர்வு அமைய வேண்டும். அதற்காக வன்முறையற்ற விதூத்தில் சிங்கள மக்களின் மனத்தைத் தட்டிஎழுப்பக்கூடிய வகையில் போராட வேண்டும்.

யாரையும் பழிவாங்கும் நோக்கத்துடன் எமது போராட்டம் அமையாமல் இந்த நாட்டுக்குள் சிங்கள மக்களுடன் சம உரிமையுடன் வாழும் நில்லையைத் தோற்றுவிக்கக் கூடிய வகையில் அமையவேண்டும். யாருக்கும் தலைகுனியமாட்டோம் என்பதை திடமாக எடுத்துக்கூற வேண்டும்.

இந்தியா எமக்கு சகல வழிகளிலும் உதவத் தயாராக இருக்கிறது. எமது நாட்டுடன் இந்தியா முரண்பாடற்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலைப் பயன்படுத்தி எமது தீர்வை அபிவிருத்தியைக் காண சகலரும் ஓரணியில் திரண்டு செயற்படவேண்டியது அவசியம் - என்றார். (ஒ-1-50)

# சீனாவின் சவாலைச் சந்திக்கத் தயார் புதிய இராணுவத் தளபதி அறிவிப்பு



டில்லி,ஏப்.3

சீனா உட்பட எந்த நாட்டின் சவால்களையும் சந்திக்க இந்திய இராணுவம் தயார் நிலையில் இருக்கிறது - என்று புதிய இராணுவத் தளபதி வி.கே.சிங் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதியாக இருந்த தீபக் கபூரின் பதவிக்காலம் முடிவடைந்ததால், அவர் ஓய்வு பெற்றார். அதையடுத்து, இந்தியாவின் 26 ஆவது இராணுவத் தளபதியாக விஜய்குமார் சிங் என்ற வி.கே.சிங் நேற்று முன்தினம் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

59 வயதான இவர், 2 ஆண்டுகளுக்கு இப்பதவியை வகிப்பார். இவர் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் அனுபவம் வாய்ந்தவர்.

சீனாவின் இராணுவ நவீனமயமாக்கல் திட்டம் குறித்து இராணுவ அமைச்சகம் தெரிவித்த கவலை தொடர்பாக, வி.கே. சிங்கிடம் செய்தியாளர்கள் கருத்துத் கேட்டனர்.

அதற்கு வி.கே.சிங் கூறியவை வருமாறு -

இராணுவ அமைச்சகம் தெரிவித்த கவலை சரியானதுதான். செய்தியாளர்கள் மூலம் நான் நாட்டு மக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். நமது இராணுவம், எந்தத் சவாலையும் எதிர்த்து நிற்கும். நமக்கு எதிரான எந்த சவாலையும் சந்திக்க நன்றாக தயார்நிலையில் உள்ளது.

பட்ஜெட்டில் இராணுவத்துக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதை வைத்து இராணுவத்தை நன்றாகத் தயார் படுத்துவோம்.

இராணுவத்துக்கு தலைமை ஏற்பதை நினைத்து பெருமைப்படுகிறேன். எந்த அமைப்புக்கும் உள் ஆரோக்கியம் மிகவும் முக்கியம். உள் ஆரோக்கியம் நன்றாக இருந்தால்தான், வெளி ஆபத்துகளை எதிர்த்து போரிட முடியும். எனவே, இராணுவத்தின் உள் ஆரோக்கியத்துக்கு முன்னுரிமை அளிப்பேன். நமது பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றில் உரிய கவனம் செலுத்தப்படும் - என்றார்.

## ராமேஸ்வரம் மீனவரின் படகு மீட்பு

இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர் படகு மீட்கப்பட்டு நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்டது.

கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகு தலைமன்னார் கடற்படை முகாமில் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் படகை மீட்பதற்காக அரசின் அனுமதி பெற்று கடந்த மாதம் 27 இல் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த டொமினிக் ஏன்பவரின் படகில் ஏழு மீனவர்கள் தலைமன்னார் சென்றனர். இவர்கள் அங்கு நான்கு நாள்கள் தங்கி, கடலில் மூழ்கிய நிலையில் இருந்த படகை மீட்டு நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் திரும்பினர். இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்ட படகை பார்வையிட்ட புலனாய்வுத் துறையினர் மீனவர்களிடம் விசாரணை செய்தனர்.

# இலங்கையில் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் இந்தியா தீவிரம்

## தூதர் அசோக் கே.கந்தா தகவல்

கொழும்பு,ஏப்.3

இலங்கையில் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியில் அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் இந்தியா தீவிரமாகப் பங்காற்றி வருகிறது - என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.கந்தா தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

### இந்தியச் செய்திகள்

இலங்கையின் வடக்குப் பகுதியில் போரால் சேதமடைந்த வீடுகளைச் சீரமைப்பதற்காக இந்தியா அனுப்பியுள்ள சிமெந்து மூடைகளை இலங்கையிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி கொழும்பில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

இலங்கை அரசு முன்வைக்கும் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் அடிப்படையில் இந்த உதவிகளை இந்தியா அளிக்கிறது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் மறுகட்டமைப்புப் பணிகள் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளதால், இந்தியா தனது உதவிகளை விரைவுபடுத்தி வருகிறது - என்றார்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், வீடுகளைச் சீரமைக்கவும் இந்தியா மொத்தம் 4 லட்சம் சிமெந்து மூடைகளை வழங்கவிருக்கிறது. இதில் முதல் கட்டமாக 10ஆயிரம் சிமெந்து மூடைகளை இலங்கையின் மறுகுடியமர்த்துதல் மற்றும் பேரழிவு நிவாரணப் பணிகள் அமைச்சகச் செயலர் யு.எல்.எம். ஹால்தீனிடம் இந்தியத் தூதர் அசோக் கந்தா ஒப்படைத்தார்.

'இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்களின் மறுவாழ்வுக்காக ரூபா 1,250 கோடி வழங்கப்படும் என இந்தியா கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்தது.

இதுதவிர, இலங்கையின் வடக்குப் பகுதிகளை இணைக்கும் ரயில் பாதைகளைச் சீரமைக்க இந்தியா சுமார் ரூபா 1,912 கோடியை கடனுதவியாக அளிக்கிறது.

இன்னும் 15 நாள்களில்
JAFFNA International 2010 TRADE FAIR
2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தந்தை செல்வா வழியில்....
கடமை வீரர் பண்டிதர் கா.பொவின்
நெறியில்... தமிழர் தேசியத்தை நோக்கி...!
பேராசிரியரின் வெற்றிப் பயணம்!

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

பேராசிரியர்

## இரா.சிவசந்திரன்

நல்லரசியல் நாகரிகத்தை
உருவாக்குவது
உங்கள் கரங்களில்தான் உள்ளது



X 5 இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010



சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்
இல. 06



கா.கதிர்காமநாதன்
(செல்வம்)
இல.03



T.V.கிருஷ்ணசாமி
(ஓய்வுபெற்ற பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்) இல.08

அன்பார்ந்த மக்களே!
* தமிழ் மக்களை அழிவுப் பாதையில் அழைத்துச்சென்ற அனைத்து தமிழ் தலைமைகளையும் நிராகரியுங்கள்.
* பேரினவாத ஆளும் வர்க்கக் கட்சிகளிடம் மண்டியிட்டு நிற்கும் தலைமைகளை நிராகரியுங்கள்.
* மக்களுக்கான மாற்று அரசியலைப் புதிய பாதையில் முன்னெடுக்க வரலாற்றுப் பட்டறிவோடு கேத்தல் சின்னத்திற்கு வாக்களியுங்கள்!

(96322)

புதிய ஜனநாயக கட்சியின்
சுயேட்சைக்குழு 06

X



தந்தை செல்வா

தமிழர் தாயகத்தின்
ஒற்றுமையைக் காத்திட
சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட



தளபதி அமிர்

## உங்கள் வாக்குகள்!

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

## நடேசு இராசேந்திரன்

(Dip. in Accy, APFA, AMA, FMAAT)



அவர்களை வெற்றிபெறச் செய்வோம்

X 4

பனைத் தொழில் வல்லுநர்கள்

# மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

யாழ்.வர்த்தகர்களினதும், மக்களினதும்
வசதி கருதி
"SVT கோபுரம் அரிசி ஆலை (வவுனியா)"
தனது மொத்த விற்பனை நிலையத்தினை

## "SVT கோபுரம் அரிசிக் களஞ்சியம்"

(K.K.S வீதி, இணுவில் ஆஸ்பத்திரி முன்பாக)

இன்று (03.04.2010) சனிக்கிழமை காலை 8மணி முதல் 9.20 மணி வரையுள்ள சுபநேரத்தில் திறந்து வைக்க இருப்பதால் வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

S.V.T அரிசிக்களஞ்சியம்,
K.K.S வீதி,
இணுவில்.
தொ.பே.இல. 0214921967

S.V. தனகேசவன்,
உரிமையாளர்,
S.V.T கோபுரம் அரிசி ஆலை,
மருக்காரம்பளை வீதி,
வவுனியா.

(96341)

## Net work Marketing Companyயின் தொழில் வாய்ப்பும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கும்

இடம் : யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
திகதி : நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை.
நேரம் : முற்பகல் 10.00 - 1.00
குறிப்பு: இல்வச அழகுக்கலைப் பயிற்சியும் இடம் பெறும்.

தொடர்பு: திருமதி சசிகலா நீதிராஜா,
தொ.பே.இல. 0772260573, 0718192258 (96342)

# மரண அறிவித்தல்



## திருமதி இலட்சுமி வன்னித்தம்பி

(மாதகல்)

மாதகலைப்பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தை 26-2/3, மூர் வீதி, சீகல் ஸ்கைலைன் மாடிமனைக் குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, கொழும்பு தெமட்ட கொடை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியையுமாகிய திருமதி இலட்சுமி வன்னித்தம்பி அவர்கள் 31.03.2010 புதன் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான தம்பிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்ற வன்னித்தம்பி (Enotomo logical Assistant) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகரத்தினம், விசாலாட்சி (கனடா), காலஞ்சென்ற சிவபாக்கியம், வேலுப்பிள்ளை (கனடா), திலகவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிநிவாசன் (UK), விமலச்சந்திரன் (UK), Dr.ஜெகப்பிரகாசன் (USA), வசந்தி (Dental Surgeon-UK), தயானந்தி (Dental Sergeon-வெள்ளவத்தை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.மாலினி (UK), ராஜி, Dr.ஜெகதீஸ்வரி (USA), Dr.ஞானபவன் (UK), Dr.சண்முகதாஸ் (ஆசிரி வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், செந்தூரன், பிரியதர்ஷினி, றொஜன், வாணி, மிதுலன், ஷர்மிலி, பிரசன்னா, கார்த்திகா, வராகினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 03.04.2010 சனிக்கிழமை பகல் 12மணியிலிருந்து இரவு 9மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும். ஈமக்கிரியைகள் 04.04.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகள் பகல் 11.30மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: Dr.சண்முகதாஸ் (மருமகன்).
தொ.பே. 0112504847.

# வேலைக்கு ஆள் தேவை

01. முச்சக்கரவண்டிச் சாரதி. 02. விற்பனைப்பிரதிநிதி. 03. சாரதி (AD). 04. உதவியாளர்.

நாளை (04.04.2010) முற்பகல் 10மணியளவில் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

தொடர்பு: தொ.பே.இல. 0776647976, 0771093300.
இல. 56, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (கி/566400)

# மரண அறிவித்தல்

## ஆசைப்பிள்ளை (கனகராசா) தியாகராஜா

(முன்னாள் உத்தியோகத்தர், மீன்பிடிக் கூட்டுத்தாபனம்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை (கனகராசா) தியாகராஜா 31.03.2010 அன்று காலமானார்.

அன்னார் கனகராசா-காலஞ்சென்ற அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினமயில்வாகனம் - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற ஞானப்பூங்கோதையின் அருமைக்கணவரும், கெங்காதரனின் அன்புத் தந்தையும், திருமதி பரிபூரணராணி சிவநாதன் (நீர்கொழும்பு), திருமதி யோகராணி-ராஜேந்திரன்(நியூசிலாந்து), சற்குணராசா(ஆஸ்திரேலியா), திருமதி ஜெயராணி - சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி புஸ்பராணி-மகாதேவன், ஸ்ரீதரன்(U.K), சத்தியசோதி, காலஞ்சென்ற சிவநாதன், ராஜேந்திரம், சியாமளா, சண்முகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பையா கனகராசா
(தந்தை)

(566398)

# மரண அறிவித்தல்



## திருமதி பரமு நாகம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 13ஐச் சேர்ந்தவருமான திருமதி பரமு நாகம்மா 31.03.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நாகமுத்து- தங்கமுத்துவின் மகளும், அமரர் சின்னத்தம்பி பரமுவின் மனைவியும், திருமதி நாகரட்ணம் நாகராசா-மகேஸ்வரி (மங்களம்), பரமு கைலாயபிள்ளை ஆகியோரின் தாயாரும், நாகரட்ணம் பரம்சிறி (அப்பன்-இத்தாலி), திரு.திருமதி அரியலிங்கம்-நாகசிறி (பிரான்ஸ்), நாகரட்ணம் சிறி இலங்கோ (நோர்வே), திரு.திருமதி கணேஸ்வரன்-சிறிமலர் (லண்டன்) ஆகியோரின் அம்மம்மாவும், நாகரட்ணம் நாகராசாவின் மாமியும், ராதா (இத்தாலி), சிவகங்கை (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.04.2010) சனிக்கிழமை வீட்டிலும், நாளை (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிறபகல் 4மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 21, புளூமென்டால் ஒழுங்கை, கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.
தொ.பே. 0776718178,
0112470057.

தகவல்:
அப்பன் (இத்தாலி),
ரங்கன் (நோர்வே).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வீரர்களின் போர்' நேற்று ஆரம்பம்; ஸ்கந்தா 102 ஓட்டங்களால் முன்னிலையில்

யாழ்ப்பாணம், ஏப்.-03

'வீரர்களின் போர்' என் வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத்தில் 102 ஓட்டங்களால் ஸ்கந்தா முன்னிலையில் உள்ளது.

நேற்றுக்காலை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஸ்கந்தா எட்டு விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து களம் இறங்கிய மகாஜனா 8 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இன்று தொடர்ந்து மகாஜனா அணி இன்று ஆடவிருக்கிறது.

எந்த அணி வெற்றி பெறப்போகின்றது என்பது இன்று மாலை தெரிந்து விடும்.

நேற்றைய ஆட்டத்தில் பிரதம விருந்திரனராக முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். கோபாலகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் எஸ். சிறீஸ்கந்தராசாவும் கலந்துகொண்டனர். (அ-1)

# சிங்கள வர்த்தக நகரமாகிறது யாழ்ப்பாணம்; எச்சரிக்கிறார் த.தே.கூ. வேட்பாளர் சிறீதரன்

யாழ்ப்பாணம், ஏப். 03

எமது மண் ஆக்கிரமிக்கப்படுகின்ற அதேவேளை, எமது மக்களுக்குச் சொந்தமான அனைத்து வளங்களும் சுரண்டப்படுகின்றன - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வரணியில் நடைபெற்ற தேர்தல் பிரசார நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

எமது மண்ணில் இருந்து எமது மக்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் எமது மக்கள் ஒவ்வொரு வேளை உணவுக்காகவும் போராடவேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

தமது சொந்தங்களைப் பிரிந்து மீள முடியாத சோகத்தில் வாடும் எமது மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது முள்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர்.

எமது மக்களுக்குச் சொந்தமான கடற்பரப்பில் அந்நிய மீனவர்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழர் தாயகக் கடற்பரப்பில் பெரும்பான்மை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு எமது மக்களுக்குச் சொந்தமான மீன் வளத்தை அள்ளிச் செல்கின்றனர்.

எமது பகுதிகளில் அபிவிருத்தி, புனரமைப்பு எனக் கூறி மேற்கொள்ளப்படும் வேலைகளில் சிங்களவர்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் எமது படித்த இளைஞர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் இன்னமும் வேலையில்லாமல் நாள்களைக் கழிக்கின்றனர்.

**பட்டதாரிகளுக்கு வாக்குறுதிகள்**

இதனை விடவும் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் வேலையற்ற பட்டதாரிகளை அழைத்து தமக்கு வாக்களிக்க வேண்டும், தமக்காக தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடவேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் சிங்கள வர்த்தக நகரமாக மாறிக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பிரதான தெருக்கள் எல்லாம் சிங்களவர்களே திரிகின்றார்கள். தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்ற சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்கின்றார்கள்.

தென்னிலங்கையில் இருந்து வருகின்ற சிங்களவர்களின் பணம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்களுக்குச் சேரக் கூடாது என்பதற்காக தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ள சிங்கள வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தின் தெருக்களை ஆக்கிரமித்துள்ளார்கள்.



வெளியிலிருந்து வருகின்ற சிங்களவர்கள் பொருள்களை யாழ்ப்பாணத்தில் தெருவோர விற்பனையில் ஈடுபடும் சிங்களவர்களிடமே பெற்றுச் செல்கின்றனர். இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கை.

தமிழ் மக்கள் எவரும் வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களிக்கக் கூடாது. அவ்வாறு வாக்களிப்பதாக இருந்தால் அது தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்று அரசு சர்வதேசத்திற்கு சொல்வதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

ஈ.பி.டி.பி. கட்சி வீணைச் சின்னத்தில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டிருந்தால் அவர்களின் ஆதரவாளர்கள் அந்தச் சின்னத்திற்கு வாக்களிப்பதைப் பற்றி யோசித்திருக்கலாம். காரணம் அந்தக் கட்சியும் தமிழ்க் கட்சியே என்பதால் ஆனால் அந்தக் கட்சியும் வெற்றிலைச் சின்னத்தின் கீழேயே போட்டியிடுகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் வாழ்ந்தாலும் சரி சர்வதேசத்தில் வாழ்ந்தாலும் சரி வன்னியில் மக்கள் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டபோது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

எனவே, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தெரிவை உறுதிப்படுத்தி, மக்களது உள்ளார்ந்த நிலைப்பாடு என்ன என்பதை இடித்துரைப்பார்கள் - என்றார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைப் பவனி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வடமராட்சியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. அவ்வேளை எடுக்கப்பட்ட படம் இது.

## தமிழ்க் கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் பொத்துஹரவிலுள்ள 'ரோமியோ' ஹோட்டலில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாம் மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை விரும்புபவர்கள். இன்று பலதுறைகளிலும் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. அரசியல்வாதிகள், அதிகாரிகள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், சமயத் தலைவர்கள் அனைவரும் தங்கள் சேவை கருதிச் செயற்பட்டு வருகின்றனர். இன்று அரசியல்வாதிகள் மக்களுக்குச் சேவை செய்யாமல் அரசியல் உல்லாசப் பயணிகளாகவே உள்ளனர்.

**யுத்தத்தைக் காட்டி வாக்குப் பிச்சை கேட்கிறது அரசாங்கம்**

அரசியலில் மக்கள் விடுதலை முன்னணி பொய் கூறியதில்லை. அமைச்சர்களாக பதவிகள் வகித்த காலத்தில் வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த யுகத்தில் தேவைகளை நிறைவேற்றவே நாம் இணைந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க வெற்றிக் கிண்ணச் சின்னத்தில் போட்டியிடுகிறோம். இன்று யுத்தத்தை காட்டியே அரசு வாக்குப்பிச்சை கேட்கிறது. யுத்தம் நிறைவடைந்து உள்ளது. ஜனநாயகமே இன்றைய தேவை.

பொன்சேகாவுக்கு கிடைக்கும் வாக்குகள் அனைத்தும் ஜனநாயகத்துக்குக் கிடைக்கும் வாக்குகள். நாம் நாடாளுமன்றம் சென்றாலும், செல்லாவிட்டாலும் ஜனநாயகத்தைப் போராட்டத்தின் மூலம் காப்பாற்றுவோம். அனைவருடனும் இணைந்து சகவாழ்வு அரசியலை முன்னெடுப்போம்.

ஊடகத்தை அடக்கிய ஜனாதிபதி தன் போலித் தேர்தல் வெற்றியைக் கொண்டாடுகிறார். அடுத்த அரசை அவர்கள் அமைத்தால் ராஜபக்ஷ குடும்பமும், அரசியலில் சண்டியர்களுமே ஆட்சி புரிவர். குடும்ப ஆதிக்கத்திற்கு உதவுபவர்களுக்கு மட்டுமே ராஜபக்ஷ அரசில் அனைத்தும் கிடைக்கும்.

**ஏப்ரல் 8 இன் பின்னர் சகவாழ்வு அரசு**

ஜெனரல் பொன்சேகாவே நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தியவர். அவருக்குக் கிடைத்த வாக்குகள் மூவின மக்களிடமிருந்தும் சமமாகக் கிடைத்தது. இதுவே மக்கள் சமமாக வாழக்கூடிய நிலையாகும். ஏப்ரல் 8 ஆம் திகதிக்கு பின்னர் அனைவரும் இணைந்து சகவாழ்வு அரசொன்றை உருவாக்குவோம். ஜனாதிபதிப் பதவியேற்கவுள்ள நவம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சகவாழ்வு அரசொன்று உருவாக்குவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியையும்,மக்கள் விடுதலை முன்னணியையும் ஒன்று சேரவிடாமல் தடுக்க ஜனாதிபதி முனைகின்றார். எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் ஐ.தே.மு. - ஜே.வி.பி. இணைந்து செயற்படும். இதில் கருத்து வேறுபாடு இல்லை.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்குப் பின்னரே எமது போராட்டம் உச்ச நிலை பெறும். அதற்கு அனைத்து மக்களும் பூரண ஆதரவு நல்க வேண்டும் - என்றார். (அ-சி)

## தேர்தலுக்கு முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களுக்கு முன்னரே தோற்கடித்தது - கடந்தவருடம் மே மாதம் இது இடம்பெற்றது.

ஈராக்கில் பிரிட்டிஷ் படைகளை நிலைகொள்ளச்செய்தது, மனித உரிமைகள் மீறப்பட்டமை ஆகியவை குறித்து விசாரிப்பதற்கான குழுவொன்றை அமைப்பதற்கு பிரிட்டனுக்கு ஒன்பது வருடங்கள் எடுத்தன. எனினும்,இலங்கையைப் பொறுத்தவரை ஒன்பது மாதங்களே ஆகியுள்ளன.

**இன்னும் சிறிதுகாலம் அவகாசம் வழங்கியிருக்கலாம்**

ஆகவே, செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் இலங்கைக்கு இன்னும் சிறிது கால அவகாசம் வழங்கினால் அது சிறப்பானதாக அமையும்.

ஐ. நா. செயலாளர் நாயகம் இலங்கை குறித்த குழுவை அமைக்கும் முடிவைத் தேர்தலுக்கு முன் ஏன் எடுத்தார் என்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

எங்களாலும் அவசர ஏற்பாடுகளைச் செய்ய முடியும். எனினும், இதனால் எவ்வித பலாபலனும் ஏற்படப்போவதில்லை.

இன்னொரு நாட்டின் உள்விவகாரங்கள் குறித்து ஆராயும் குழுவை அமைப்பதற்கு முன்னர் பாதுகாப்புச் சபையின் அனுமதியை பான்-கீ-மூன் பெற்றிருக்க வேண்டும் - என்றார். (அ-சி)

## யாழ். பல்கலைக்கழக மாணவன் தூக்கிட்டு மரணம்?

யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவனொருவர் நேற்று நண்பகல் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார் என்று கூறப்பட்டது. இவ்வாறு மரணமானவர் பாலசிங்கம் கருணாநிதி (வயது -25) எனத் தெரியவருகிறது.

இச்சம்பவம் குறித்து மேலும் கூறப்படுவதாவது :-

யாழ். பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்று வந்த இவர், பூநகரியைச் சேர்ந்தவராவார். வன்னி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து அகதி முகாமில் தங்கியிருந்த இவர் கடந்த டிசெம்பர் மாதம் மீண்டும் யாழ். பல்கலைக் கழகத்தில் இணைந்திருந்தார்.

தட்டாதெருச் சந்தியில் உள்ள வீடொன்றில் தனது சகோதரருடன் வாடகைக்கு அறை எடுத்துத் தங்கியிருந்த இவர், யாருமில்லாத வேளையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. வன்னி யுத்தத்தால் பெரிதும் மனப்பாதிப்புற்றிருந்த கருணாநிதி, தனித்திருந்தவேளை சுருக்கிட்டுத் தற்கொலை செய்தார் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இவருடைய சடலம் நேற்று மாலை 6 மணியளவில் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (அ-6)

## பொன்சேகாவுக்கு தினமும் வைத்திய பரிசோதனை

ஜெனரல் சரத் பொன்சேகாவை தினமும் கடற்படையின் விசேட வைத்திய நிபுணர்கள் பரிசோதித்து வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் உடல் நிலை ஆரோக்கியமாக உள்ளது என்றும் அவர் கூறினார். சரத் பொன்சேகாவின் வைத்திய பரிசோதனை தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம், ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2224 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப் பில் 'T' எனும் ஆங்கில எழுத்தும், 2/1/7/9/5/8 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இடமிருந்து வலமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 2/1/7/9/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/7/9/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/9/5/8 என்ற இலக்கங்களைப் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 117 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,196 பேருக்கு நான்காம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்கள்ள வைத்திக்கும் 12,014 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8 என்ற இலக்கத்தைக் கொண்ட சீட்டுக்களை வைத்திக்கும் 119, 045 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான அமைப்பில் 2/1/7/9/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/1/7/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு எட்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/1/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,195 பேருக்கு ஒன்பதாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,979 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'T' எனும் ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திக்கும் 47,539 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா 20 ரூபா கிடைக்கவுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் நிவாந்தநுறை அடிப்படை சபை, யாழ்ப்பாணம்

# ஐ.தே.க. - ஜே.வி.பி. இணைந்து தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசு?

## ரணில் - அனுரகுமார ரகசியப் பேச்சு

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் முன்னணி உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் எதிர்வரும் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து புதிய அரசு ஒன்றைக் கூட்டாக நிறுவுவது குறித்து ரகசியப் பேச்சுகளை மேற்கொண்டுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இப்பேச்சுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ரணில் விக்கிரமசிங்கவின் சகோதரர் சன்ன விக்கிரமசிங்கவின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றன என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சியினருக்கு 114ஆசனங்கள் கிடைக்கலாம். என்று கருத்துக் கணிப்பொன்று வெளியாகியுள்ளமை குறித்து இப்பேச்சுகளின் போது தீவிரமாக ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. ஐ.தே.கவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஜனநாயகத் தேசிய முன்னணியினரோ, ஜனநாயக தேசிய முன்னணியினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஐ.தே.கவினரோ தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என கொள்கையளவில் இப்பேச்சுகளின்போது இணக்கம் காணப்பட்டது என்றும் அறியப்படுகிறது.(அ-சி)

# மனித உரிமை மீறல்கள் காரணமாக வெளிநாட்டுத் தலையீடு அதிகரிப்பு

## ஜனநாயக தேசிய முன்னணி சாடல்

கொழும்பு, ஏப். 03

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களின் காரணமாகவே வெளிநாட்டு தலையீடுகள் ஏற்பட்டன என ஜனநாயக தேசிய முன்னணி கட்சி அறிவித்துள்ளது.

அரசின் மனித உரிமை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளால் வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றன என்று ஜனநாயக தேசிய முன்னணியைச் சேர்ந்த புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசு தொடர்ச்சியாக ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகிறது என சிரேஸ்ட விரிவுரையாளர் சந்திரகுப்த தெனுவர தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்கு சார்பான செய்திகளை வெளியிடுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)

### தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்படவிருந்தது எனவும், இவர்களில் பெண் ஒருவர் அடங்குகிறார் எனவும் ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜா உரிமைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-சி)

# ஆட்சிக்கு வரும் அரசு தமிழருக்கு எதிரான பாரபட்சங்களுக்கு முடிவு கட்டவேண்டும்

## சர்வதேச கிறிஸ்தவ சஞ்சிகை வலியுறுத்து

கொழும்பு, ஏப்.03

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வருகின்ற அரசு தமிழர்களுக்கு எதிரான அனைத்து விதமான பாரபட்சங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும் என்று கிறிஸ்ரியன் சயன்ஸ் மொனிற்றர் (CHRISTIAN SCIENCE MONITOR) என்கின்ற சர்வதேச அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஆட்சி அமைக்கின்ற அரசு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு திட சங்கற்பம் பூண்டு செயற்படுகின்றபோதே இலங்கையின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்று இந்த அமைப்பு அறிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அதிகார துஷ்பிரயோகம் நடவடிக்கைகளில் ஈடுபட்டதைப் போல் இத்தேர்தலிலும் மஹிந்த தரப்பினர் துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டால் சமாதானம், அமைதி ஆகியன பற்றிய தமிழர்களின் எதிர்பார்ப்பு குலைந்து போய் விடும் என்று இந்த அமைப்பு சுட்டிகாட்டி உள்ளது. (அ-சி)

### வாக்குப் பெட்டிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பின்னர் சீல் வைக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் கூறியிருந்தார்.

இதேபோன்று, வாக்கெடுப்பு முடிவடைந்து வாக்கெடுப்பு நிலையத்துக்கு கொண்டுசெல்வதற்கு முன்னரும் ஸ்ரிக்கர் ஒட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(அ-சி)

### தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியைத் தடை செய்யுமானால் - அதனை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்.

அப்படி அவர்கள் தடை செய்வார்களானால் அது தமிழ்மக்களின் விடுதலைப் பாதையை விரைவுபடுத் துவதாகவும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் தமிழ்மக்கள் தங்கள் அரசியல் சுதந்திரத்தை, அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை அடைவதைத் தீவிரப்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் - உதவும் என்றார்.

(அ-6)


**உடன் தேவை**

B பொசிடிவ் உடைய நபர் ஒருவருக்கு அதே ரகத்தைச் சேரந்த சிறுநேரகம் உடன் தேவை. அல்லது O பொசிடிவ் சிறுநேரகம் தேவை.

தொடர்புகளுக்கு:

0770296479, 0212264691

(தி/566387)

**நினைந்திகா அழகு நிலையம்**

பிரதான வீதி - நெல்லியடி

(R.K and Son கடையின் மேல் கட்டடத்தில்)

- புருவம் சீர் செய்தல்
- முடி நேராக்குதல்
- முடி சுருளாக்குதல்
- முடி நிறமூட்டுதல்
- பேஷியல்
- மணப்பெண் ஒப்பனை, ஐசிங் கேக் மற்றும் அழகுக் கலை வகுப்புக்களும் நடைபெறும்.

குறிப்பு: ஒரு மாதப் பயிற்சியும் 2மாத வகுப்பும் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

தொடர்பு: தொ.பே. 0776396652, 0776392349

**சுயேச்சைக்குழு - 10**



X 5

கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை

முதன்மை வேட்பாளர்

(முன்னாள் கல்விப்பணிப்பாளர்)

**SUBRA - (14)** சித்தங்கேணி

| PHYSICS - 2010 | PHYSICS - 2011 |
| --- | --- |
| சடமும் கதிர்ப்பும் | செப்ப பௌதீகவியல் |
| ஆரம்பம்:- 03/04/2010 (சனி) | |
| SAT, SUN 4-5PM | SAT, SUN 5-6PM |

By. SCIENCE CORNER

வழமையான ஆசிரியர்

**வெளிவந்துவிட்டது**

மட்டக்களப்பு சந்திரகுமார் அவர்களின் தரம் 1முதல் 5வரையான சகல பயிற்சிப் புத்தகங்களும் 2010ஆம் ஆண்டு புதிய பதிப்பு விற்பனையாகிறது.

வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அன்னை புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0212229881

தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. 0212270003

(தி/566107)

**THE SCIENCE CORNER** CLOCK TOWER LANE, JAFFNA

| CHEMISTRY ஆண்டு ரீதியான வினா விடை (1995-2009 வரை) | CHEMISTRY - 2011 INORGANIC |
| --- | --- |
| மாலை நேர வகுப்பு TUE, THU 6.15 - 7.15 PM | WED, FRI 5.15 - 6.15PM |

By.அன்பு

**யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!**

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்

**BIT**

பயிற்சி நெறி இப்போது...

யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...

விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010

ESOFT The Leader in Professional ICT Education

114, Navalar Road, Jaffna.

Call @ 021 222 4142

077 309 9 308

**தமிழ்க் காங்கிரஸ்**



X 10


S.வரதராஜன்

(முதன்மை வேட்பாளர்)

பிரபல பொருளியல் ஆசிரியர்

**சுரேஷ் க. பிறேமச்சந்திரன்**

நிலையானதும் வலுவானதுமான தீர்வை நோக்கி..



X 3

இலங்கை தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

**SM CONSULTANT SERVICE**

UK STUDENT VISA

GCE O/L English: C/S + GCE A/L 3 Pass உடன் உடனடியாக விசாக்கள் பெற்றுத்தரப்படும்

விண்ணப்பிக்க தகமைஉள்ளோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களைச் சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

STUDY IN INDIA

B.E, B.Sc, B.Ed, B.C.A, BBM, B.Com, BPT, BA,LL.B, LL.M, M.Sc, MBBS, MBA போன்ற கற்கைநெறிகளை, இந்தியாவின்(# University of Madras # SRM University # Manipal University இன்னும் இது போன்ற) பிரபலமான பல்கலைக்கழகங்களில்கற்பதற்கு உடனடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

STUDY IN UKRAINE

Lungansk & Crimea State Medical University-(Ukraine) இல் இணைந்து சிறீலங்கா medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக வரவிரும்பினால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

பகுதி நேரவேலை வாய்ப்புடன் உயர்கல்வியைத் தொடர Poland, Zypres, Singapoor, Malaysia, USA, Canada, Australia, Newzeeland போன்ற நாடுகளுக்கு விசாக்களைப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

அனைத்து விபரங்கட்கும் தினமும் (ஞாயிறு உட்பட) காலை 800 மணிமுதல் மாலை 500 வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம். அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.

021 222 3818

021 567 3818

077 452 8818

தொடர்புகளிற்கு:

Email: ...04_2009@yahoo.com

இல: 148,கோயில்வீதி, (புனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

சுதந்திர இலங்கையின் 07 ஆவது நாடாளு மன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் பல அரசியல் கட்சிகளையும், சுயேச்சைக். குழுக்களையும் சேர்ந்த 8 ஆயிரத்து 226 வேட்பாளர்கள் போட்டியிடு கிறார்கள். இவர்களில் 196 பேர் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மக்களால் தெரிவு செய்யப் படப் போகிறார்கள்.

வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிப்பது, நாடாளு மன்ற உறுப்பினர்கள் எப்படி தெரிவு செய்யப்படப் போகின்றார்கள் என்பவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

### தேர்தலில் எப்படி வாக்களிப்பது?

தேர்தலில் எப்படி வாக்களிப்பது என்பதை அறிந்து கொள்வதற்கு முன் விகிதாசார முறையின் கீழ் நடைபெறப்போகும் இத்தேர்தலில் ஒரு வாக்காளர் அளிக்கக் கூடிய வாக்குகளைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்வது அவசியமாகும்.

அந்த வகையில் நடைபெறப்போகும் இத் தேர்தலில் ஒரு வாக்காளர் ஓர் அடிப்படை வாக்கையும், (தான் விரும்பும் கட்சிக்கு அளிக்கும் வாக்கு) மூன்று விருப்பு வாக்குகளையும் அளிக்க முடியும்.

வாக்களிக்கச் செல்லும் ஒருவர் தனக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் முதலில் தனது அடிப்படை வாக்கை தான் விரும்பும் கட்சிக்கும் பின்னர் விருப்பு வாக்குகளை அக்கட்சியில் தாம் விரும்பும் வேட்பாளர்களின் இலக்கங்களுக்கும் அளிக்கவேண்டும்.

இங்கு கட்சிக்குரிய வாக்கே கட்டாயம் அளிக்கப் படவேண்டிய வாக்காகும். விருப்பு வாக்குகளை விரும்பினால் அளிக்கலாம். அல்லது அளிக்காமலும் விடலாம்.

ஒரு வாக்காளர் கட்சிக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகளை மட்டும் அளிப்பாராயின், அந்த வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகக் கருதப்படும். ஆனால், கட்சிக்கு வாக்களித்துவிட்டு விருப்பு வாக்குகளை அளிக்காத வாக்காளரின் வாக்குச் சீட்டு செல்லுபடியான வாக்காகக் கருதப்படும்.

வாக்களிக்கும் முறையை பின்வரும் உதாரணங்களின் மூலம் வாக்காளர்கள் நன்கு தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

**உதாரணம் - I**
**விருப்பு வாக்குகள் அளிக்காத வாக்களிப்பு முறை**

| | | |
|---|---|---|
| கட்சியின் பெயர் | சின்னம் | x |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |

இங்கு கட்சிக்கு மட்டும் வாக்களிக்கப்பட்டு விருப்பு வாக்குகள் அளிக்கப்படாமல் உள்ளது. எனவே, இவ்வாக்குச் சீட்டு செல்லுபடியானதாகக் கருதப்படும்.

**உதாரணம் - II**
**விருப்பு வாக்குகளை மட்டும் அளிக்கும் வாக்களிப்பு முறை:-**

| | | |
|---|---|---|
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | X | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | X | 17 | 18 | 19 | 20 |

இங்கு கட்சிக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகள் மட்டும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே, இவ்வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

**உதாரணம் - III**
**ஒரு விருப்பு வாக்கு மட்டும் அளிக்கும் வாக்களிப்பு முறை:-**

| | | |
|---|---|---|
| கட்சியின் பெயர் | சின்னம் | x |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |

இங்கு வாக்குச்சீட்டில் கட்சிக்கும் வாக்களித்து ஒரு விருப்பு வாக்கு மட்டும் அளிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்குச்சீட்டும் செல்லுபடியானதாகக் கருதப்படும்.

**உதாரணம் - IV**
**மூன்று விருப்பு வாக்குகளையும் அளிக்கும் வாக்களிப்பு முறை:-**

| | | |
|---|---|---|
| கட்சியின் பெயர் | சின்னம் | x |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |
| கட்சியின் பெயர் | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | X | 3 | 4 | 5 | 6 | 7 | X | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | X | 16 | 17 | 18 | 19 | 20 |

இங்கு வாக்குச்சீட்டில் கட்சிக்கும் வாக்களித்து மூன்று விருப்பு வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த வாக்குச்சீட்டும் செல்லுபடியானதாகக் கருதப்படும். இதேபோன்று கட்சிக்கும் வாக்களித்து இரண்டு விருப்பு வாக்குகளை மட்டும் அளிக்கும் வாக்குச்சீட்டும் செல்லுபடியானதாகக் கருதப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்பவற்றில் ஒரு வாக்காளர் தனது மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கு அளிக்க முடியாது. ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கு அளிக்க முடியும்.

### நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்:-

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்கீழ் 196 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படுவார்கள். இத்தெரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக பல கட்டங்களரக நடைபெறும். இதை விவரிப்பதற்கு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

### அ. செல்லுபடியான வாக்குகளைக் கணிப்பிடுதல்:

செல்லுபடியான வாக்குகள் என்பது ஒரு மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளிலிருந்து நிராகரிக்கப்பட்ட வாக்குகளைக் கழித்துப் பெறப்படும் வாக்குகளாகும். உதாரணமாக திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட 2,50,000 வாக்குகளில் 7,500 வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகள்.எனில் இம் மாவட்டத்தின் செல்லுபடியான வாக்குகள் ( 2,50 ,000 - 7,500) 2,42,500 ஆக அமையும்.

### ஆ. வெட்டுப்புள்ளி கணிப்பிடுதல்

செல்லுபடியான வாக்குகள் கணிப்பிடப் பட்டதன் பின்னர் இரண்டாவது கட்டமாக வெட்டுப்புள்ளி கணிக்கப்படும். வெட்டுப்புள்ளி என்பது, ஒரு மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் என்பன பெறவேண்டிய ஆகக் குறைந்த வாக்குகளாகும்.

இதை விளக்கமாகக் கூறுவதாயின், ஒரு மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகள் அல்லது குழுக்கள் என்பன போட்டியிலிருந்து நீக்கப்படாதிருப்பதற்கு அம்மாவட்டத்தில் அவை பெறவேண்டிய மிகக்குறைந்த வாக்குகளே வெட்டுப் புள்ளியாகும். இவ்வெட்டுப்புள்ளி ஒரு மாவட்டத்தின் செல்லுபடியான வாக்கின் 5 சதவீதம் அல்லது 1/20 ஆகும்.

இவ்வெட்டுப்புள்ளி கணிப்பிடப்படும் முறையை பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

உதாரணம்:- திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் , இம்மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகளும் அவை பெற்றுக்கொண்ட வாக்குகளும் கீழ்வருமாறு அமைந்துள்ளன என எடுத்துக் கொள்வோம்.

| கட்சிகள் | - | வாக்குகள் |
|---|---|---|
| A | - | 100,000 |
| B | - | 95,000 |
| C | - | 38,000 |
| D | - | 4,000 |
| E | - | 2,500 |
| F | - | 3,000 |

செல்லுபடியான வாக்குகள்2,42,500

இங்கு செல்லுபடியான வாக்குகள் 2,42,500 ஆகவுள்ளன. எனவே, வெட்டுப்புள்ளியைக் கணிப்பதற்கு இவ்வாக்குகளை 20 ஆல் பிரித்தல் வேண்டும். இவ்வாறு பிரித்து வரும் தொகையே வெட்டுப் புள்ளியாகும். இதன்படி 2,42, 500 ஐ 20 ஆல் பிரித்தால் 12,125 பெறப் படும். இத் தொகையே இம்மாவட்டத்தின் வெட்டுப்புள்ளியாகும். வெட்டுப்புள்ளி கணிக்கப்பட்டதன் பின்வெட்டுப் புள்ளிகளுக்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் போட்டி யிலிருந்து நீக்கப்படுவதோடு அவற்றின் வாக்குகளும் செல்லுபடியான வாக்கிலிருந்து கழிக்கப்படும். இதன்படி D, E ,Fஆகியவை போட்டி யிலிருந்து நீக்கப்பட்டு அவற்றின் வாக்குகளும் ( 4000+2,500+ 3000) செல்லுபடியான வாக்கிலிருந்து கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள வாக்குகள் (2,42,500 - 9,500 = 2,33,000) இயைபான வாக்குகள் எனப்படும்.

### தகுதிகாண் வாக்கு கணிப்பிடுதல்

இயைபான வாக்கு பெறப்பட்டதன் பின்னர் தகுதிகாண் வாக்கு கணிப்பிடப்படும். தகுதிகாண் வாக்கு என்பது ஒரு மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகள் அம்மாவட்டத்திற்குரிய ஆசனங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாக்குகளாகும். இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

| இயைபான வாக்குகள் |
|---|
| மொத்த ஆசனம்-1 |

அதாவது, இயைபான வாக்கை மாவட்டத்திலி ருந்து தெரிவு செய்யப்படவேண்டிய ஆசனங்களில் ஒன்றை கழித்துவரும் தொகையாகப் பிரிப்பதன் மூலம் தகுதிகாண் வாக்கைப் பெற்றுக்கொள்ளலாம். இதன் படி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திற்கான தகுதிகாண்வாக்கு 38 ஆயிரத்து 833 ஆக அமையும். (2,33,000/6)

குறிப்பு:- திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆகும். இதன்படி திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட ஒரு கட்சி, ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டுமாயின் 38,833 வாக்குகளைப் பெறவேண்டும்.

தகுதிகாண் வாக்கு கணிக்கப்பட்டதன் பின்னர் அடுத்து கட்சிகளுக்கான பிரதிநிதித்துவம் பகிர்ந்தளிக்கப்படும். இதுவும் கட்டங்கட்டமாகவே நடைபெறும். அந்தவகையில் முதலாவதாக போனஸ் ஆசனம் - மேலதிக ஆசனம் வழங்கப்படும்.

### போனஸ் ஆசனம் - மேலதிக ஆசனம்

போனஸ் ஆசனம் என்பது ஒரு மாவட்டத்தில் போட்டியிட்ட கட்சிகளில் ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு வழங்கப்படும் ஓர் ஆசனமாகும். இது இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் விசேட அம்சமாகும். அதன்கீழ் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 22 போனஸ் ஆசனங்கள் வழங்கப் படும். அந்தவகையில் திகாமடுல்ல தேர்தல் மாவட் டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட 'A' என்ற கட்சிக்கு ஒரு மேலதிக ஆசனம் வழங்கப்படும். போனஸ் ஆசனம் வழங்கப்பட்டதன் பின்னர் கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீடு இடம்பெறும். இதுவும் முதலாம் ஒதுக்கீடு, இரண் டாம் ஒதுக்கீடு என இடம்பெறும்.

### முதலாம் ஒதுக்கீடு

தகுதிகாண் வாக்கினை அடிப்படையாகக் கொண்டு இவ்வொ துக்கீடு மேற்கொள்ளப்படும். அதா வது ஒரு மாவட்டத்தில் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஒவ்வொன்றினதும் வாக்குகளை தகுதிகாண் வாக்கினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் தொகைக்கு ஏற்ப அவற்றிற்கான ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். இதுவே முதலாம் ஒதுக்கீடு எனப்படும்.

### இரண்டாம் ஒதுக்கீடு

இரண்டாம் ஒதுக்கீடு என்பது முதலாம் ஒதுக் கீட்டின் போது ஒரு மாவட்டத்திற்குரிய சகல ஆசனங் களும் பகிர்ந்தளிக்கபடாதுவிடின் முதலாம் ஒதுக்கீட்டின் பின் கட்சிகளின் எஞ்சிய வாக்குகளை அடிப் படையாகக் கொண்டு மீதி ஆசனங்கள் வழங்கப்படுவ தேயாகும். இவ்வொதுக்கீட்டின்போது தகுதிகாண்வாக்கு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் கட்சிகளுக்கான பிரதிநிதித்துவம் பகிர்ந்தளிக்கப்படும் விதத் தினை பின்வரும் அட்டவனையின் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 'A' என்ற கட்சி அதி கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளதனால் அக்கட்சிக்கு

| கட்சிகள் | வாக்குகள் | போனஸ் ஆசனம் | 1ஆம் ஒதுக்கீடு | மீதி வாக்குகள் | 2ஆம் ஒதுக்கீடு | மொ. ஆசனம் |
|---|---|---|---|---|---|---|
| A | 1,00,000 | 1 | 2 | 22,334 | 1 | 04 |
| B | 95,000 | - | 2 | 17,334 | - | 02 |
| C | 38,000 | - | - | 30,000 | 1 | 01 |

போனஸ் ஆசனமும் முதலாம் ஒதுக் கீட்டில் 2 ஆசனங்களும் வழங்கப் பட்டுள்ளன.

'B' என்ற கட்சிக்கு முதலாம் ஒதுக்கீட்டில் 2 ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

'C' என்ற கட்சி தகுதிகாண் வாக்கைவிட (38,833) குறைந்த வாக்கைப் பெற்றிருப்பதனால் முதலாம் ஒதுக்கீட்டின்போது அக்கட்சிக்கு ஆசனம் எதுவும் வழங்கப்படவில்லை.முதலாம் ஒதுக்கீட்டின் பின் இம் மாவட்டத்திற்குரிய அனைத்து ஆசனங்களும் (7) பகிர்ந் தளிக் கப்படவில்லை. போனஸ் ஆசனத்தையும் சேர்த்து 5 ஆசனங்களை மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

எனவே, இன்னும் 2 ஆசனங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளன அவ்வாசனங்கள் இரண்டாம் ஒதுக்கீட்டில் பகிர்ந்தளிக்கப்படும். அந்த வகையில் முதலாம் ஒதுக்கீட்டின் பின் அதிகூடிய மீதி வாக்குகளை வைத்திருக்கும் கட்சிகளுக்கே வழங்கப்படும். இதன்படி அதிகூடிய மீதி வாக்குகளை வைத்திருக்கும் 'C' என்ற கட்சிக்கு 1 ஆசனமும், இரண்டாவது அதிகூடிய வாக்குகளை வைத் திருக்கும் 'A' என்ற கட்சிக்கு 1 ஆசனமும் வழங்கப்படும்.

இவ்வாசன ஒதுக்கீட்டு ஒழுங்கின்படி இம்மாவட்டத் தில் 'A' என்ற கட்சி 4 ஆசனங்களை யும், 'B' என்ற கட்சி 2 ஆசனங்களையும், 'C' என்ற கட்சி 1 ஆசனத்தையும் பெற்றுள் ளன. மேற்குறிப்பிட்ட ஒழுங்கின் பிரகாரமே ஏனைய மாவட்டங்களுக் கான ஆசனங்களும் பகிர்ந்தளிக்கப்படும். (ம)

எம்.ஏ.றஹீம் பீ.ஏ.
(பிரதி அதிபர் அல். மர்ஜான் மகளிர் கல்லூரி, சம்மாந்துறை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயத்துக்குள் நடப்பவை உலகை அதிரவைக்கும்

*11.05.2009*

விடுதலைப்புலிகள் ஒன்றரை லட்சம் மக்களைப் பயணக்கைதிகளாக தடுத்து வைத்திருக்கும் முள்ளிவாய்க்கால் சூனியப் பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் எனக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் பெரும் வேதனையையும் தருகின்றன. அவர்கள் தற்போது அனுபவிக்கும் நரக வேதனையை அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது பட்ட துன்பங்களிலும் பார்க்க மிகக் கூடுதலானதாகும். அவர்களுக்குக் கிடைக்கும் உணவு, அவர்களுடைய தேவைகளுக்கு போதுமானதல்ல. அந்த நிலை குறைந்தளவு உணவுப் பண்டம் வருவதாலா அல்லது விடுதலைப் புலிகள் தம் பங்கை முன்கூட்டியே எடுத்து விடுவதாலா, இல்லாமல், இரண்டும் காரணமாக இருக்கலாம். அதன் பயனாக தாய்மாரும், வயோதிபர்களும் போதிய சத்துணவின்றி வாடுகின்றனர். இந்நாள்களில் நீண்ட வரிசையில் தம் பங்குக் கஞ்சிக்காக காத்து நிற்கின்றனர். தாய்ப்பால் ஊட்டும் சக்தி இழந்த தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்குப் புட்டிப் பாலுக்காக பல நாள்களாகக் காத்திருக்கின்றனர். பயத்துடனும், பீதியுடனும் வாழும் மக்கள் கூடுதலான நேரத்தை பங்கருக்குள்ளேயே செலவிடுகின்றனர்.

இக்கொடுமைக்கு மேலாக வெசாக் பண்டிகைக்கு மறுதினம் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பித்த ஷெல் தாக்குதல் மறுநாள் காலை 7 மணிக்கு அதாவது இன்று முடிவுக்கு வந்தது. இன்று பிற்பகல் 5 மணி வரை 378 சடலங்களுடன் 1,122 படுகாயமுற்றோரும் காணப்பட்டனர். பல குடும்பங்கள் முற்றாகத் தம் பங்கருக்குள்ளேயே முடக்கப்பட்டு விட்டனர் எனவும் அறியவருகிறது. படுகாயமுற்ற பலர் வைத்தியசேவை எதுவுமின்றி கவனிப்பாரற்று மடிந்தும் உள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 378 மட்டும்தானா? அல்லது விடுதலைப் புலிகள் தவிர்த்து வேறு சில ஊடகங்கள்



கூறுவது போல் ஆயிரக்கணக்கானோரா என்பதல்ல பிரச்சினை. ஒரு நாளில் மிகக் கூடிய மரணங்கள் ஏற்பட்டது யுத்தம் ஆரம்பமானதின் பின்பு இந்நிகழ்வில் தான். விடுதலைப் புலிகளை ஒழிக்க உதவிய மக்களின் எதிர்பார்ப்புக்கும் இது ஏமாற்றமாக முடிந்தது.

அத்துடன், பாதுகாப்பாக இடம்பெயர்ந்தவர்கள் வரவேற்கப்படுவார்கள் என்றும் அவர்கள் நன்றாகக் கவனிக்கப்படுவார்கள் என்றும் அரசு கொடுத்த உத்தரவாதத்தை நம்பிய சர்வதேச சமூகத்துக்கும் பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

முள்ளிவாய்க்கால் நிலைமை நாளுக்குநாள் கட்டுமீறி வருகின்றது. நாளுக்குநாள் பாதிப்புக் குள்ளாவோரின் எண்ணிக்கை கூடிக் கொண்டு வந்து இன்று அது உச்சக் கட்டத்தை அடைந் துள்ளது. தயவுசெய்து உடனடியாக ஷெல் அடிப்பதையும், துப்பாக்கிச் சூட்டையும் நிறுத்துமாறு பணிக்கவும். விடுதலைப் புலிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், உங்கள் படையை நிறுத்திவைக்க உங்களால் முடியும்.

விடுதலைப்புலிகள் தற்போது முற்றுமுழுதாக பொது மக்களுடன் கலந்துள்ளமையால் அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் பல பொது மக்களை கொல்வதோடு அதேவேளை, பலர் காயமடையவும் செய்யும். கவனயீனமாக நடப்பதால் விடுதலைப்புலிகள் எதையும் இழந்து விடப்போவதில்லை. ஆனால் அரசு இழக்க பல உண்டு. அரசின் நாணயம் உட்பட நான் மீண்டும் தங்களுக்கு வலியுறுத்திக் கூறுவது யாதெனில், அவர்கள் மக்களோடு கலந்துள்ளமையால் தங்களுக்குள்ளே ஒரேவழி விடுதலைப்புலிகளை தாக்குவதை நிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் உதவியோ அன்றி நீங்கள் விரும்பும் வேறுயாரின் உதவியோ பெற்று அகப்பட்டுள்ள மக்களை விடுவிக்கும் வரை காலத்தைக் கடத்துவதே. ஐ.நா. சபையின் உதவியை நாடுவதில் எவ்விதத்திலும் தப்புக் கிடையாது.

வன்னி மக்கள் மீது நான் அக்கறை காட்டுவதால் என்னைத்தப்பாக எண்ணக் கூடாது. நான் நன்கு தெரிந்து என் மீது அதிக பாசம் கொண்டுள்ள மக்கள் அநேகர் இறந்தும், கடுமையாகக் காயமடைந்தும் தம் கால், கைகளை இழந்தும் உள்ளனர். நான் உங்களுக்கு 10.04.2009 இல் எழுதிய ஓர் கடிதத்தின் ஒரு பகுதியை கீழே தருகிறேன். யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் புலிகள் அப்பாவிப் பொது மக்களுடன் கலந்து நின்று அவர்களை மனிதக் கேடயமாகப் பாவிப்பதால் ஆபத்துக்குள்ளாவோரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது... நாம் விடுதலைப் புலிகளை யுத்தக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு இயங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், அரச படைகளால் அது முடியும். நாளுக்கு நாள் நிலைமை பயங்கரமானதாகவும் மோசமடைந்து கொண்டிருக்கிறது. ஆகவே உங்கள் தலையீடு மேலும் தாமதிக்கலாகாது. ஒரு நாள் உண்மைநிலை உலகறியும். காலம் வரும்போது முழு உலகும் அரசையும் மக்களையும் கண்டித்து நிற்கும். சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் இதுவரை கூறி வந்ததுபோல் எமது முழு அக்கறையும் மக்கள் மீதே.

பி.கு:- பெரும் எண்ணிக்கையான காயமுற்றோர் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையால் வைத்தியர்களால் அனைவருக்கும் வைத்தியம் பார்க்க முடியவில்லை. பல காயமுற்றவர்களுக்கு 24 மணித்தியாலங்களாக எதுவித சேவையும் வழங்கப்படவில்லை. வைத்தியசாலை ஊழியர்களில் அரைவாசியினரின் வீடுகளும் தாக்கப்பட்டமையால் கடமைக்கு வரவில்லை.

வீ.ஆனந்தசங்கரி
தலைவர்-த.வி.கூ.

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மக்கள் துயரப்பட்டபோது விழா எடுத்தவர்கள் இன்று அதே மக்களிடம் வாக்குக் கேட்டு நிற்கின்றார்கள்!

## சிரிப்பாகவும் வேதனையாகவும் இருக்கிறது என்கிறார் வேட்பாளர் ஈ. சரவணபவன்

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வன்னி மண்ணில் நடைபெற்ற பாரிய யுத்தத்தினால் பெரும் சொத்தழிவுகளையும் உயிர் அழிவுகளையும் சந்தித்தபோது அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஆதரவாக வெற்றி விழாக் கொண்டாடியவர்கள் இன்று தமிழ்மக்களிடமே வாக்குக் கேட்டு நிற்கிறார்கள். இவர்களைச் சிந்தித்துப் பார்ப்பின் சிரிப்பாகவும் வேதனையாகவும் இருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈ.சரவணபவன்.

அண்மையில் நெல்லியடியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசால் திட்டமிட்டு, தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் - குறிப்பாக வன்னி மக்கள் - தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து, பெருமளவிலான உயிர்களை இழந்து, உண்பதற்கு உணவின்றி, அருந்துவதற்கு நீர் கூட இன்றி நிர்க்கதியான நிலையில் தத்தளித்து நின்றனர். அந்தநேரத்தில், இவர்களின் இந்த நிலைக்குக் காரணமான அரசு, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது என வெற்றிவிழாக் கொண்டாடியவர்கள் இன்று தமிழ் மக்கள் முன் வாக்குக் கேட்டு மண்டியிடுகின்றனர்.

அப்போது இவர்களின் இந்த நிலைமைகளுக்கு வேதனை தெரிவித்து, யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் கொடுக்க இயலாத நிலையில் குடாநாட்டு மக்கள் காணப்பட்டனர்.

வவுனியா நலன்புரி முகாம்களில் வாழ்கின்ற வன்னி மக்கள் பெரும் அவலங்களைச் சந்திக்கிறார்கள். இந்த மக்களின் நிலைபற்றி அரசும் அதன் ஆதரவுக் கட்சிகளும் சிறிதும் சிந்திப்பது கிடையாது.

வன்னியில் மீளக்குடியமர்வு என்ற பெயரில் கொட்டில் வீடுகளை அமைத்தும் தகரக் கொட்டகைகளையமைத்தும் மக்களை மீளக் குடிய மர்த்தி இருக்கிறார்கள். தமது



அன்றாடச் செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலையில் அம் மக்கள் காணப்படுகிறார்கள்.

இவர்களை - இவர்களின் நிலைமைகளை - ஏனையோர் சென்று பார்ப்பதற்குக் கூட இயலாத நிலை காணப்படுகின்றது.

வன்னி நிலப்பரப்பில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் வன்னி மக்களின் பெருமளவிலான சொத்துக்களும் உடைமைகளும் ஆங்காங்கே நாதியற்றுக் கிடக்கின்றன. இவர்களுக்கு இந்த உடைமைகளை மீட்டுக் கொடுப்பதில் அரசு அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

வன்னியில் நடைபெற்ற யுத்த இழப்புக்களை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவித்த ஊடகமாக உதயன் மட்டுமே அப்போது திகழ்ந்தது. தமிழ் மக்கள் படுகின்ற அவலங்களை எவ்வப்போதும் துணிச்சலாக வெளியிடுகின்ற ஒரேயொரு ஊடகமாக உதயன் திகழ்ந்தான் என்பதை மக்கள் ஒருபோதும் மறுக்கமாட்டார்கள். இந்தத் தேர்தலில் உங்களது வாக்குகளை எமக்கு அளிப்பதன் மூலம் நாடாளுமன்றத்திலும் உலக மன்றுகளிலும் மக்களின் துன்ப, துயரங்களைத் துணிச்சலோடு பறைசாற்ற எம்மால் முடியும்.

எதையும் எளிதில் மறப்பவர்கள் அல்லர் நம் தமிழர்கள். தங்களுக்கு இன்னல் விளைவித்தவர்களுக்குத் தக்க தருணத்தில் அவர்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள். இதற்குத் தேர்தல் ஒரு மைல் கல்லாக அமையட்டும். - என்றார்.

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே கடத்தல், காணாமல் போதலைத் தடுக்கலாம்

## இப்படிக் கூறுகிறார் ஐ.தே.க. வேட்பாளர் ஸ்ரீகஜன்

அப்பாவி மாணவன் கபில்நாத் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை குடாநாட்டில் மீண்டும் கடத்தல் கலாசாரம் தலைதூக்கிவிட்டதோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடத்தல்கள், காணாமல் போதல் செயற்பாடுகள் முற்றாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டுமானால் ஆட்சி மாற்றம் என்பது அவசியமாகும். ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படாவிடின் இத்தகைய சம்பவங்கள்



தொடர்ச்சியாக அரங்கேறிக்கொண்டே இருக்கும்; தமிழ் மக்களும் அவலங்களைச் சந்தித்துக்கொண்டே இருப்பார்கள்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன்.

உரும்பிராயில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் துன்ப, துயரங்கள் இன்னும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. குடாநாட்டு மக்களின் துயரங்கள் நீங்க வேண்டும் என்பதற்காகவே அமரர் மகேஸ்வரன் பாடுபட்டார். அவர் இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்த இரண்டரை வருடங்கள் தமிழர் வரலாற்றில் ஒரு பொற்காலம் என்றே கூறலாம். ஏனெனில், அந்தக் காலத்திலேயே குடாநாட்டு மக்களுக்கு அவர் அளப்பரிய சேவைகளை ஆற்றினார்.

ஆளும் கட்சியில் இருந்துகொண்டே அவர் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்தார். தமிழ் மக்கள் கடத்தப்பட்டபோதும், காணாமல் போனபோதும், வகைதொகையின்றிக் கைதுசெய்யப்பட்டபோதும் அவர் அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார். மகேஸ்வரனின் சேவைகளைத் தொடர்வதற்காகவே அவரது பாரியார் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நாம் போட்டியிடுகின்றோம். எமது கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் ஆட்சி மாற்றம் ஏற்படும். அவ்வாறு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்களுக்குத் தீர்வைக் காணமுடியும்.

குடாநாட்டில் போட்டியிடும் ஏனைய கட்சிகள், சுயேச்சைக் குழுக்களுக்கு நீங்கள் ஆதரவு வழங்கினால் ஒரு வகையில் அதுவும் அரசாங்கத்தை ஆதரிப்பதாகவே அமையும்.

குடாநாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும். இவர்களை ஆதரிப்பதால் ஏற்படப் போகும் பலன்தான் என்ன? என்பதைச் சற்றுச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலை, கடத்தப்பட்டு மற்றும் காணாமற்போனவர்களின் நிலையை அறிதல் போன்ற பல்வேறு விடயங்களுக்கு நாம் வெற்றி பெற்றதும் தீர்வைக் காணுவோம்.

தமிழ்மக்கள் இனியும் இரண்டாம் தரப் பிரஜைகளாக இருக்க முடியாது. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிக்கும் செயற்பாடுகள் குடாநாட்டில் தொடர்வதற்கு அனுமதிக்கக் கூடாது.

எனவே, எமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு நீங்கள் வாக்களிப்பதன் மூலம்தான் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள எம்மால் முடியும். தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தவும் முடியும் - என்றார்.




# அரசுடன் இணைந்து செயற்பட்டாலேயே தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்கலாம்

## - யாழ்.மாநகர மேயர்

அரசுடன் இணைந்தே தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவுகோரி குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய ஒற்றுமை, இன ஐக்கியம் என்பனவற்றில் எமது மனமாற்றம் அவசியம். கடந்த கால அரசியலானது எம்மை 'முள்ளின் மேல் விழுந்த சேலை' போன்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. இதனை மெதுவாகக் கழற்றவேண்டும். நாம் பட்ட துயரங்களில் இருந்து எமக்கு விடிவு இதுவரை கிடைக்கவில்லை.

மக்கள் துன்ப, துயரங்களில் மூழ்கியிருந்தபோது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைக் கிடைக்க வழியமைத்துக் கொடுத்தவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே.

மக்களுக்கு அபிவிருத்தி, எமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவற்றை முன்வைத்தே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். எமக்கு அரசியல் உரிமை கிட்டவேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைகள் மூலம் அமுல்படுத்தப்படவேண்டும். ''மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பது எமது கொள்கையாகும் - என்றார். (51)

# வட்டுக்கோட்டைத் தீர்மானம் கைவிடப்பட்டது என்று எந்த அடிப்படையில் குற்றம் சாட்டுகின்றனர்?

## கேள்வி எழுப்புகின்றார் தமிழரசுக் கட்சி வேட்பாளர் சி.வீ.கே.சிவஞானம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிட்டுவிட்டார்கள் எனச் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். என்ன அடிப்படையில் அவர்கள் இப்படிக் கூறுகின்றனர் எனப் புரியவில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானம் அது



இயற்றப்பட்ட காலத்தில் எப்படி இருந்ததோ அப் படியே தான் இப்போதும் இருக்கின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் மாநகர சபை ஆணையாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளருமாகிய சி.வீ.கே.சிவஞானம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ராஜீவ் - ஜே.ஆர். இந்திய, இலங்கை ஒப்பந்தந்தை அடுத்து உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகள் தீர்மானம் எடுத்த போது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிட்டுட்டுத்துத் தான் அப்படித் தீர்மானித்தார்கள் என யாராவது கூற முடியுமா?

அதேபோல, ஐ.எஸ்.ஜி.ஏ.என்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை முன்வைத்தபோதே அல்லது பீரொம் என்ற சுனாமிக் கட்டமைப்பு உருவாக்கத்துக்கான யோசனையை முன்வைத்தபோது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கைவிட்டுட்டுத்தான் விடுதலைப்புலிகள் அவ்வாறு செயற்பட்டனர் என யாராவது கூறமுடியுமா?

எனவே இந்த விடயத்தை ஒரு பிரச்சினையாக்கி அரசியல் செய்யமுடியாது. இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு மிகவும் தெளிவானது.

இருதேசம், இரு நாடு என்று பேசப்படுகின்றது. இந்தக் கோட்பாட்டை நாம் கைவிட்டுவிட்டோம் என்றும் கூறப்படுகின்றது. 1991 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீர்மானத்தின்படி அப்போதைய ஜனாதிபதி பிறேமதாஸாவை நான் சந்தித்துப் பேசினேன். அப்போது ''ஒரு நாட்டில் நாம் இரு தேசியங்கள்'' என நான் தெளிவாக அவருக்கு எடுத்துக் கூறினேன். இந்த நிலைப்பாட்டில் இதுவரையிலும் இனியும் எந்த மாற்றமும் இருக்க முடியாது. இதில் நான் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து துரதிஷ்டவசமாகப் பிரிந்து சென்றவர்கள் உருவாக்கிய இரு அணிகளின் பெயர்களும் கூடத் 'தமிழ்த் தேசியம்' என்ற பதத்தையே கொண்டுள்ளன. 'தமிழ்த் தேசியம்' என்ற கொள்கையை அல்ல. என்னைப் பொறுத்தவரை எமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு போலிக்கதை கூறுபவர்களின் கூற்றுக்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் செவிசாய்க்க மாட்டார்கள். அவர்களுக்கு உண்மைநிலை புரியும். சிந்தித்துச் செயற்படுபவர்கள் நம் தமிழர்கள். இந்தத் தேர்தலில் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய எம்மைப் பலப்படுத்துவதன்மூலமே தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பை சிதைக்க முனைவது ஏன்?

- நந்தன் அரியரத்தினம் -

தமிழ்த் தேசிய அரச படிமுறை வளர்ச்சிப் போக்கின் ஒவ்வோர் அங்குலத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்களினதும், போராளிகளினதும் உயிர்த் தியாகங்களும் உழைப்பும் இருக்கின்றன.

இன்று - ஆயிரக்கணக்கான வன்னி மக்கள் அடுத்த வேளை உணவுக்காகக் கையேந்தி நிற்கும் அவலமும், ஆயிரக் கணக்கானவர்கள் தமது அங்கங்களை இழந்து ஆதரவற்றிருப்பதும் நாம் இதுவரை பேசிவந்த தமிழ்த் தேசியத்தின் பேரால் தான்.


ஆனால் - இன்று எல்லோரது மனங்களையும் ஆக்கிரமித்திருக்கும் கேள்வி நாம் இவ்வளவு விலை கொடுத்தும் கண்டதென்ன?



சம்பந்தர்



மாவை சேனாதிராஜா



சுரேஷ் பிரேமசந்திரன்



கஜேந்திரகுமார்



கஜேந்திரன்

இந்தக் கேள்விக்குத் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசும் எந்த ஒரு நபரிடமும் பதில் இருக்கப் போவதில்லை.

இதனை எழுதும் என்னிடமும் பதில் இல்லை. இன்று - நாடு கடந்த அரசு, வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள்வாக்கெடுப்பு என்றெல்லாம் பேசும் எவரிடமும் இதற்கு பதில் இருக்கப்போவதில்லை.

இது தான் இன்றைய ஈழத்தின் அரசியல் யதார்த்தம். அப்படியானால் நாம் என்ன செய்வது?

அமைதியாக சிங்களத்தின் நிகழ்சிநிரலை ஏற்றுக் கொண்டு வாழப் பழகுவதா? அல்லது எல்லாவற்றையும் இழந்து விட்டாலும் நம்மிடம் எஞ்சியிருப்பவற்றைக் கொண்டு நமது சுயமரியாதையை உறுதிப்படுத்தும் வகையில் செயலாற்றுவதா?

இதில் எது நமது தெரிவாக இருக்கப் போகிறது? இது தான் இன்றைய நாடாளுமன்றத் தேர்தல் களம் நம் முன் நிறுத்தியிருக்கும் கேள்விகள்.

பயணத்திற்குச் சாதகமான வழியில் செல்வதா அல்லது படுகுழிகள் நிறைந்த பாதையொன்றைத் தெரிவு செய்வதா...?

இன்றைய நாடாளுமன்றத் தேர்தலின் முக்கியத்துவம் என்ன...?

ஏன் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை சிதைப்பதற்கான இரகசிய நிகழ்சிநிரலொன்று (Hidden agenda) அமுல்படுத்தப்பட்டிருக்கிறது...?

இந்தக் கேள்விகளுக்கான விடைகள் தான் இன்றைய தேர்தல் களத்தில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணிதிரள வேண்டிய காலத் தேவையை உணர்த்த வல்லன.

இது கடந்த முப்பது வருடங்களாக ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டத்தின் உச்சத்தை தொட்டு நின்றதாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவுக்குப் பின்னர் நடைபெறும் முதலாவது தேர்தலாகும்.

விடுதலைப் புலிகளின் அழிவு என்பது நமது தமிழ்த் தேசிய அரச வரலாற்றைப் பொறுத்தவரையில் ஒரு நம்பிக்கை மிகு சகாப்தத்தின் துயர முடிவாகும்.

அந்தத் துயரத்திலிருந்து மீண்டெழுவதற்கு முன்னரே நம் முன் மீண்டுமொரு சவால்.

நமது அரச அடையாளத்தை எவ்வாறு பேணிப் பாதுக்காக்கப் போகின்றோம், எத்தகைய வடிவத்தில் பாதுகாக்கப் போகின்றோம்?

இங்கு கவனம் கொள்ள வேண்டிய முக்கியமான புள்ளியொன்று இருக்கிறது.

2009 மே 19இல் இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்றது.

இதற்கு - முதல் நாள் புலிகளின் அரசியல் துறைத் தலைவர் நடேசன் உட்படப் பலர் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முற்பட்டனர் என்றும், சர்வதேசப் போரியல் நியமங்களை மீறி அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் சம்பவத்தில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டுள்ளன என்பதற்கு அப்பால் - அரசியல் அர்த்தத்தில் - இதன் சிங்கள உள்நோக்கம் வேறு ஒரு பரிமாணம் கொண்டதாகும்.

நடேசனின் சரணடைவு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் விடுதலைப் புலிகள் புதியதொரு அரசியல் வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபடுவதற்கும் செயலாற்றுவதற்குமான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கலாம்.

அவர்களின் இராணுவ ரீதியான கட்டமைப்புக்கள் நிர்மூலமான நிலையில், நிச்சயமாகப் புதிய புவிசார் அரசியல் நிலைமைகளை கருத்தில் கொண்டு, உள்ளக சுயநிர் ணய அடிப்படையில், ஜனநாயக ரீதி யாகப் போராடுவது குறித்து நடேசன் தலை மையில் புலிகள் சிந்தித்திருக்கலாம்.

ஆனால் - சரணடைந்த நடேசன் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்களின் படுகொலை மூலம் அது தடுக்கப்பட்டுவிட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இறப்புடன் புலிகளின் இராணுவ ரீதியான அனைத்து செயற்பாடுகளும் முடிவுக்கு வர, நடேசன் உள்ளிட்டோர் படுகொலை செய்யப்பட்டும், குறிப்பிட்ட மேலும் சிலர் அறியமுடியாத அளவிற்குத் தடுத்து வைக்கப்பட்டதன் மூலமும் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து போராடுவதற்கான சந்தர்ப்பமும் முற்றாக அழிக்கப்பட்டது.

இவ்வாறான ஒரு அரசியல் பின்புலத்தில் தான் தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கும் வரலாற்றுப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது விழுகிறது.

'திம்புக் கோட்பாடுகள்' என்று வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய அரசியல் பதங்களை முன்னிறுத்தி மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தும் உறுதியான அமைப்பாகத் தன்னை வெளிக்காட்டியது.

புலிகளின் அதிர்ச்சி மிகு அழிவுக்குப் பின்னர் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையில் மக்களை ஒன்றுபடுத்தும் அரசியல் தலைமை ஒன்று இருக்கப்போவதில்லை என்றும், அப்படியொரு வாய்ப்பு குறுகிய காலத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைக்காது என்றும் சிங்களம் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த சூழலில் தான் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதியதொரு வரலாற்றுக் கடமையுடன் தேர்தலை எதிர்கொள்கிறது.

இந்த ஒன்று தான் சிங்களம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தைக் குறிவைத்துச் சிதைக்க முயலும் வேலைத் திட்டத்தின் பின்னாலுள்ள காரணமாகும்.

தமிழ் மக்கள் மீண்டும் அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு நிற்பதைச் சிங்களப் பெருந் தேசியவாத சக்திகள் அறவே விரும்பவில்லை.

அவ்வாறு மக்கள் ஒன்றுபட்டு நிற்பார்களானால், தற்போதைய சர்வதேச ஜனநாயக ஒழுங்கிற்கு ஏற்றவாறான தீர்வு ஒன்றை நோக்கிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் கொழும்பிற்கு ஏற்படலாம்.

தனது பிராந்தியப் பாதுகாப்பிற்குத் தன்னைச் சுற்றியுள்ள நாடுகளில் சுமுகமான நிலைமை இருப்பது அவசியம் என்று இராஜதந்திரக் கணக்குப் போடும் இந்தியாவிலிருந்தும் கொழும்பிற்கு சில நெருக்குவாரங்கள் வரலாம் என்றும் சிங்கள ஆளும் வர்க்கத்தினர் கணக்குப் போடுகின்றனர்.

இதனைத் தங்களது நிகழ்சிநிரலுக்கு ஏற்ப தடுத்து நிறுத்த வேண்டுமாயின் தமிழ் மக்கள் வலுவானதொரு அரசியல் தலைமையைக் கொண்டிருக்கக் கூடாது என்பதை ஒரு எதிர்த்-தந்திரோபாயமாகவே (Counte Strabegy) கொழும்பு கருதுகிறது.

கொழும்பைப் பொறுத்தவரையில், அது வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்களின் அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை பிரிவினை வாதக் கண்ணாடி கொண்டு நோக்கி வரும் கடும்போக்கு சிங்கள தரப்பினரின் நிகழ்சிநிரலையே தமது ஆளுகைக்கான நிகழ்சிநிரலாகக் (Ruling Agenda) கொண்டிருக்கிறது.

ஆனால், இதுவரைக்கும் சிங்களம் சர்வதேசத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான நிகழ்சிநிரலில் தனது சிங்கள நலன்சார் நிகழ்சிநிரலை வெற்றிகரமாகப் பொருத்தியதன் மூலம் தனது நலன்களை வெற்றிகொண்டு வந்திருக்கிறது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன், சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு ஊடாக - அதிகாரப்பகிர்வுக் கோரிக்கையை முன்வைக்கும் போது - அதனை சர்வதேசத்தின் துணை கொண்டு தடுக்கும் உபாயங்கள் எதுவும் சிங்களத்திடம் இல்லை. ஏனென்றால், அது சாத்தியமற்ற ஒன்றாகும்.

இதனைத் தடுக்கும் நோக்கிலேயே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை மட்டுப் படுத்துவதன் மூலம் அதன் பேரம் பேசுவதற்கான அரசியல் பலத்தைச் சிதைக்க முடியும் என்று சிங்களம் கருதுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்மைப்பிற்கு வர வேண்டிய ஆசனங்கள் - மட்டக்களப்பில் ஒரு பிள்ளையான் குழுவினருக்கும், யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் போகுமானால், அவர்களைக் கொண்டே வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கும் அரசியல் காய்நகர்த் தல்களை கொழும்பு முடுக்கிவிடும்.

ஆனால், இதில் உள்ள புரியாத புதிரும் முரண்நகையான விடயமும் என்னவென்றால் அது தமிழ் காங்கிரஸில் அரசியல் வேலைத்திட்டம் தான்.

இன்று, வடக்கு-கிழக்கு எங்கிலும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்தாளும் நோக்கில் பல்வேறு கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டிருக்கின்றன.

இதில் கொள்கை ரீதியான முரண்பாட்டை முன்வைக்கும் கட்சி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் மட்டுமே ஆகும்.

இவர்களுக்கு பின்னால் சில புலம்பெயர் தமிழ் சக்திகளும் இருப்பது எல்லோரும் அறிந்த விடயம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பற்றியும் அவரை ஆதரிக்கும் புலம்பெயர் சக்திகள் பற்றியும் இந்த இடத்தில் நான் எந்தவிதமான விமர்சனங்களையும் முன் வைக்கவில்லை.

அல்லது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அப்பழுக்கு இல்லாத சுத்தமானது என வாதிடுவதும் எனது நோக்கமல்ல.

ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அறிக்கையும் கொழும்பின் நிகழ்சிநிரலும் எவ்வாறு பொருந்திப் போகின்றது என்பது தான் புரியாத புதிராக இருக்கின்றது.

இது அவர் அறியாமலே நிகழ்ந்த ஒன்றா?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது அறிக்கைகளில் திருகோணமலையில் சம்பந்தரையும் யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரனையும் அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவதே தனது நோக்கம் என்று கூறியிருக்கிறார்.

கொழும்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை குறிவைத்து செயற்படுகிறது.

அரசின் எதிர்த்-தந்திரோபாயமும், தமிழ் காங்கிரஸின் 'குறிப்பிட்ட தலைமைகளை அகற்றும்' கொள்கை நிலைப்பாடும் எவ்வாறு சந்திக்கின்றன?

சில வேளை - கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறியாமல் இந்த வலையில் சிக்குண்டுவிட்டாரா...? இது குறித்து பல கேள்விகள் எழுகின்றன.

திருகோணமலையில் தமிழ் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளர்கள் செல்வாக்கானவர்களோ, அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்லும் 'இரு தேசம்' கோட்பாட்டை விளங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் கொண்டவர்களோ, அல்லது அதற்கான அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்களோ அல்ல.

அவர்கள் நிச்சயம் வெல்லப்போவதும் இல்லை. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையிலும் தமிழ் காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

எனவே இங்கு தமிழ் காங்கிரஸ் சாதிக்கப் போவது, தமிழரசுக் கட்சியின் கீழ் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வரவேண்டிய வாக்குகளில் சில ஆயிரங்களைப் பிரித்தெடுத்து, தமிழர் நலனிற்கு எதிரானவர்களுக்குப் பிரதிநிதித்துவங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவது மட்டும்தான்.

திருகோணமலையைப் பொறுத்த வரையில் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இரு பிரதிநிதித்துவங்கள் கிடைத்தன.

ஆனால், இம் முறை - தமிழ் காங்கிரஸ் ஏனைய அரச சுயேச்சைக் குழுக்களுடன் இணைந்து பிரிக்கப் போகும் வாக்குகளால் இரண்டாவது தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

ஆனால் - இங்கு விடயம் என்னவென்றால், இதன் மூலம் கொழும்பு நினைப்பது நிறைவேற்றப்படுகிறது.

எனவே, தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்துச் சிந்திப்போர் மேற்படி நிலைமைகளைக் கருத்திற்கொண்டு செயலாற்றுவது காலத்தின் கட்டாயமாகும்.

இன்றைய சூழலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சதிகளால் பலவீனப்படுத்தப்படுமாயின், கொழும்பின் எதிர்த் தந்திரோபாய அணுகுமுறை வெற்றி பெறும்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் மேலும் பின்நோக்கித் தள்ளப்படும்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதுடன் முப்பது வருடங்கள் பின்நோக்கித் தள்ளப்பட்ட தமிழரின் அரசியல் எதிர்காலம், மேலும் முப்பது வருடங்கள் பின் நோக்கித் தள்ளப்படலாம்.

இக் காலத்தில் ஏற்படும் புவிசார் அரசியல் (Geopolitics) நலன்களுக்கான போட்டியைச் சாதமாகக் கைக்கொள்ளுவதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் இருப்பு வாதத்தை நிரந்தரமாக அமைதிப்படுத்துவதில் கொழும்பின் மூளை வெற்றிபெறலாம்.

இந்த வெற்றிக்கான வாயப்பை நாமே வாரி வழங்கப் போகின்றோமா, அல்லது சிங்கள உபாயத்தை தடுத்து நிறுத்துவதில் வெற்றிபெற முயற்சிக்கப் போகின்றோமா என்பதே இன்றைய காலத்தின் கேள்வி!

*** - நன்றி: 'புதினப்பலகை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலில் அவதியுறும் மக்களின் சார்பில் விடப்படும் அபயக்குரல்

15.05.2009

யுத்தப் பாதுகாப்பு வலயம் என வர்ணிக்கப்படும் இடத்தில் வாழும் மக்கள் சார்பில் அவர்களைக் காப்பாற்றுங்கள் என என்னால் விடப்படும் இக்கோரிக்கையை இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கே சிவில் நிர்வாகம் முற்றாக நின்றுவிட்டது. (முறிந்துவிட்டது). வைத்திய அதிகாரிகளும் தமது சேவையில் இருந்து விலகிவிட்டனர். அங்கு மனிதாபிமான பணிகளை ஒழுங்குபடுத்தி செயற்படுத்த யாரும் இல்லை. இதில் உணவு, வைத்திய வசதிகளும் அடங்கும்.
நூற்றுக்கணக்கானவர்கள், ஏன் ஆயிரக்கணக்கானவர்கள்கூட இருக்கலாம், வீதிகளிலும், பதுங்குகுழிகளிலும் பராமரிப்பின்றி இறக்கிவிடப்பட்டுள்ளனர். அங்கே உணவோ, குடிதண்ணீரோ இன்றி மக்கள் இறக்கின்றனர்.

மிகவும் மன்றாட்டமாக இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் எனது இந்த மனிதாபிமான கோரிக்கையை மிக அக்கறையுடன் செவிமடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய வசதியையும் உணவுப் பொட்டலங்களும் உடன் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்பதே. இதன்மூலம் பல உயிர்களை வைத்தியத்தின் மூலமும் பட்டினிச் சாவில் இருந்தும் காப்பாற்ற முடியும். அவர்களின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தால் இலங்கை அரசோ வேறு நட்பு நாடோ இந்திய அரசை நாடி இவ்அப்பாவி மக்களுக்கு உணவும், வைத்திய உதவிகளையும் விரைந்து அனுப்பி அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் வேண்டுகோள் புத்தி சுவாதீனம் அற்ற ஒருவரிடம் இருந்து வரவில்லை என்பதை வலுவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.



தலைவர்,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

# மிக்க அவதானத்துடன் செயற்பட வேண்டியதன் அவசியம்

*மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,*
*இலங்கை ஜனாதிபதி,*
*அலரிமாளிகை,*
*கொழும்பு.*

*09.03.2009.*

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு,

ஈழப்போரின் இறுதிமுடிவு இந்த வாரத்துக்குள் கிடைத்து விடுமெனவும் அடுத்து வரும் 72 மணித்தியாலங்களுக்கு விடுதலைப் புலிகளுக்குக் கஷ்டமான காலமெனவும் பாதுகாப்புப் படையினரால் தெரிவிக்கப்பட்ட கருத்து எனக்குப் பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது. நான் விடுதலைப்புலிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. எனது சிந்தனையின் முன்னிலையில் நிற்பது எமது நாட்டினதும், நாட்டு மக்களினதும் அக்கறையே.

அண்மையில் வன்னி இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்திருந்த இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் சரத் பொன்சேகா அவர்கள் வன்னிப்படை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் இராணுவ அதிகாரிகள் மத்தியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி முக்கியமானதுடன் யாரும் புறக்கணிக்கத்தக்கதுமல்ல. " இந்த நிமிடம் தொடக்கம் எமது முன்னேற்றம் மிக்க அவதானமாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் கூடிய அக்கறையும் கொண்டதாகவும் அமையவேண்டும். அவர்களுக்கு மிகவும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியதே நமது முன்னுள்ள முக்கிய பொறுப்பாகும்'' இவ்வாறு சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

பொதுமக்களுடன் கலந்து செயற்படும் விடுதலைப்புலிகள் எதற்கும் எதனைச் செய்யவும் தயாராகவுள்ளனர். மிக விரக்தியடைந்த நிலையிலுள்ள அவர்கள் இராணுவத்தினரைத் தூண்டக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்குத் தயங்கமாட்டார்கள். ஏதோ ஓர் அரசியல் கட்சியின் எவரையேனும் திருப்திப்படுத்துவதற்காக யுத்தத்தை விரைவில் முடிக்க முடியாது. ஒவ்வொருவரும் மிக்க அவதானமாகச் செயற்பட வேண்டிய கட்டம் இதுவாகும்.

நான் மிக்க பயத்துடனும் அவதானத்துடனும் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்வது யாதெனில், விடுதலைப்புலிகள் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும் வகையில் " ஜாலியன் வாலா பாக்'' இல் நடந்த சம்பவம் போன்ற ஒன்றை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் எனபதேயாகும். அவ்வாறு செய்தால் அத்தகைய ஒரு சம்பவத்தை வைத்து சர்வதேச சமூகத்தையும் உலகளாவி வாழும் தமிழர்களையும் தூண்டிவிட ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கியதாக முடிந்துவிடும். மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்களை தமது தேவைக்காகத் தடுத்து வைத்து பட்டினிபோடும் ஒரு குழு தமது அபிலாஷைகளை நிறைவேற்ற எதனையும் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். "ஜாலியன் வாலா பாக்'' சம்பவத்தில்தான் 10 நிமிடங்களில் 1550 துப்பாக்கி ரவைகளை உபயோகித்துக் கதறக் கதற 1516 இந்திய மக்களை பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் சுட்டுத்தள்ளியும் காயப்படுத்தியும் இருந்தனர்.

இந்தச் சம்பவமானது பிரித்தானியரின் இந்திய ஆட்சி வரலாற்றில் ஒரு பெரும் கரும் புள்ளியாகவும் இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு திருப்பு முனையாகவும் அமைந்தது. இவ்வாறான ஒரு சம்பவம் எமது நாட்டில் நடக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. அப்படி ஏதும் நடந்து விடக்கூடாதென்பதே எனது பிரார்த்தனையாகும். ஒரு சிறிய சம்பவம்கூட அழிந்து போய்க் கொண்டிருக்கும் ஓர் இயக்கத்துக்குப் புது வாழ்வளிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ஒரு லட்சத்து ஐயாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த நான்கு லட்சத்து இருபதினாயிரம் மக்கள் வாழ்கின்றனர். விடுதலைப்புலிகள் எதனையும் மிகைப்படுத்திக் கூறுபவர்கள் என்பதால் அந்த எண்ணிக்கையில் எழுபத்தைந்து வீதத்தை மட்டும் எடுத்துக் கொண்டாலும் அங்கு 3 லட்சத்துக்கு மேற்ப்பட்டவர்கள் வாழவேண்டும். மன்னார், வவுனியாவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இத்தொகை மேலும் அதிகரிக்கும். இவற்றில் சுமார் நாற்பதினாயிரம் மக்களே வவுனியா வந்துள்ளனர். ஏற்கனவே வெளியேறியவர்ளையும் சேர்த்துக் கணித்தால் 3 லட்சத்து 30 ஆயிரம் மக்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளனரென்பது சரியாக இருக்கலாம்.

மூன்று லட்சத்து முப்பதாயிரம் மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்கள் ஏறக்குறைய ஐந்து ஆயிரம் தொன் ஆகும். அங்கே வாழும் அனேக மக்கள் மிகப்பட்டினியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.
உண்மையில்அங்கு உணவு, மருந்து பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அதை நிறைவேற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த கால் நூற்றாண்டு காலமாக விடுதலைப்புலிகளுக்கு உணவளித்து வந்தது அரசாங்கமே. அங்கே உள்ள மக்களை அரசாங்கமே காப்பாற்ற வேண்டுமென்பதால் அங்குள்ள மக்களின் தேவைக்கேற்ப அவர்கள் விடுவிக்கப்படும் வரை போதியளவு உணவு மற்றும் மருந்து வகைகள் அனுப்பப்பட வேண்டும்.

மிகப் பயங்கரமான நிலைமை தவிர்க்கப்படுவதற்கு இராணுவத்தினர் விமானம் மூலம் குண்டு பொழிவதனையும் ஷெல், பீரங்கி மூலம் தாக்குவதனையும் உடன் நிறுத்த வேண்டும். இப்படி ஒரு அவல நிலை ஏற்பட்டுள்ளதென்பதை ஜனாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டால் உடனடியாகத் தலையிட்டு இந்த அவல நிலையை நிறுத்த முன்வர வேண்டும்.

வீ.ஆனந்தசங்கரி
தலைவர்- தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழர் விடுதலைக் கூட்டணி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை அழித்தவர்களுக்கு வாக்குகளின் மூலம் தண்டனை வழங்குங்கள்!

இரா. துரைரத்தினம்

"தேவதைகள் கூட கால்வைக்க தயங்கும் இடத்திற்குள் சேற்றில் குளித்த எருமை ஒன்று கூத்தாடியதாக, - என்று ஒரு கதை சொல்வார்கள். இது அரசியல்களத்திற்கும் பொருத்தமானதுதான். அரசு என்பது புனிதமானது. ஆனால், அதில் கூத்தாடுபவர்களைத்தான் யார் தேவதைகள், யார் சேற்றில் குளித்தவர்கள் என்பதை இனங்காண முடியாது மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தானோ என்னவோ வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் இந்த தேர்தல் தொடர்பாக அக்கறை இன்றி இருக்கிறார்கள். இந்த அக்கறைஇன்மைகூட சிங்கள தேசத்திற்குச் சாதகமானதுதான்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர் ஒருவருடன் அங்கிருக்கின்ற நிலைமைகள் பற்றி பேசுகின்றபோது உதாரணத்திற்கு ஒன்றை சொன்னார். 'யாழ்ப்பாணத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களில் ஒருவராக அங்கஜன் என்பவர் போட்டியிடுகிறார். அவர், தானே மஹிந்தாவின் நேரடிப்பிரதிநிதி என பிரசாரம் செய்து வருகிறார். அவரது தேர்தல் பிரசாரங்களில் ஒலிக்கும் பாடல் 'நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்பதாகும்.

தமிழ் மக்களைப் படுகொலை செய்த படைகளைப் பற்றியும், அவர்கள் முள்ளிவாய்க்காலில் பெற்ற இறுதி வெற்றி பற்றியுமே மஹிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதிகளான அங்கஜன்கள் வடக்கு, கிழக்கில் கூறிவருகிறார்கள் என்பது பெரும்பாலான தமிழ் மக்களுக்கு தெரியும். இதை எல்லாம் யாரிடம் சொல்லி அழ' - என ஆதங்கப்பட்டார் அந்த யாழ்ப்பாண ஊடகவியலாளர்.

இதனால், பெரும்பாலான தமிழ் மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்கும் ஆர்வம் அற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படி வாக்களிக்காமல் இருப்பது கூட மஹிந்தவின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடப்போகிறது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து எம்.இலியாஸும், சுயேச்சைக்குழு 2இல் இருந்து கபூர் சபருல்லாவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இம்முறை கூட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் இருப்பது மிகக்கொடுமையான முறையில் தமிழ் மக்களை படுகொலை செய்த சிங்கள அரசின் பிரதிநிதிகளான டக்ளஸ், அல்லது அனோஜன் போன்றவர்களே தெரிவாவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும்.

திருகோணமலை மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டில் தமிழர்கள் 42 வீதமானவர்களே வாக்களித்திருக்கிறார்கள். முஸ்லிம்கள் 96 வீதமும், சிங்களவர்கள் 89 வீதமும் வாக்களித்திருக்கிறார்கள். இதனால், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து முகமட் மக்ருப் மற்றும் சுனில் ரணவீர ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி 34,986 வாக்குகளைப் பெற்றிருந்தது. அக்கட்சிக்கு சுமார் 8ஆயிரம் தமிழர்களின் வாக்குகளும் கிடைத்திருந்தன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து அப்துல் நஜீப்பும் தமிழர் விடுதலைக்கூட்டணி யிலிருந்து தங்கத்துரையும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தமிழர்களின் வாக்களிப்பு வீதம் குறைந்தமையும், சிங்கள பெரும்பான்மை இனக்கட்சிகளுக்கு வாக்களித்தமையினாலுமே தமிழர்களால் உரிய பிரதிநிதித்துவத்தை பெற முடியாமல் போனது.

அதேபோன்று 2000ஆம் ஆண்டு தேர்தலில் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் வாக்களிப்பு வீதம் 90வீதத்திற்கு மேல் அதிகரித்த அதேவேளை தமிழர்களின் வாக்களிப்பு வீதம் 39 வீதமாகவே இருந்திருக்கிறது. தமிழர்களின் வாக்களிப்பு வீதம் குறைவடைந்தமை, தமிழ் கட்சிகள் பிளவு பட்டிருந்தமை, சிங்கள கட்சிகளுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தமை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதியைக்கூட தமிழர்களால் பெற முடியாமல் போயிருந்தது.

வன்னி மாவட்டத்தில் 1994ஆம் ஆண்டு தேர்தலில் 25.3 வீதமானவர்களும், 2000ஆம் ஆண்டு 42

முஸ்லிம்களின் வாக்குகள் 9 ஆயிரம் மட்டுமே கிடைத்திருந்தது. மிகுதி 14 ஆயிரம் வாக்குகளும் தமிழர்களால் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், முஸ்லிம்களும், தமிழர்களும் அலிசாகிர் மௌலானாவுக்கு விருப்பு வாக்கை வழங்கியதன் காரணமாக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதேபோன்று 2000ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு படிப்பினைகளைத்தந்த தேர்தலாகும். அத்தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை அபகரித்து முஸ்லிம்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கும் சூழ்ச்சி ஒன்றை ஹிஸ்புல்லா செய்திருந்தார். அத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் மரச்சின்னத்தில் போட்டியிட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அகிலேஸ்வரன், இராசதுரை போன்றவர்களின் பெயர்களை வேட்பாளர் பட்டியலில் சேர்த்து தமிழ் வாக்குகளை பெறும் சூழ்ச்சியை செய்திருந்தார். அத்தேர்தலிலும் 70 ஆயிரம் வாக்குகளைக்கொண்ட முஸ்லிம்கள் இரு பிரதிநிதிகளையும் இரண்டு இலட்சம் வாக்காளர்களை கொண்ட தமிழ் மக்கள் தமிழ் கட்சியிலிருந்து இரு பிரதிநிதிகளையும் தான் தெரிவு செய்ய முடிந்தது. 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி 54 ஆயிரத்து448 வாக்குகளையும், தேசிய ஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்ட ஹிஸ்புல்லா தலைமையிலான அணி 53 ஆயிரத்து 646 வாக்குகளையும் பெற்றிருந்தன. ஹிஸ்புல்லா அணி அத்தேர்தலில் மேலும் 803 வாக்குகள் மேலதிகமாக பெற்றிருந்தால் தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு உறுப்பினரைத்தான் பெற்றிருப்பார்கள். ஹிஸ்புல்லா அணி இரு பிரதிநிதிகளை பெற்றிருப்பார்கள். அத்தேர்தலில் தமிழர்கள் இரண்டு லட்சத்து 10 ஆயிரம் பேர் இருந்தபோதிலும் அப்போது தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் கட்சி 54 ஆயிரத்து 448 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தது. ஹிஸ்புல்லா, அலிசாகிர் மௌலானா போன்றவர்களின் சூழ்ச்சி காரணமாகவும் தமிழர்கள் தமது வாக்குப்பலத்தை பிரயோகிக்க

கடந்த கால தேர்தல்களை எடுத்து பார்த்தால் பொதுவாக தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாகவே இருந்துள்ளது.

தேர்தலில் வாக்களிக்காமல் விடுவது அல்லது தேர்தலை பகிஷ்கரிப்பது என்பது இரண்டிற்கு மேற்பட்ட இனங்கள் வாழும் பிரதேசங்களில் ஏனைய இனங்களுக்கு சாதகமாகவே அமைந்திருக்கின்றன.

இதை கடந்த கால தேர்தல்களில் நாம் அனுபவபூர்வமாக கண்டிருக்கிறோம். வடக்கு, கிழக்கில் தமிழ் முஸ்லிம் இனங்கள் வாழ்கின்றன. இவற்றில் தமிழர்கள் வாக்களிக்காமல் அல்லது தேர்தலை பகிஷ்கரித்தால் முஸ்லிம்களும், முஸ்லிம்கள் வாக்களிக்காமல் விட்டால் தமிழர்களுமே நன்மை அடைவர். இதனை வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொண்டு தமது வாக்குப்பலத்தை முழுமையாக செலுத்தி வருகின்றனர்.

உதாரணமாக கடந்த காலத் தேர்தல்களின்போது காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேச செயலகப்பகுதிகளில் 98 வீதமானவர்கள் வாக்களித்திருக் கிறார்கள். ஆனால், மட்டக்களப்பின் நகர்பகுதியாக இருக்கும் புளியந்தீவில் 45 வீதத்திற்கு உட்பட்டவர்கள்தான் வாக்களித்திருக்கிறார்கள். 1988ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தலின் போது காத்தான்குடியில் 99 வீதமானவர்கள் வாக்களித்தார்கள். ஆனால், தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் 45 வீதத்திற்கும் 50 வீதத்திற்கும் இடைப்பட்டதாகவே காணப்படுகிறது.

வாக்களிப்பதில் அக்கறை அற்று இருப்பது அல்லது தேர்தலை பகிஷ்கரிப்பதால் கடந்த காலங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் எவ்வாறு ஏனைய இனங்களுக்கு சென்றிருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

முதலாவதாக யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம். 1994ஆம் ஆண்டு தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 2.3 வீதமானவர்களே வாக்களித்தனர். அம்மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கையின்படி முஸ்லிம் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக வரமுடியாது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பெறுவதற்கான வாக்கு அவர்களுக்கு அங்கு இல்லை. ஆனால், 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரித்ததன் விளைவாக ஸ்ரீலங்கா முஸ்லிம்

வீதமும், 2001ஆம் ஆண்டு 46 வீதமும், 2004ஆம் ஆண்டு 66 வீதமும் வாக்களித்தனர். ஆனால், முஸ்லிம்கள் வாழும் மன்னார் பகுதியிலும் சிங்களவர்கள் வாழும் வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவிலும் வாக்களிப்பு விகிதம் 90 வீதத்திற்கு மேல் காணப்படுகிறது. இதனால்தான் வன்னி மாவட்டத்தில் 1994, 2000, 2001 ஆண்டு தேர்தல்களில் முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் பிரதிநிதித்துவம் அதிகரித்து காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் வாக்களிக்காமல் இருப்பது, வாக்களிப்பவர்களில் கணிசமானவர்கள் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிப்பது போன்ற தவறுகளால் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டிருப்பதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் அரச பொருளாதார இருப்பு கேள்விக்குறியாகியிருக்கிறது.

பொதுவாகவே கிராமங்களில் உள்ளவர்களை விட நகர்புறங்களில் உள்ளவர்கள் வாக்களிப்பதில் அக்கறை அற்றவர்களாகவே உள்ளனர். அதேவேளை முஸ்லிம்கள் வாழும் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேச செயலகப்பிரிவுகளில் வாக்களிப்பு வீதம் இலங்கையின் சராசரி வாக்களிப்பு வீதத்தை விட அதிகமாகவே காணப்படுகிறது.

1994ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த வாக்களிப்பு வீதம் 72.4 வீதமாக காணப்படுகின்ற போதிலும் முஸ்லிம் பிரதேசங்களில் 93 வீதமும், தமிழ் பிரதேசங்களில் 41 வீதத்திற்கு குறைவாகவுமே உள்ளன. அத்தேர்தலில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் குறைவடைந்ததாலும், தமிழர்கள் முஸ்லிம்களுக்கு வாக்களித்ததாலும் தமிழர்களுக்கு வரவேண்டிய பிரதிநிதித்துவம் முஸ்லிம்களுக்கு சென்றது. அப்போது 2 இலட்சத்து 61 ஆயிரத்து 898 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் முஸ்லிம்களின் வாக்காளர் எண்ணிக்கை சுமார் 60 ஆயிரமாக இருந்தது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பெறுவதற்கு சுமார் 50 ஆயிரம் வாக்குகளைப்பெற வேண்டும். ஆனால் 60 ஆயிரம் வாக்குகளைக்கொண்ட முஸ்லிம்கள் இரு பிரதிநிதிகளைப் பெற்றுக்கொண்டனர். அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 23 ஆயிரத்து 244 வாக்குகளைப்பெற்று அலிசாகிர் மௌலானா தெரிவு செய்யப்பட்டிருந்தார். அன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு

வேண்டும் என்ற ஆர்வம் அற்றவராக இருப்பதன் காரணமாகவும் தமிழ் மக்களின் எதிரிகளான அலிசாகிர் மௌலானா, ஹிஸ்புல்லா போன்றவர்களுக்கு சாதகமாக அமைந்து விடுகிறது.

எப்பொழுதும் சிரித்து சிரித்து பேசி தமிழர்களின் குரல்வளைகளை நெரிக்கும் ஹிஸ்புல்லா, அலிசாகிர் மௌலானா போன்றவர்கள் இம்முறையும் தமிழர்களின் வாக்குகளை நயவஞ்சகமாக பறிப்பதில் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். அவர்கள் தமிழர்களை வைத்தே தமிழர்களை வீழ்த்துவதற்கு தயாராகி வருகிறார்கள்.

இதை முறியடிக்க வேண்டுமாக இருந்தால் தமிழர்கள் தங்களிடம் இருக்கும் வாக்குப்பலத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஒன்று தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக சரியான வழியில் வடக்கு, கிழக்கில் செயற்படக்கூடிய சரியான அரசியல் தலைமை எது என்பதை தெரிவுசெய்து அதற்கு வாக்களிக்க வேண்டும்.

இரண்டாவது, வாக்களிக்காமல் இருந்து எதிரிக்கு பலம் சேர்ப்பதை தவிர்த்துக்கொள்வது. முஸ்லிம்களும் சிங்களவர்களும் எவ்வாறு தமது வாக்குப்பலத்தை பயன்படுத்து கிறார்களோ அதேபோன்று தமிழர்களும் தமது வாக்குப்பலத்தை பயன்படுத்த வேண்டும்.

கொத்துக்கொத்தாக தமிழ் இனத்தை படுகொலை செய்த சிங்கள பேரினவாதிகளையும், இரத்தக் கரங்களைக் கொண்ட சிங்கள பேரினவாதிகளுடன் கைகோர்த்திருக் கும் டக்ளஸ், பிள்ளையான், ஆனந்தசங்கரி போன்றவர்களையும் கிழக்கில் தமிழர்களை படுகொலை செய்து தமிழர் கிராமங்களை அபகரிப்பதில் முன்னணியில் நின்று செயற்பட்ட முஸ்லிம் ஊர்காவல் படைகளுக்கு தலைமை தாங்கிய ஹிஸ்புல்லா போன்றவர்களையும் வாக்களிக்க செல்லு முன் ஒரு கணம் நினைத்து பார்க்க வேண்டும்.

நாங்கள் முள்ளிவாய்க்காலையோ செம்மணியையோ சத்துருக்கொண்டானையோ, கொக்கட்டிச்சோலையையோ, வீரமுனையையோ மறந்துவிடவில்லை. அங்கு பலிகொள்ளப்பட்ட எமது உறவுகளை மட்டுமல்ல இரத்தக் கரங்களுடன் அங்கே நிற்கும் துட்டகைமுனுக்களையும்தான். வாக்குச் சீட்டுகளில் அவர்களின் முகங்களும்தான் இருக்கின்றன.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010


## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

யாழ்.மாவட்டம்

### இலங்கை தமிழரசுக் கட்சி

உப்புக் கஞ்சியோடு உவர் மண்ணில் கிடந்தோம்
உயிர் எப்போது போகுமோ என்ற அச்சத்தில் தவித்தோம்....
தப்பேதும் செய்தோமா? நாம் தலைசாய்ந்து போவதற்கு...
இப்போது நேரம் எங்கள் பலம் என்னவென்று உலகிற்குக் காட்டுவதற்கு
வாருங்கள் மக்களே ஒன்றாய் சேர்வதற்கு...
வாக்களிப்போம் வீட்டிற்கு...!

கிளிநொச்சி வாக்காளப் பெருமக்கள்.




## சிவஞானம் சிறீதரன்

அதிபர், கிளிநொச்சி மகாவித்தியாலயம் (கனிஸ்ரா)

X 10

எமது உரிமைக்காகக் குரல் கொடுப்போம்

## இளைய தலைமுறையின் உரிமைக் குரல்



X 10



யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தம்பதியினருடன் அமர்ந்திருக்கும் ஸ்ரீகஜன்

மக்கள் அவலப்படும்போது
வெளிநாடுகளுக்கு தப்பியோடாது
அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்
ஊடகத்துறை மூலம்
சேவையாற்றியவன் ஸ்ரீகஜன்

குடாநாட்டு மக்களே வாக்குகளை வீணாக்காமல் யானைச் சின்னத்திற்கு நேரே ஒரு புள்ளடியையும் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இலக்கமான 08 மற்றும் பத்திரிகையாளர் ஸ்ரீகஜனின் இலக்கமான 10 ஆகியவற்றுக்கு மேல் புள்ளடியிட்டு இருவரையும் அமோக வெற்றி பெறச் செய்வோம் !!!

X 8



திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

தொடர்புக்கு: 0773946702

## யானைச் சின்னத்தில் யாழின் மைந்தன் - எஸ். ஸ்ரீகஜன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org